பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 72 தை 24ஆம் நாள் வியாழக்கிழமை 07 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050





### படைப்புழுவின் தாக்கத்தை தவிர்க்கும் நோக்கத்தில் விழிப்புணர்வுக் கலண்டர்கள்

யாழ்ப்பாணம், பெப். 7
படைப்புழுவின் தாக்கம் இலங்கையெங்கும் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் அது தொடர்பான விழிப்புணர்வை மேற்கொள்ளும் விதமாக 'விழிப்புணர்வுக் கலண்டர்கள்' விநியோகிக்கப்பட்டுள்ளன.
படைப்புழுவின் தாக்கத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
படைப் புழுவின் தாக்கத்தை அறிதல், கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுக் கலண்டர்கள் தற்போது அச் >> 25

## தமிழர் தாயகத்தின் கவனக் குவிவுக்குள்

# மன்னார் மனித எலும்புகளின் பகுப்பாய்வு அறிக்கை நாளை

மன்னார், பெப்ரவரி 7
மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பி கார்பன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், குறித்த மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை நாளை வெள்ளிக்கிழமை வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அகழ்வுப் பணிக்கு பொறுப்பான மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ இவ்வாறு தெரிவித்தார். >> 25



### மரத்தால் வீழ்ந்து குடும்பத் தலைவர் உயிரிழப்பு

யாழ்., பெப். 7
மரத்தால் தவறி வீழ்ந்து நபரொருவர் உயிரிழந்தார். பசுபதி செந்தில்குமரன் என்ற நபரே அவ்வாறு உயிரிழந்தவராவர். அவருக்கு வயது 43.
வீட்டின் வேலியைக் கட்டுவதற்காக மரக்கொப்புக்களைவெட்டுவதற்கு ஏறிய வேளையிலேயே அவர் வீழ்ந்து உயிரிழந்தார் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்தது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். ·(ம)

# தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு பயந்து பேச்சுகளைப் புறக்கணித்தார் மகிந்த!

### சம்பந்தன் சாட்டையடி

யாழ்ப்பாணம், பெப். 7
மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுடன் அனைத்துச் சுற்றுப் பேச்சுகளிலும் நாங்கள் உண்மை முகத்துடன் பங்குபற்றினோம். எங்களின் தீர்வுத்திட்ட யோசனைகளுக்குப் பதிலளிக்கப் பயந்தே பேச்சு மேசைக்கு வராமல் மகிந்த தரப்பினர் பின்வாங்கினர். பேச்சுக்களை நாங் >> 25

### 57 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பை உடன் வழங்குக

மகிந்த கோரிக்கை



கொழும்பு, பெப். 7
10 இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக தேர்தல் மேடைகளில் வாக்குறுதிகளை வழங்கிய கட்சி, அரச அதிகாரத்தை வகிக்கும் போது 60 ஆயிரம் பேர்வரை வேலையற்ற பட்டதாரிகள் இருப்பது பேரழிவு என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச. நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கல்வியைப் பெற்று புத்திஜீவிகள் என உறுதிப்படுத்திக் கொண்டு வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு வேலையற்றிருப்பவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்திருப்பது கவலைக்குரியது. இவ்வாறு >> 25

பலாலி

### வானூர்த்தித்தள அபிவிருத்தி பெப்ரவரி 14இல் ஆரம்பம்

ரணில் தொடக்கி வைக்கின்றார்

யாழ்ப்பாணம், பெப். 7
பலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக தரமுயர்த்துவதுடன், தமிழகத்துக்கு உடனடியாக வானூர்திச் சேவைகளை நடத்தும் வகையில் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்த நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்திப் பணிக்கான அடிக்கல்லைநட்டு >> 25

வவுனியாவில் ஞாயிறுதினங்களில்

### தனியார் வகுப்புகளுக்குத் தடை!

நேற்று அதிரடி அறிவிப்பு

வவுனியா, பெப். 7
வவுனியாவுக்கு உட்பட்ட பகுதிகளில் ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்த தடை விதித்து அதிரடி அறிவிப்பை வெளியிட்டார் வவுனியா நகர சபைத் தவிசாளர் இ.கௌதமன்.
வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானத்தை அவர் >> 25

### இரண்டு மாதங்களில் தூக்கு நடைமுறை!

மைத்திரி அறிவிப்பு

கொழும்பு, பெப். 7
எவர் எதிர்த்தாலும் இரண்டு மாத காலத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றம் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பாதாள உல >> 25


see more news in
newuthayan.com


### வடக்கு – கிழக்கில் பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோரப்படுகிறது

*போரால் பாதித்தவர்களே இலக்கு என்று ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை*

கொழும்பு, பெப். 7
போர் பாதித்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் நுண்கடன்களைப் பெற்றுள்ள பெண்களிடம், அவற்றை வசூலிக்கச் செல்வோர் பாலியல் இலஞ்சம் கோருவதாக தமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக் >> 25

கத்தோலிக்க திருச்சபையில்

# கன்னியாஸ்திரிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்

### இஸ்லாமிய தேசத்தில் வைத்து ஏற்றுக்கொண்டுள்ளார் பாப்பரசர்



அபுதாபி, பெப். 7
கத்தோலிக்க திருச்சபையில் பெண் துறவிகளான அருட்சகோதரிகளுக்கும் பாலியல் துன்புறுத்தல் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பாலியல் இச்சைகளுக்காகக் கத்தோலிக்கப் பாதிரியார்களாலும் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்ற முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ்.
இஸ்லாமிய நாடான ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பாப்பரசர் பிரான்சிஸ் தற்போது பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு நேற்றைய தினம் அவர் உரையாற்றினார். >> 25

கூட்டு அரசு அமைக்கும் தீர்மானம்·

### விவாதத்தில் கூட்டமைப்பு பங்கேற்கும் வாக்கெடுப்பில் நடுநிலமை வகிக்கும்!

யாழ்ப்பாணம், பெப். 7
கூட்டு அரசு அமைக்கும் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கும். இந்தத் தீர்மானம் மீதான விவாதம் நடைபெற்றால் கூட்டமைப்பு நடுநிலமை வகிக்கும்என்றுதெரிய >> 25

# கூட்டு அரசு அமைக்கும் தீர்மானம் இன்று விவாதத்துக்கு வருகின்றது

ஆளும் தரப்பினர் ஆதரவளிக்க கடுமையான உத்தரவு

>> 25

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# கொழும்புக்கு காலஅவகாசம் வழங்கக்கூடாது ஐ.நா. சபை

## வலியுறுத்தி விரைவில் கவனவீர்ப்பு

**யாழ்ப்பாணம், பெப் 7**

**காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் மேலும் ஒருவருட கால அவகாசத்தை இலங்கை அரசும் அதற்கு உடந்தையாக உள்ள சிலரும் இணைந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், கொழும்புக்கு அவ்வாறு அவகாசம் வழங்கக்கூடாது என்று வலியுறுத்தி விரைவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக வடக்கு - கிழக்கு வாழ் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

போராட்டம் தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால் எமக்கான தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை. இலங்கை அரசிடம் நீதி கேட்டோம் அது கிடைக்கவில்லை. அதனால் பன்னாட்டுச் சமுகத்திடம் நீதி வேண்டி கடந்த ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி முதல் போராடி வருகின்றோம். எதிர்வரும் 25ஆம் திகதி ஜெனீவா கூட்டத் தொடர் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் அரச தரப்பினரும் அரசுடன் சேர்ந்து சிலரும் மேலும் ஒரு வருட கால நீடிப்பை பெறுவதற்கு முயற்சித்து வருகின்றார்கள். அதற்கு தெரிந்தோ தெரியாமலோ ஆதரவு வழங்க வேண்டாம். ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் நாளில் மாபெரும் போராட்டமொன்றை மேற்கொண்டு எமது நிலமைகளைப் பன்னாடுகளுக்குக் கேட்கும் வகையில் பறைசாற்ற வேண்டும் - என்றனர். (ம-7)

## துப்பாக்கி, கைக்குண்டு பயன்படுத்தி இரு இடங்களில் கொள்ளை முயற்சி

கொழும்பு, பெப். 7

கடந்த 24 மணிநேரத்துக்குள் நாட்டின் இரு வேறுபட்ட இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு கொள்ளைச் சம்பவத்தில் துப்பாக்கியும், இன்னொரு சம்பவத்தில் கைக்குண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கம்பகா மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளிலேயே மேற்படி கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் கம்பகா தோம்பே கிரிதர சந்திக்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு உந்துருளியில் வருகை தந்த இனம் தெரியாத இருவரால் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரத்து 800 ரூபா பணம் சூறையாடப்பட்டுள்ளது. கொள்ளையர்கள் வான்நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பான விசாரணை களை தோம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குருநாகல் பௌத்தலோக மாவத்தைப் பகுதியில் தனியார் வங்கியில் பணிபுரிபவரிடம் கொள்ளையிட முற்பட்ட நபரொருவர் குருநாகல் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து கைக்குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-71)

## பகலில் வீடுபுகுந்து நகைகள் திருட்டு!

அளவெட்டி, பெப். 7

கூரையைப் பிரித்து வீடுபுகுந்து திருடர் சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டிப் பகுதியிலுள்ள வீட்டில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்றது. கணவன் மனைவி இருவரும் பணிநிமித்தம் வெளியே சென்று பிற்பகல் 2 மணியளவில் வீடு திரும்பியபோது திருட்டு இடம்பெற்றுள்ளதைக் கண்டனர். இது குறித்து மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (த-36)

## கொக்கரிப்பதைக் கைவிட்டு தெளிவுதரவேண்டும் மகிந்த

### வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் விளாசல்



யாழ்ப்பாணம், பெப். 7

தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவேன் என்று கொக்கரித்துக் கொண்டிருக்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, தனது தீர்வு என்ன என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும். தாம் வழங்க கூடிய தீர்வுத் திட்டம் என்ன என்பதை அவர் அப்போதும் கூறவில்லை. இப்போதும் தெளிவாகக் கூறவில்லை என்று தெரிவித்தார் வடமாகாண அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம்.

அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே குழப்பியது என முன்னாள் அரச தலைவர் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த கூட்டமைப்புத்தான் தீர்வுத் திட்டத்தைக் குழப்பியது என்று கூறுவது அரசியல் சந்தர்ப்பவாதக் கருத்தாகும். ஏனெனில் மகிந்தவுடன் கூட்டமைப்புக் குறைந்தது 18 தடவைகள் தீர்வு விடயம் தொடர்பாக பேச்சுக்களை நடத்தியது. அதில் சுமூகமான தீர்வு வழங்க மகிந்த முன்வரவில்லை. இலங்கையில் உள்நாட்டுப் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் மிகவும் அற்புதமான வாய்ப்புக்கள் இருந்தன. அன்றைய காலத்தில் மகிந்தவுக்கு அதிகாரமும் பலமும் சாதகமாக இருந்தது. அதனை பயன்படுத்தாமல் 13 பிளஸ் என்று கூறிக் கொண்டிருந்தவர் தற்போது 13 மைனஸில் பேசிக் கொண்டிருக்கிறார்.

அரசியல் தீர்வு தொடர்பில் மகிந்தவின் நிலைப்பாடு இப்படித்தான் உள்ளது. இவ்வாறான நிலையில் தீர்வு கிடைக்காமைக்கு கூட்டமைப்புத்தான் முழுப் பொறு ப்பு என்று கூறுவது பொருத்தமற்றது. அவரால் வழங்கக்கூடிய தீர்வு என்ன என்பதை தெளிவாக அதிகாரத்தில் இருந்த போதும் கூறவில்லை தற்போதும் கூறவில்லை. தற்போது கூட தெளிவாகக் கூறுவாரா யின் அதனைக் கூட்டமைப்பு பரிசீலிக்கும் - என்றார். (ம-8)

## 8 லட்சம் பேருக்கு புதிதாக சமூர்த்தி

### இன்னொரு அறிவிப்பு

கொழும்பு, பெப். 7

நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள, 8 இலட்சம் பேருக்கு, எதிர்வரும் 6 மாதங்களுக்குள் புதிதாக சமூர்த்தி நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் சமூர்த்தி பயனாளிகளாக 10 லட்சத்து 85 ஆயிரத்து 516 பேர் உள்ளனர். குறித்த பயனாளிகளில் 5 லட்சம் பேருக்கு தனியாக வாழ்க்கை நடத்தக் கூடிய வலுவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக இதுபோன்ற அறிக்கைகள் விடுக்கப்படுகின்ற போதிலும் இன்னமும் உரிய உதவிகள் வழங்கப்படவில்லை. (ம)


## ரூபவாகினிக் கூட்டுத்தாபன பணியாளர்கள் கவனவீர்ப்பு

கொழும்பு, பெப். 7

அரச ஊடகமான ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவரின் அலுவலகங்களை பணியாளர்கள் நேற்று முற்றுகை யிட்டுச் சில மணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சமீபத்தில் இடம்பெற்ற இடமாற்றங்கள் குறித்து உயர் அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பணியாளர்கள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவரின் அலுவலகங்களை முற்றுகையிட்டுள்ளனர். எனினும் உயர் அதிகாரிகள் எவரும் எங்களுக்கு உரிய பதிலை வழங்கவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் தெரிவித்தார். (ம)

## சுகாதாரப் பயன்பாடு தொடர்பான பன்னாட்டு மாநாடு பல்கலையில்






யாழ்ப்பாணம், பெப். 7

தூய சக்தி மற்றும் சுகாதாரப் பயன்பாடு தொடர்பான பன்னாட்டு மாநாடு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நேற்று ஆரம்பமானது.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நோர்வே பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்குக் கிடைத்த நிதியுதவியுடன் இரண்டு நாடுகளுக்கு இடையேயான கூட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**நேற்றைய ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பேராசிரியர்கள்.** மாணவர்கள் மற்றும் நோர்வே நாட்டு பல்கலைக் கழக பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் 184 ஆய்வுக் கட்டுரைகள், 140 ஆய்வுச் சுருக்கங்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டு **விளக்கவுரைகள் இடம்பெறவுள்ளன.** (ம-7)



## காலி முகத்திடலில் நடந்த சுதந்திர நாள் நிகழ்வில் வடக்கு மாணவர்கள்

யாழ்ப்பாணம்,பெப் 7
இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினத்தில் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களும் இம்முறை கலந்து கொண்டனர்.
அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன தலைமையில் காலிமுகத்திடலில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் அழைப்பின் பெயரில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் வழிகாட்டலில் வடக்கு பகுதி பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.
இதில் மாணவர்களுடன் கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன்,அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ஐ-7)

ஒருங்கிணைப்புக்குழு

# இணைத் தலைமையிலிருந்து சுதந்திரக் கட்சியினர் நீக்கம்

**யாழ்ப்பாணம், பெப். 7**
**வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இதுவரை காலமும் இணைத் தலைமைப் பதவிகளிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அந்தப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக, மாவட்டச் செயலர்களுக்கு அரச தலைவர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

கூட்டு அரசின் காலத்தில் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இணைத் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்கள்.
கூட்டு அரசு முறிவடைந்த பின்னர், வடக்கில் எந்தவொரு மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறவில்லை. சில மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒரு வருடத்துக்கு மேலாக நடத்தப்படாமல் உள்ளன.
இந்த நிலையில், அரச தலைவர் செயலகத்தால் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைமைகள் தொடர்பான விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் இணைத் தலைமை பதவியை வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் காதர் மஸ்தான் இருவருமே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர். (ஒ.5,105,ரி3)

விசமிகளால்

## மாவீரர் துயிலும் இல்ல மின்விளக்குகள் சேதம்



கிளிநொச்சி, பெப். 7
கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்குகளைச் சேதப்படுத்தி அதிலுள்ள மின்கலங்களை விசமிகள் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அதிகளவான மாவீரர்களது வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன. மாவீரர் துயிலும் இல்லம் தமிழ் மக்களால் புனிதமான இடமாக நோக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு வருகின்றது. தற்போது கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவுகளால் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலத்துடன் கூடிய மின்விளக்குகளே விசமிகளால் சேதமாக்கப்பட்டு அதிலுள்ள மின்கலங்கள் திருடப்பட்டுள்ளன. (ஒ.5)

பன்னாட்டு தொழுநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்தனர். தொழு நோய் தொடர்பான துண்டறிக்கைகள் மக்களுக்கு வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். (ஜ-21)





## வவுனியாவில் 84 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி !

வவுனியா,பெப்.7
வவுனியாவில் கடந்த இரு தினங்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவிவருவதுடன், தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ள நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் நேற்றுகாலை வரையான 48 மணிநேரத்தில் 83.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலைய பொறுப்பதிகாரி ரி.சதானந்தன் தெரிவித்தார்.
அதேவேளை, மழைவீழ்ச்சி தொடர்வதற்கான வாய்ப்புக்கள் மிக குறைவாக உள்ளன என்றும் தெரிவித்தார். (ஐ-110)

## கூட்டமைப்பு ஊடாக தமிழர்களை ரணில் அரசு ஏமாற்றி வருகின்றது

சாடுகிறார் கஜேந்திரகுமார்




யாழ்ப்பாணம், பெப். 7
இலங்கை அரசு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஊடாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றது. தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நுளம்புவலைகளை வழங்கும்நிகழ்வு நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும். அது ஒற்றையாட்சி அரசமைப்பு. அதனை நாம் ஏற்க முடியாது. கிராமஎழுச்சித் திட்டத்தின் ஊடாக தமிழ் மக்களின் அபிவிருத்தியில் அக்கறை கொள்வது போன்று ரணில் அரசு பாசாங்கு செய்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது.
தமிழ் மக்களின் வேணவாக்களைப் பூர்த்தி செய்கின்ற எந்தத் தீர்வையும் தராத அரசமைப்பை தமிழர்களையே ஏற்க வைத்து, பன்னாட்டுச் சமூகத்துக்கும், ஐ.நாவுக்கும் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றியதாகக் காண்பிப்பதற்கு அரசு முற்படுகின்றது - என்றார். (ஒ.5,160)

## உரிய சிகிச்சை பெற்றால் தொழு நோய் குணமாகும்

*அது தொடர்பான விழிப்புணர்வை பெற்றுக் கொள்ள அறிவுறுத்து*

கொழும்பு, பெப். 7
தொழுநோயாளர்களற்ற 2020 ஆம் ஆண்டை உருவாக்குவதே எமது நோக்கம். தொழுநோயாளர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. உரிய சிகிச்சை மூலமாக அதைக் குணப்படுத்த முடியும் என்று தொழுநோய் பற்றிய மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
தொழுநோய் சம்பந்தமான சிறப்பு மருத்துவ நிபுணர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலான ஊடக சந்திப்பு கொழும்பு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
தொழுநோய் தொடர்பில் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கும் அச்சத்தை ஒழிப்பதற்கும், தொழு நோயாளர்களைச் சமூகத்தில் வேறுபடுத்திப் பார்ப்பதைத் தடுப்பதற்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொழு நோய் பற்றி பல கருத்துக்களை முன்வைத்தனர்.
தொழுநோய்க்கு (குஷ்ட நோய்)ஆரம்ப கட்டத்தில் உரிய சிகிச்சை முறைகள் காணப்படாவிட்டாலும், தற்போது அந்த நோய்க்கான சிகிச்சை விதிமுறைகள் மற்றும் காரணமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் இதற்கான சிகிச்சையை உரிய முறையில் பெறுவதின் மூலமாக முழுமையாகக் குணமடைய முடியும். இலங்கையில் ஆரம்ப காலக் கட்டங்களைவிட தற்போது தொழு நோயாளர்களின் அளவு குறைந்து கொண்டு வருகின்றபோதிலும் அது தொடர்பில் இன்னும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அரிது என்றே கூற வேண்டும். அதனாலும் தொழுநோயாளர்களை அறிந்துக்கொள்வதில் கால தாமதம் ஏற்படுகின்றது. இந்த நோயின் அறிகுறிகள் நீரிழிவு நோயுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் இவர்களைச் சோதனைக்கு உட்படுத்துவதன் மூலமாக தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களா என்று அறிந்துக்கொள்ள முடியும். உடனடியாக மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதன் மூலமாக நோயாளர்கள் முழுமையாகக் குணமடைய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-31)

யாழ் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மகா கும்பாபிஷேகம் 2019.02.11

இன்று (07.02.2019) வியாழக்கிழமை காலை 9.00 முதல் விநாயகர் வழிபாடு, கோவாசம், கங்கா தீர்த்தம், சூர்யாக்கினி, பிரசாதம் வழங்கல், மாலை 5.00 மணிமுதல் நவக்கிரக ஹோமம், கேளறு பதிகம் பாராயணம், யந்திர பூஜை, பிரசாதம் வழங்கல்.
லலிதா ஜுவல்லறி

தங்கப்பவுண் வியாபாரம்
இல.L 75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2863 / 077 6183 302

# வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர் சிலர் மாயம்!

## வலைவீசித் தேடும் நிலை

கொழும்பு, பெப். 7

தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்கள் சிலர் அங்கு நீண்டகாலமாகத் தொடர்பற்று உள்ளனர். அவர்களின் விவரங்களை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது. அத்துடன் அவர்களை வலைவீசித் தேடியும் வருகிறது. யாழ்ப்பாணம், பேருவளை, அம்பாறை, நுவரெலியா, கடவத்தை, பூண்டுலோய, யக்கல, மாத்தளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பத்துப் பேர் அவ்வாறு இலங்கை அரசுடன் தொடர்பற்று உள்ளனர். அவர்களின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.திசோத்மனும் ஒருவர். (ம)




# மைத்திரி, கோத்தபாய படுகொலைச் சதியின் சூழ்ச்சி வெளிவருமாம்

கொழும்பு, பெப். 7

என்னையும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சிகள் தொடர்பான முழுமையான தகவல்கள் இரு வாரங்களில் அம்பலமாகும் என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

நாடாளுமன்றத்தில் நேற்றுப், புதன்கிழமை இடம்பெற்ற குற்றவாளிகளை ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னிடமே பாதுகாப்பு அமைச்சு இருப்பதனால் என்னையும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சிகள் தொடர்பாக என்னிடமே கேட்டறிந்து கொள்ளுமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் இங்கு குறிப்பிட்டார்.

இந்தப் படுகொலைச் சூழ்ச்சிகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முறையாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர்தான் என்னிடம் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். இப்படுகொலை சூழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் இன்னும் இரு வாரங்களில் அம்பலமாகும். அப்போது நாட்டு மக்கள் பல விடயங்களை அறிந்து கொள்ளமுடியும் - என்றார். (ம-22)

# புது. தேவிபுரம் பகுதியில் வர்த்தகர் மீது தாக்குதல்

## புதுக்குடியிருப்பு பொலிஸில் இவ்வாறு முறைப்பாடு

முல்லைத்தீவு, பெப். 7

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3 பிள்ளைகளின் தந்தையான குறித்த நபரின் கடைக்குள் கடந்த 3ஆம் திகதி இரவு 10 மணியளவில் புகுந்த ஆறு பேரைக் கொண்ட கும்பல் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றனஎன்றுபொலிஸார்மேலும் தெரிவித்தனர். (ம-246)

# குப்பைகள் அகற்றும் பணிக்காக சபைகளுக்கு புதிய வாகனங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 8 உள்ளூராட்சி மன்றங்களின் குப்பை அகற்றும் பணிகளுக்காக கொம்பக் வாகனங்கள் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக இன்று வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சிமன்றங்களில் இருந்தே குறித்த திட்டத்தின் ஊடாகத் தேர்வு செய்யப்பட 8 உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு அகற்றல் செயற்பாட்டுக்காக தலா ஒவ்வொரு வாகனம் மூலம் அவ்வாறு வழங்கப்படுகின்றன. (ம-105)

## போதைப் பொருள் விற்பனை தொடர்பாக தகவல் வழங்கிய

# பாடசாலை மாணவனுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு

## தாக்கப்பட்ட பின்னர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 7

**கிளிநொச்சியில் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் தகவல் வழங்கிய மாணவனுக்கு பொலிஸ் பாதுகாப்பு அடுத்த சில வாரங்களில் வழங்கப்படும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ன தெரிவித்தார்.**

போதைப் பொருள் விற்பனை தொடர்பில் குறித்த மாணவன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார். இதையடுத்து மர்மக் கும்பலொன்று அவரைத் தாக்கியது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழு, மாணவனுக்கு பாதுகாப்பை வழங்கத் தவறிய பொலிஸாரைக் கடுமையாகக் கண்டித்தது. இந்த விவகாரத்தில் தொடர்ந்தும் தாம் அவதானமாக இருப்போம் என்றும் எச்சரித்தது. மாணவனுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்க்கப்பட வேண்டும் என்று இன்னும் பல தரப்புக்களிடம் இருந்தும் அழுத்தங்கள் குவிந்தன. இதையடுத்து குறித்த மாணவனுக்கு அடுத்த சில வாரங்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி குறித்த பாடசாலை மாணவன் கல்வி கற்கும் கோணாவில் பாடசாலைக்கு அடுத்த சில வாரங்களுக்கு பாடசாலை ஆரம்பிக்கும் போதும் நிறைவடையும்போதும் உரிய பாதுகாப்பு வழங்கப்படும். அத்துடன் மாணவனின் பாதுகாப்புக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ன மேலும் தெரிவித்தார்.

குறித்த மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினார் என்று வடமாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் ரோசாந்த் பெர்னாண்டோவுக்கு எதிராக வடக்கு மாகாண முன்னாள் எதிர்கட்சித் தலைவர் தவராசாவால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் வடமாகாண ஆளுநரிடம் நேற்று முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள தவறியுள்ள பொலிஸார் இவ்வாறு தாக்குதல் சம்பவத்தை மூடி மறைக்கும் செய்பாட்டினை செய்யக்கூடாது என்று தெரிவித்து, குறித்த சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியே தவராசா தனது முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார். (ம-8,214)


# போதைக்கு அடிமையானவர்களை மறுவாழ்வளிக்க நடவடிக்கைகள்!

கொழும்பு, பெப். 7

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான தேசிய அதிகார சபையை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்துக்கே இவ்வாறு அனுமதி கிடைத்துள்ளது.

அத்துடன், போதைப்பொருளை அடையாளங்காணும் நவீன உபகரணங்களை இறக்குமதி செய்து பயன்படுத்துவது தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. போதைப்பொருளற்ற நாடு, போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு இணையாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஊழல் ஒழிப்புக்கான தேசிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இதனடிப்படையில், 2019ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டுக்குள் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ம)

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் இஸ்லாமின் தாயகம் என்று அழைக்கப்படும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு கடந்த மூன்றாம் திகதியில் இருந்து நேற்று வரை சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவரது பயணம் தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது.



# கண்காட்சி

காரைநகர், பெப். 7

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை, மனைப் பொருளியல் கண்காட்சி இன்று இடம்பெறவுள்ளது. காரைநகர் பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் காலை 10 மணிமுதல் இந்தக் கண்காட்சி இடம்பெற உள்ளது. (ம-250)

## ஏ.ரி.எம்களுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டம் குறித்து உடன் முறையிடவும்

கொழும்பு, பெப். 7

பணம் மீளப்பெறும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களுக்கு அருகில் பொருத்தப்பட்டிருக்கும் பாதுகாப்புக் கமராவுக்கு பதிவாகாத வகையில், முகத்தை மறைத்த வண்ணம் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் குறித்து, அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களை உடனடியாக முறையிடுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர அறிவித்துள்ளார்.

ஏ.ரி.எம். கடனட்டைத் தரவுகளைச் சேகரித்து, போலி அட்டைகளைத் தயாரித்து பணம் மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்கள் மூவர் குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடனட்டை பொருத்தியிருக்கும் இடங்களில் சில உபகரணங்களைப் பொருத்தி அதன் மூலம் கடனட்டைகளின் தகவல்களைச் சேகரித்து அதனை தமது அலைபேசிகளில் தரவேற்றிக்கொண்டு, அதனைப் பயன்படுத்தி போலி கடனட்டைகள் தயாரித்து பணக் கொள்ளையில் ஈடுபட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய ஜனவரி மாதம் 20ஆம் திகதி கோட்டை செத்தம் வீதியில் வைத்து சீன நாட்டு குடிமகன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். 21ஆம் திகதி வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து மற்றொரு சீனக் குடிமகனும், பெப்ரவரி 3ஆம் திகதி பாணந்துறை பிரதேசத்தில் வைத்து ருமேனியா நாட்டுக் குடிமகனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 200 போலி கடனட்டைகள், 12 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம், தகவல்களைச் சேமிக்கும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் சீன நாட்டைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் நேற்றையதினம் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து இவர்களை 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. ருமேனியக் குடிமகன் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ம)

## தமிழ்ப்பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப் 7

வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவுடன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் வெவ்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பாண விபரங்களை வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினர் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவிப்பார்கள் என்றும், இந்த ஆண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்கள் சீருடையில் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுப் பயன் பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் வளவாளர்களாக யாழ்ப்பாணம், பேராதனை, கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## ஒன்றுகூடலும் நினைவு நாளும்

அளவெட்டி, பெப்.7

யாழ்ப்பாணம் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்தும் ஒன்றுகூடலும் நினைவு நாளும் சங்கமண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலை வர் சோ.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-63)

# 1,000 ரூபா வழங்கக் கோரி வவுனியாவில் துண்டறிக்கை

வவுனியா, பெப். 7

**தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கக் கோரியும், அதற்கான போராட்டத்தில் மக்களை ஒன்றிணையக் கோரி வலியுறுத்தியும் வவுனியாவில் துண்டறிக்கைகள் நேற்று பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. '1000ரூபா இயக்க அமைப்பு' இவற்றை வெளியிட்டது.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்துக்குப் பெருந்தோட்டத்துறைத் தொழிற்சங்கங்கள் வழமைபோன்று மீண்டும் துரோகமிழைத்துள்ளன.

உளுத்துப் போன தொழிற்சங்கங்கள் தோட்டத்துறைமாரை திருப்திப்படுத்துவதற்காகத் தொழிற்சங்கத் துரைமார்கள் செய்துள்ள மிகத் தெளிவான வெட்கக்கேடான துரோகம் இது.



தேசிய பொருளாதாரத்துக்குப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வழங்கும் பங்களிப்பை இவர்கள் கருத்திற் கூட எடுக்கவில்லை. இந்த அசிங்கமான அரசியலுக்கு நாம் முடிவுகட்டவேண்டும்.

வெற்றியைஎட்டும்வரை நாளாந்தம் போராட்டம் இடம்பெறவேண்டும் என்று '1000ரூபா இயக்கம்' உறுதிமொழி ஏற்றிருக்கின்றது.

சம்பள உயர்வுக்கும் அப்பால் மதிப்பார்ந்த வாழ்வுக்கான எமது நிலங்களுக்காக, சுகாதாரத்துக்காக, வீடுகளுக்காக, கல்வி உரிமைக்காக, ஏனைய உரிமைகளுக்காக விரிவடையப் போகும் எமது போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள் - என்றுள்ளது. (த)





## சேவை நயப்பு நிகழ்வு

கொடிகாமம், பெப் 7

கொடிகாமம் ஜே/329 உசன் கிராம அலுவலர் பிரிவில் ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அலுவலர்களுக்கான சேவை நயப்பு நிகழ்வு உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சமூக மட்ட அமைப்புக்களின் அனுசரணையில் மருத்துவ கலாநிதி ஐ.ஜெபநாமகணேசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி செ.சுசீலாவதி, இடமாற்றம் பெற்றுச் சென்ற சமுர்த்தி அலுவலர்களான திருமதி ஜெயக்குமார் ஜெயகௌரி, திருமதி மயூரன் இந்திரவதனி, பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் திருமதி கமலதாசன் சிவமதி, கிராம அலுவலர் செல்வி தர்மினி நாகராசா ஆகியோருடன் மக்கள் சேவைக்காக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.செல்வரூபன் மற்றும் சமூக சேவைக்காக ஓய்வு பெற்ற மருத்துவ பரமநாதன் வேலுப்பிள்ளை ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)

## சேவை நயப்பும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்.பெப்.7

வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் சைவப்புலவர் சுவாமிநாதப்பிள்ளை தேவமனோகரனின் சேவைநலன் பாராட்டு விழாவும் "தேவதீபனம்" நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன.

இணுவில் மத்திய கல்லூரியில் நாளைமறுதினம் பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவருமான க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையுடன் விநாயக பெருமான் திருவீதி வலம் வருவார் என்று ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்தார். (ஐ)

# மள,மளவென அதிகரிக்கும் அறுவடை இயந்திரக் கூலி!

## *விழிபிதுங்கி நிற்கும் தென்மராட்சி விவசாயிகள்*

தென்மராட்சி, பெப்.7

தற்போது காலபோகச் செய்கை அறுவடை நடைபெறும்நிலையில் அறுவடை இயந்திரக் கூலி அதிக அளவில் அறவிடப்படுகின்றது என்றும், இடத்துக்கு இடம் மாறுபடுகின்றது என்றும் தென்மராட்சி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இயற்கை இடர்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அதிக அறவீடு தம்மைப் பெரிதும் பாதிக்கின்றது என்று கூறும் விவசாயிகள், இது பனையால்விழுந்தவனைமாடேறி மிதித்த கதையாக உள்ளது என்றும் கூறுகின்றனர்.

தென்மராட்சி தெற்கில் நெல் அறுவடை இயந்திரத்துக்கு பரப்பொன்றுக்கு 350 ரூபா வீதம், ஏக்கருக்கு 8 ஆயிரத்து 400 ரூபா அறவிடுகின்றது. பூநகரியில் பரப்பொன்றுக்கு 250 ரூபா வீதம் ஏக்கருக்கு 6 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது.

தென்மராட்சி தெற்கில் ஆரம்பத்தில் 250 ரூபா முதல் 300 ரூபா வரை பரப்பொன்றுக்கு அறவிடப்பட்டபோதும் தற்போது அது 350 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

அறுவடைக் கூலி அதிக அளவில் அறவிடப்படுவதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் என்று தெரிவிக்கும் விவசாயிகள், அதிகாரிகள் இது தொடர்பாக ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை ஈரத் தன்மையுள்ள நெல் மூடை ஒன்று ஆயிரத்து 900 ரூபாவாகவும், காய்ந்த நெல் மூடை ஒன்றும் 2 ஆயிரத்து 200 ரூபாவாகவுமே விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# எமது பண்பாட்டைக் காப்பது எமது கைகளிலேயே உள்ளது

## உழைக்கும் மகளிர் அமைப்பின் தலைவி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.7

ஒரு இனத்தின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் அந்த இனமே கைவிட்டாலே தவிர வேறு எந்த சக்தியாலும் அதை அசைக்க முடியாது. தமிழ் மக்களை அழிப்பதற்காகவே போதைப் பொருள்கள் இங்குகொண்டு வரப்படுகின்றன.

இவ்வாறு உழைக்கும் மகளிர் அமைப்பின் தலைவி மிதிலா ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

உழைக்கும் மகளிர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட தைத் திருநாள் கொண்டாட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது அமைப்பின் நோக்கம் பெண்கள் அனைவரும் தமது சொந்த உழைப்பில் வாழ வழி செய்ய வேண்டும் என்பதே. உழைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் ஊதியம் பெற்று உழைப்பவர்கள், ஊதியம் இன்றி உழைப்பவர்கள் என்று இரண்டாகப் பார்க்கப்படுகின்றனர். ஊதியம் பெற்று உழைப்பவர்களின் உழைப்பு நாட்டின் மொத்த உற்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. ஆனால் எமது கலாசாரம் ஊதியம் இன்றி உழைப்பதையே ஊக்குவிக்கின்றது. ஆண்டாண்டு காலம் ஆண்களின் உழைப்பில் தங்கி வாழ்பவர்களாக நாம் வாழ்ந்துள்ளோம்.

தந்தை, சகோதரன், கணவன், மகன் என அவர்களின் உழைப்பிலேயே தங்கி வாழ்ந்துள்ளோம். இனியாவது நாங்கள் உழைப்பதன் மூலம் அவர்களைச் சுதந்திரமாக வாழ விடவேண்டும்.

பணப் பிரச்சினை, நுண்கடன் பிரச்சினை என மக்கள் தங்களது வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். உழைப்பதைக் காட்டிலும், உழைப்பில் கிடைக்கும் பணத்தைச் சிறந்த முறையில் கையாள்வதற்குக் கற்றுக் கொள்வதும் ஒரு கலையாகும். இந்தக் கலை எங்கும் கற்றுத் தரப்படுவதில்லை., நாம் தான் கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடத்தின் தை மாதமும் நாம் அந்த வருடத்துக்கான இலக்கைத் தீர்மானிக்க வேண்டும். சேமிப்புக்கான வருடம், வீடுகட்டுவதற்கான வருடம், கடன் கொடுப்பதற்கான வருடம், பணம் கொடுப்பதற்கான வருடம் என ·அந்த இலக்குக்காக உழைத்தால் எமக்கு வெற்றி நிச்சயம். பணத்துக்காக நாம் இந்த உலகுக்கு வரவில்லை. அதன் பின்னால் ஓடாமல் எமது நோக்கத்தைக் கண்டுபிடியுங்கள். யாழ்ப்பாணத்தில் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. தமிழ் மக்களை அழிப்பதற்காகவே இதைக் கொண்டு வருகின்றனர் என்று பலரும் கூறுகின்றனர் ஒரு இனத்தின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் அந்த இனமே கைவிட்டால் மட்டுமே அழிக்க முடியும். வேறு எந்த சக்தியாலும் அதை அசைக்க முடியாது- என்றார். (ஒ-21)

# கலை அமைப்புக்களை உடன் பதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.7

வடக்கு மாகாணத்தில் உள்ள கலை மற்றும் பண்பாடுகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள், நிறுவனங்கள் மார்ச் மாதத்துக்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தின் கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்பினை வழங்குவதுடன் தரமான கலைஞர்களை உருவாக்குவதும் அதனூடாக சிறந்த தரமான கலைப் படைப்புக்களைப் பெற்றுக் கொள்வதனூடாக ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் செயற் பாட்டில் பல்வேறு கலை சார் மன்றங்கள், அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகம் ஊடாக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இவை பற்றிய பதிவுகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். எதிர் வரும் மார்ச் மாதத்துக்குள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

புதிய மன்றத்துக்கான பதிவினை மேற்கொள்வோர் பிரதேச கலாசார அலுவலர்கள் பிரசன்னத்துடன் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு ஒருவருடத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதே போன்று கூட்ட அறிக்கை ,கணக்கு அறிக்கை, பொது கூட்ட அறிக்கை ஆகியவற்றை பிரதேச கலாசார அலுவலகரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

அதன் பின்னர் பதிவு செய்யவதற்கான விண்ணப்பத்தை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## ஒன்று கூடலும் நினைவுதினமும்

அளவெட்டி, பெப். 7

யாழ்ப்பாணம் மானிப்பாய் பனைதென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கமும் பணியாளர் நலன்புரிச்சங்கமும் இணைந்து நடத்தும் ஒன்றுகூடலும் நினைவுதினமும் சங்கமண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர்.சோ.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கத் தலைவர். இ. பிரதீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-63)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப் 7

யாழ்ப்பாணம் கீரிமலை திருவருள்மிகு மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாள்கள் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திக்தி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 9 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தம்பபூசை ,வசந்த மண்டப பூசை இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு சாயராட்சை பூசை ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து தம்பபூசை, வசந்தமண்டப பூசை இடம்பெற்று இரவு 9 மணிக்கு மாலைத்திருவிழா இடம்பெறும். (ஐ)

### ஈழத் தமிழர் விவகாரத்தில்

# இந்தியா மௌனம் கலைக்கவேண்டும்

### சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்



**கிளிநொச்சி, பெப். 7**

**இந்திய தேசம் இனியும் காலந்தாழ்த்தாது தனது மௌனத்தைக் கலைத்து, ஈழத் தமிழர்களுக்காக விரைந்து தலையிட்டு முடிவெடுக்க வேண்டும். இனியும் நாம் இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

இந்தியாவின் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ்பெர்னாண்டஸ் அவர்களுக்கான நினைவு வணக்க நிகழ்வு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயமான அறிவகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜோர்ஜ் பெர்னாண்டஸ், உரிமைகள் மறுக்கப்பட்டு விடுதலைக்காகப் போராடும் ஈழத்தமிழர்களாகிய எங்களின் போராட்ட நியாயப்பாடுகளைப் புரிந்துகொண்டு தன்னாலான செயற்பாடுகளை முன்னெடுத்த ஒரு நல்ல மனிதர். அவரது இழப்பு ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமக்கும் உரிமைகள் உண்டு நாங்களும் இந்த மண்ணிலே பூர்வீகமாக வாழுகின்ற ஓர் இனம் எமது உரிமைகள் மறுக்கப்பட்டு நாம் அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாகத்தான் நாம் எமது உரிமைகளை வலியுறுத்தி எமது விடுதலைக்காகப் போராடுகின்றோம் என்பதை ஏற்றுக்கொண்ட ஒரு நல்லுள்ளங்கொண்ட இவர் போன்ற பலர் இந்திய தேசத்தில் இருந்து எமக்காகக் குரல் கொடுத்தார்கள், இப்போதும் உள்ளார்கள்.

எமது மண்ணில் தமிழர்களாகிய நாம் எமது தனித்துவத்துடன் இறைமையோடும் சுயமதிப்போடும் வாழ்ந்தோம். அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் எமது மண்ணை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பாளர்களின் கைகளில் எமது நிலத்தை ஒப்படைத்து எம்மை அடக்குமுறைக்குள் தள்ளிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்த விடயத்தில் எமது பூர்வீக வரலாற்று உண்மைகள் தெரிந்த எமது அண்டை நாடான இந்தியா ஈழத் தமிழர்களாகிய எமது விடயத்தில் தொடர்ந்தும் மௌனங்காத்து ஒதுங்கிவிட முடியாது. இந்திய தேசத்தை நாம் நம்புகின்றோம்.

தமிழர்களாகிய எமது விடுதலைப் போராட்டத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அடக்குமுறைகளுக்கு எதிராக முன்னெடுத்த போது இந்திய தேசத்து உறவுகள் பலர் எமது போராட்டத்துக்கு உதவியுள்ளார்கள். எமது போராட்டம் எமது விடுதலைக்கான போராட்டம் என்பதை அவர்களுக்கு நன்கு தெரியம்.

ஈழத் தமிழர்களாகிய நாம் இப்போது ஒரு அபாயகரமான சூழலுக்குள் வாழ்கின்றோம். இந்த நிலையைக் கருத்திற்கொண்டு எமது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாமும் இந்தமண்ணிலே சுதந்திரமாக சுயமதிப்புடன் வாழ்வதற்கு இந்தியா விரைந்து செயற்பட வேண்டும் என்றார். (ஒ.5)

## போதைப் பாவனையை ஒழிக்க அனைவருமே கரங்கோருங்கள்

### அங்கஜன் எம்.பி. வலியுறுத்துகிறார்



கொடிகாமம், பெப். 7

எமது சமுதாயத்தையும் நாட்டையும் அழிவுப் பாதையிலிருந்து மீட்டெடுத்து போதையற்ற நாட்டை உருவாக்க எதிர்கால இளைஞர்களின் இலட்சியப் பயணத்துக்கு உறுதுணையாகக் கைகோர்க்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற போதை ஒழிக்கும் விழிப்புணர்வு நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பகுதிகளில் இடம்பெறும் ஒவ்வொரு அசம்பாவிதங்களும் எமது கலாசார சீரழிவுக்கே பங்கம் ஏற்படுத்துகின்றன. அண்மைய காலங்களில் பெருந்தொகையான போதைப் பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதிகளவு போதைப் பொருள்கள் வடக்குக்கு எடுத்துவரப்படுகின்றமை எங்களுடைய சமுதாயம் அழிந்து, எதிர்காலமும் கேள்விக்குறியாகிறது. சீரழிவுகளைத் தடுக்க அவற்றை அழித்தொழிக்க நாம் அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

பயணிக்கும் நோக்கம், திசைகள் தெரியாமலேயே பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. எமது நாட்டைக் கட்டியெழுப்ப எம்மாலான முயற்சிகளை நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அங்கஜன் தெரிவித்தார்.

பல்வேறு நிறுவனங்களில் காணப்படும் ஆளணி வெற்றிடங்களுக்கு துறை சார்ந்த கற்றல் அக்கறையினமே காரணம். மாணவர்கள் அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.பொன்னான கல்வி பயிலும் காலத்தில் சிறந்த நகர்வுகளை நோக்கி நகர்ந்தாலே இளைஞர்கள் இலட்சியங்களை நோக்கி நகரலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-159)

## இலவசப் பயிற்சிக்கு விண்ணப்பம் செய்யலாம்

யாழ்ப்பாணம் பெப். 7

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான இலவச பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்,மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்வித்தகைமை ஜி.சி.ஈ சாதாரணப் பரீட்சையில் கணிதம் சீ உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது கணிதம்எஸ்,ஆங்கிலம் எஸ் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் ஜி.சி.ஈ உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

,இதேவேளை கணணி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்வித்தகைமை ஜி.சி.ஈ சாதாரன தரம் வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர்,முகவரி,பிறந்த திகதி,தேசிய அடையாள அட்டை இலக்கம்,கல்வித்தகைமைகள்,பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றை குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், இல 44 சோமசுந்தரம் வீதி,சுண்டுக்குழி,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஐ)



## ஆலயத்துக்கு அடிக்கல் நடல்

கொடிகாமம், பெப் 7

யாழ்ப்பாணம் கைதடி அருள்மிகு சிறி கௌரி அம்மன் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சிவசிறி பஞ்சலிங்கம் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வவுனியா வேப்பம் குளம் பத்திரகாளி அம்மன் சாமியம்மா, மிருசுவில் துர்க்கை அம்மன் ஆலய ஐயா , வண்ணை கலட்டி வீரகத்திபிள்ளையார் ஆலய சிவசிறி விவேகானந்தக்குருக்கள் ,இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை. மோகனதாஸ், உதவி ஆணையாளர் பொ. யோகேஸ்வரா, பிரதேச சபை உறுப்பினர், ஒய்வுபெற்ற தபால் ஊழியர் தவகுலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கலை நட்டுவைத்தனர். (ஐ-159)

## சிகிச்சை பயனின்றி குடும்பப்பெண் சாவு

ஏழாலை, பெப். 7

வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.யாழ்ப்பாணம் கே. கே.எஸ் வீதி கோண்டாவில் இ.போ.ச அலுவலகத்திக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கோண்டாவில் பகுதியில் வசிக்கும் ஈவினை புன்னாலைக்கட்டுவன்தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி. தங்கரத்தினம் (வயது 67) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த பெண் தனது வீட்டிலிருந்து மறுதெருவிலுள்ள உறவினர் வீட்டுக்கு நடந்து சென்று விட்டு வீடு திரும்புகையில் எதிரே வந்த உந்துருளி மோதியதில் தலையில் பலத்த காயமடைந்தார். எடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் .அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.பின்னர் சிகிச்சை பயனின்றி இவர் உயிரிழந்தார். (ஜ-39)

## குடமுழுக்குகள்

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் வல்வெட்டி வேவில் அருள்மிகு சிறி வீரகத்தி விக்னேஸ்வரா சுவாமி ஆலயத்தின் குடமுழுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 மணி முதல் 10.8 மணி வரையுள்ள சுபநேரத்தில்இடம்பெறும். நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (ஐ)

யாழ்ப்பாணம், பெப். 7

அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய முதலாய கோயில்களின் பிள்ளையார்,சிவன் கோயில் பஞ்சதள,பஞ்சகுண்ட இராஜகோபுர குடமுழுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாக பூசைகள், ஹோமங்கள், தீபாராதனை, ச்ர்வாஞ்சலி, கும்பம் வீதி பிரதட்சணம் என்பன இடம்பெற்று 9 மணிக்கு இரண்டு கோபுரங்களுக்கும் குடமுழுக்கு நடைபெறும் என்று என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வீடு புகுந்து வெட்டியவரை மறியலில் வைக்க உத்தரவு

சாவகச்சேரி, பெப். 7

அத்துமீறி வீடு புகுந்து குடும்பத் தலைவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி, உடைமைகளையும் அடித்து நொருக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படுபவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தென்மராட்சி தெற்கு தனங்களப்புப் பகுதி வீடொன்றினுள் அண்மையில் இடம்பெற்றிருந்தது. காயமடைந்தவரின் மனைவி சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதன்படி மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார். சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். அதன்போதே எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம், பெப் 7

யாழ்ப்பாணம் குடமியன் அ.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வரணிப் பிரதேச மருத்துவமனை மருத்துவ அதிகாரி கலாநிதி ப. அச்சுதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், மதிப்புறு விருந்தினராக குடமியன் பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் க.கஜரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-159)

## கிணற்றில் வீழ்ந்த பெண் உயிரிழப்பு

கொடிகாமம் பெப் 7

கிணற்றில் வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் உசன் மிருசுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த முருகேசப்பிள்ளை கௌரி (வயது 41) என்ற மனநலம் பாதிக்கப்பபட்ட பெண்ணே இவ்வாறுஉயிரிழந்தார்என்றுஉறவினர்கள் தெரிவித்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் தயார் தண்ணீர் கிள்ளச் சென்ற மகளைக் காணவில்லை என்று தேடிய போது கிணற்றில் வீழ்ந்து இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து தாயாரின் அழுகுரல் கேட்டு ஓடி வந்த அயலவர்கள் கிணற்றில் இருந்து குறித்த பெண்ணை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து விசாரணையை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

திடீர் சாவு விசாரணை அதிகாரி மருத்துவமனையில் விசாரணையை மேற்கொண்டு சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் கொடிகாமம் பொலிஸாருக்கு பணித்தார். (ஜ-159-9)

# யாழ். போதனா தாதியர்கள் நேற்றும் பணிப்புறக்கணிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.7**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தாதியர்கள் நேற்றும் அடையாளப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தினர். நேற்றுமுன்தினமும் தாதியர்களால் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டிருந்த நிலையில் நேற்றுத் தாதியர்களுடன் இணைந்து மருத்துவருவர்களும் போராட்டம் நடத்தினர்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் பணியாற்றும் தாதியர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் சில இணையத் தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன என்று தெரிவித்தே நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் நேற்றுமுன்தினம் மருத்துவமனைப் பணிப்பாளர் செய்தியாளர் சந்திப்பு நடத்தியிருந்தார். அவ்வாறான ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், செய்தி வெளியானமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்றும் தாதியர்களும், மருத்துவர்களும் இணைந்து போராட்டம் நடத்தினர். இந்த அவதூறுச் செய்தியால் மருத்துவமனையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது என்றும், நிரூபிக்க முடியாத செய்திகளை ஊடகங்கள் எதிர்காலத்தில் வெளியிடக் கூடாது என்று தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இரண்டு தாதியர்கள் தொடர்பில் இணைய ஊடகங்களில் செய்தி வெளியானது. உண்மையில் அப்படி ஒரு சம்பவம் இடம்பெற்று நிரூபிக்கப்பட்டால் ஊடகங்கள் அந்த செய்தியை வெளியிடலாம். அதற்கு எந்த மறுப்பும் கிடையாது. நிருபிக்கப்படாத சம்பவம் ஒன்றை அவர்கள் செய்தியாக வெளியிட்டமை ஒட்டு மொத்த மருத்துவமனையின் நற் பெயரையும் களங்கப்படுத்தி விட்டது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தால் மருத்துவ சேவைகள் பாதிக்கப்படவில்லை. ஒவ்வொரு பிரிவிலும் நோயாளர்களுக்கான சிகிச்சையை ,சேவையை வழங்குவதற்கு ஒருவர் வீதம் கடமையில் ஈடுபட்டனர் என்றும் கூறப்பட்டது. (எ-7)

## முத்திரையில்லாத தராசுகள்: 11 பேருக்குத் தண்டம்

தென்மராட்சி, பெப். 7

திணைக்களத்தின் முத்திரையிடப்படாத தராசுகள் மற்றும் படிகளைப் பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட சாவகச்சேரி பொதுச் சந்தையின் 11 வியாபாரிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள அலுவலர்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் சாவகச்சேரி பொதுச் சந்தையில் உள்ள வியாபாரிகளிடம் நடத்திய திடீர் சோதனையில் கடந்த வருடத்துக்குரிய முத்திரையிடப்படாத தராசுகள் மற்றும் படிகளைப் பயன்படுத்திப் பொருள்கள் விற்பனை செய்துவந்தனர் என்பது தெரியவந்தது.

அவர்கள் 11 வியாபாரிகளுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவை நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வியாபாரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது, (த-9)





மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி க.சுலபாமதி தலைமையில் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (ஜ-21)

## முறையிடச் சென்றவர் மறியல்சாலைக்குள்

யாழ்ப்பாணம், பெப். 7

தொடருந்துக் காப்பாளருக்கு எதிராக முறையிடச் சென்ற ஒருவரை, போக்குவரத்து விதிமுறையை மீறி ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் - புன்னாலைக் கட்டுவன் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் ஸ்ரான்லி வீதி ஊடாகப் பயணித்தது. சிறிதர் தியேட்டருக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவையின் காப்பாளர் வீதிக் கடவையை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். தனியார் பேருந்துச் சாரதி பயணிகளுடன் கடவைக்கு ஊடாகக் கடக்க முற்பட்டுள்ளார். தனியார் பேருந்து கடவைக்கு இடையில் சிக்கியுள்ளது. தனியார் பேருந்தில் பயணித்த பயணிகள் அலறியடித்து வெளியேறினர். தொடருந்து தனியார் பேருந்தை மோதும் ஆபத்தான நிலமை காணப்பட்டது. அந்தப் பகுதியில் நின்றவர்கள் கடவையை தூக்கிச் சிக்கியிருந்த தனியார் பேருந்தை மீட்டார்கள்.



தொடருந்துக் கடவையாளர் விதிமுறை மீறிச் செயற்பட்டதாக குற்றம் சுமத்தி தனியார் பேருந்துச் சாரதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இது தொடர்பில் விசாரணை முன்னெடுத்தோம். வீதி விதிமுறையை மீறி ஆபத்தான முறையில் பேருந்தைச் செலுத்திய குற்றச்சாட்டில்அவரைக்கைதுசெய்ததாகப் பொலிஸார்தெரிவித்தனர். (ஓ.5,8)

## காசோலை மோசடி வழக்கில் முன்னுக்குப்பின் முரண் தகவல்

### வழக்கை ஒத்திவைத்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், பெப். 7

காசோலை மோசடி தொடர்பான வழக்கில் குறுக்கு விசாரணையின் போது முறைப்பாட்டாளர் முன்னுக்கு பின் முரணான தகவலை வழங்கிய நிலையில் வழக்கு மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள், முறைப்பாட்டாளரிடம் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டனர்.

முறைப்பாட்டாளர் 12 இலட்சம் மற்றும் 13 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளைப் பெற்றுக்கொண்டு, 25 இலட்சம் ரூபா பணத்தை மூன்றாவது சந்தேகநபரிடம் கையளித்தார் என்றும் முதலாம், இரண்டாம் சந்தேகநபர்களைத் தெரியாது எனவும் மூன்றாவது நபரிடமிருந்தே இரு காசோலைகளையும் பெற்றுக்கொண்டு பணத்தை வழங்கினேன் என்று தெரிவித்தார்.

வட்டிக்கா பணம் வழங்கினார்கள் என்று சட்டத்தரணிகள் கேட்ட போது , இல்லை கை மாற்றாகவே வழங்கினேன் என்று தெரிவித்தார். 25 லட்சம் ரூபா பணம் எவ்வாறு திரட்டிக் கொடுத்தார்கள் என்று கேட்டபோது, வங்கியில் நகைகளை அடகு வைத்துப் பெற்றேன் என்று தெரிவித்தார்.

வங்கியில் நகைகளை அடகு வைத்துப் பணம் பெற்றுக் கொண்டால் அதற்கு வங்கிக்கு வட்டி கட்ட வேண்டி வருமே! அதை யார் கட்டுவது? என்று வினவினர். அதனைத் தானே கட்டுவதாக முறைப்பாட்டாளர் தெரிவித்தார். அவ்வளவு நல்லவரா நீர்? என்று கேட்டதற்கு மௌனமாக இருந்தார். அதனைத் தொடர்ந்து மூன்றாவது நபர் உங்களிடம் காசோலையைத் தந்து பெற்றுக்கொண்ட பணத்தை வட்டிக்கு வழங்குபவர் என்று தெரியுமா? என்று கேட்டதற்கு ஆம் என்று பதிலளித்தார். உம்மிடம் கைமாற்றாக வாங்கிய அந்தப் பணத்தை வட்டிக்கு வழங்குவது உமக்கு தெரிந்திருக்கும் என்று கேட்டதற்கும் ஆம் என்று பதிலளித்தார்.

மூன்றாவது நபர் உங்களிடம் வாங்கிய பணத்தை வட்டிக்கு இன்னொருவருக்கு கொடுத்துள்ளார். அந்த நபரைத் தெரியுமா? என்று கேட்டதற்கு இல்லை என்று பதிலளித்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை என்பது தெரியுமா? என்று கேட்டதற்கு ஆம் என்றார். அது எப்படித் தெரியும் என்று கேட்டதற்கு, பத்திரிகை பார்த்து அறிந்து கொண்டேன் என்றார். வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-37)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானை அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.7

**முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்றும், அதனால் பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.**

விசுவமடுப் பகுதியில் தொட்டியடிக் கமக்கார அமைப்பின் பகுதிகளான, டி3 மற்றும் மேட்டுப்பிட்டி ஆகிய இடங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொட்டியடிக் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான க.குலசிங்கம் தெரிவித்ததாவது:

தோட்டங்கள், பயன்தரு மரங்கள், விவசாயச் செய்கைகளை ஆண்டுதோறும் யானைகள் அழிக்கின்றன. இவை தொடர்ச்சியாக நடக்கின்றன. இது தொடர்பாக அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பி வைத்ததன் விளைவாக் உரியதிணைக்களங்களின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வந்து எமது பகுதிகள் பார்வையிடப்பட்டு, வேலி அமைப்பதற்குரிய அடையாளப்படுத்தல்களை மேற்கொண்டுவிட்டுச் சென்றார்கள்.

வேலி அமைக்கும் பணிகளில் முன்னேற்றம் எதுவும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

யானைகளுடைய அட்டகாசமானது தாங்கமுடியாமல் இருக்கின்றது. இந்தப் பகுதியில் வசிக்கின்ற குடும்பங்கள் ஒவ்வொருத்தராக வாழிடங்களிலிருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

மக்களின் முறைப்பாடுகளை அடுத்து வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

விசுவமடு, தொட்டியடிப் பகுதி இது தவிர டி3, என்று சொல்லக்கூடிய பகுதி, மேட்டுப்பிட்டி என்று சொல்லப்படும் பகுதிகளில் 700 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தப் பகுதியில் இரவில் காட்டு யானைகள் அட்டகாசம் அதிகரித்துவிட்டதாகவும், தாங்கள் வீட்டிலேயே இருக்க முடியாத நிலையில் பலத்த இடர்பாடுகளுக்குத் தொடர்ந்தும் முகங்கொடுத்து வருவதாக என்னிடம் தெரியப்படுத்தியிருந்தார்கள். அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தேன்.

இந்தப் பிரச்சினைகளை விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களம் என்பவற்றுக்கு கமக்காரஅமைப்புகள் தெரியப்படுத்தியும், இதுவரை அவர்களுக்குத் தீர்வு கிடைக்க வில்லை என்பதுதான் இந்த மக்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரதேச செயலகமோ, மாவட்டச் செயலகமோ, அல்லது கமநலசேவைத் திணைக்களங் களோ இது தொடர்பான நட வடிக்கையில் துரிதமாக ஈடு பட்டு இந்த மக்களுடைய துன்பத்தைத் தீர்க்கவேண்டு மென கேட்டுக்கொள்கின்றேன். - என்றார். (எ-246)



## உலர் உணவு வழங்கல்

வவுனியா, பெப். 7

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தாய்மாருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியாவில் 716 நாள்களுக்கு மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும்68 தாய்மார்களுக்கு ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வவுனியா உறவுகளுக்கு கைகொடுப்போம் அமைப்பின் சுவிஸ் கிளையினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

## காவலரண் அமைப்பது தொடர்பில் பேச்சு

கிளிநொச்சி பெப் 7

சந்திரமுகி சந்தியில் பொலிஸ் காவலரன் அமைப்பது தொடர்பாக கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சு.ஆ.னு.துரட்ணாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்டபட்ட கிராமமே கோணாவில் குறித்த கிரா மத்தில் உள்ள சந்திரமுகி சந்தியில் இளைஞர்கள் உள்ளிட்ட சிலர் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்களை அவர்களது கல்வி நடவடிக்கைக்காக அந்தப் பகுதியூடாக அனுப்புவதில் பெற்றோர்கள் பயப்பிடுன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் மாணவர்களின் கல்வி நிலை பின்னோக்கி நகர்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

அங்கு இரு பொலிஸ் காலரண் அமைப்பதன் மூலம் அந்தப் பகுதியில் இடம்பெறுகின்ற சட்ட விரோத செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு மக்கள் கொண்டு வந்தனர். அதையடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ-6)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு,பெப்.7

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேசத்தில் உள்ள கொள்ளக்குறிச்சி முன்பள்ளி மாணவர்களுக்குக் கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

சுவிஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிதி அனுசரணையில் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

***





கிளிநொச்சி, பெப். 7

கிளிநொச்சி கண்ணகிபுரம் கிராமத்தில் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கு இணங்க ரெலோவின் பன்னாட்டுக் கல்வி ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதன், துணை அமைப்பாளர் அ.நிரூபன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# யானைகளைக் கட்டுப்படுத்த மிளகாய்த்தூள் பாவியுங்கள்!

## *பெரியளவில் வெற்றியளிக்கிறது என்று பதுளை விவசாயிகள் கூறுகின்றனர்*

கொழும்பு, பெப். 7

காட்டு யானைகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த யானை வெடிகளுக்கு மாறாக 'மிளகாய்த் தூள்' பாவிக்கும் முறைமை வெற்றியளிக்கிறது என்று பதுளை மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் மகியங்கனை தேர்தல் தொகுதியின் விவசாயிகள் மற்றும் மகாவலி 'சி' பிரிவு விவசாயிகள் காட்டு யானைகளால் ஏற்பட்டு வரும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 'மிளகாய் தூள்' பாவிக்கும் முறைமையை, பரீட்சார்த்த முறையில் மேற்கொண்டு, வெற்றியைக் கண்டுள்ளனர்.

'மிளகாய்த் தூள்' பாவனையைப் பெரியளவில் மேற்கொள்ள முடியாவிட்டாலும் கூட வீட்டுத் தோட்டம், தென்னை, வாழைச் செய்கை, வீடுகள் மற்றும் சேமிப்பு நெல், குரக்கன், சோளம் ஆகியவற்றின் மூடைகள் ஆகியவற்றைக் காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பது மற்றும் மனித உயிர்களைக் காட்டு யானைகளிலிருந்து பாதுகாப்பது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். 'மிளகாய்த் தூள்' பாவனையை பெரியளவில் மேற்கொள்ள பொருளாதார நிலை, பெரும் தடையாக இருப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் வழிகள் பலவற்றில், யானை உயரத்துக்கு ஏற்ப மரக்கிளைகளில் மிளகாய்த் தூள் கொட்டும் நிலையில் வைத்தல் மற்றும் கம்பிகளைக் கட்டி, அவற்றில் மிளகாய்த் தூள், சிறு பொதிகளைத் தொங்க விடுதல் வேண்டும். யானைகள் அந்த வழிகளில் பிரவேசிக்கும் போது, கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் சிறுபொதிகளில் உள்ள மிளகாய்த்தூள் சிதறும் போது, யானைகளின் கண்களில் பட்டதும், யானைகள் வந்த வழியாகவே கத்திக்கொண்டு திரும்பி ஓடி விடுகின்றன. இதனைப் பரீட்சார்த்த ரீதியில் மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளோம் என்று விவ்சாயிகள் தெரிவித்தனர். (து)

# 3 கோரிக்கைகளை முன்வைத்து இலங்கையைச் சுற்றிப் பயணம்

வவுனியா, பெப்.7

மூன்று கோரிக்கையை முன்வைத்து வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் இலங்கையைச் சுற்றி ஈருருளிப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தர்மலிங்கம் பிரதாபன் என்பவரே எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியா கோவில்குளம் சிவன் ஆலயத்துக்கு முன்பாக காலை 8.30 மணிக்குச் சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த ஈருருளிப் பயணம் 2 ஆயிரத்து 125 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டது என்றும், இந்தச் சுற்றுப் பயணம் மார்ச் மாதம் 13 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழத்தில் நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினை தனிப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும், லயன்களில் வாழும் மலையக மக்களுக்குத் தனித்தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும், தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்ற மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஈருருளிப் பயணம் இடம்பெறவுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த கலைஞரான த. பிரதாபன் கடந்த காலங்களிலும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கையைச் சுற்றி உந்துருளியில் பயணித்திருந்தார். வடக்கு மாகாணத்தைச் சுற்றியும் ஈருருளியில் பயணித்திருந்தார். (ஐ-110)

# கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 7

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தினால் நடப்பு வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

சென்ற 2018 ஆம் ஆண்டிலிருந்து தென்மராட்சி அபிவிருத்தி கழகம் தென்மராட்சியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதாந்த கல்வி ஊக்குவிப்பு நிதியை வழங்கி வருகின்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 2 ஆயிரத்து 500 ரூபாவை அவர்களது வங்கி கணக்குக்குக் அனுப்பி வைக்கப்படுகின்றது. இதே வகையில் சென்ற வருடம் 24 மாணவர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்த கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கான நிதியுதவியை தென்மராட்சி அபிவிருத்தி கழகம் பிரித்தானியா கிளையினர் வழங்கி வருகின்றனர். (ஐ)

# மெய்வன்மைப் போட்டிகள்

அளவெட்டி.பெப்.7

அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கு.லங்காபிரதீபன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தகுமார், சிறப்புவிருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.சுமணசேகரா, மதிப்புறு விருந்தினர்களாக பிரதேச சபை உறுப்பினர் க.மயூரதன், அருணாசலம் வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர்களான ஆ.குமரகுருபரன் மற்றும் கு.ஜெகநாதன் பாடசாலையின் பழைய மாணவி திருமதி.வாசுகி அருள்ராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-36)

# வினாவிடை போட்டி

சாவகச்சேரி பெப் 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான அறிவு ஒளி வினாவிடைப் போட்டி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 50 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இலங்கை மின்சார சபையினரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

விஞ்ஞானம், மின்சாரம், மின்சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துதல், மின்சாரத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல், மின்சாரத்தினை பயனுதவி உள்ள வகையில் பயன்படுத்துதல் போன்ற விடயங்களில் வினாக்கள் கேட்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது .

போட்டி நடாத்தப்படும் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் இலவச மின்னிணைப்பும் இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த ஜி.சி.ஈ. சாதாரனதர வகுப்பு மாணவர்களுக்கு நெடுந்தீவு கோட்டப் பாடசாலையொன்றில் வினாவிடைப் போட்டிகள் நடத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 9)

## மன்னாரில் கால்நடைகளை

# மிருக வைத்தியரிடம் அனுமதி பெற்றே இறைச்சியாக்கலாம்

மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளை இறைச்சியாக்குவோர் கால்நடைகளை மிருக வைத்தியரிடம் காட்டிப் பரிசோதனை செய்து உரிய அனுமதியைப் பெற்று இறைச்சியாக்க முடியும் என்று மன்னார் மாவட்டப் பொது சுகாதார மருத்துவ அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தெரிவித்தார்.

மன்னாரில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய்த் தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதையடுத்து அங்குள்ள கால்நடைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லவோ, அனுமதியின்றி இறைச்சியாக்கவோ தடை விதிக்கப்பட்டிருந்தது. அது விடயத்தில் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரை விடவும் நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் கால்வாய் நோய்க் தாக்கம் ஏற்பட்டது. அதனால் கால்நடைகளை இறைச்சியாக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் கால்நடைகளை மிருக வைத்திய அதிகாரிகளிடம் காட்டிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அடையாளமிடப்பட்ட பின்னரே இறைச்சியாக்க முடியும். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து மன்னாருக்குக் மாடுகளைக் கொண்டுவருவதாக இருந்தால் மிருக வைத்திய அதிகாரியினதும், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பரிசோதகர்களினதும் அனுமதி பெறப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பாகக் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் நகர சபைத் தவிசாளருடன் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன - என்றார். (எ-56)




கொமர்ஷல் வங்கியில் **வீட்டுக்கடன்** ஒன்றைப் பெற்று உங்கள் வாழ்க்கையை சுதந்திரமாக வாழுங்கள்

- **3 தினங்களில்** வீட்டுக்கடன் அனுமதி மற்றும் **14 தினங்களுக்குள்** கடன்தொகை வழங்குதல்
- கட்டிடப் பொருட்களுக்கு **35%** விசேட விலைக்கழிவு
- கடன் தொகையின் **50%** ஐ மாதாந்தக் கட்டணமாகச் செலுத்துவதுடன் மிகுதித் தொகையை கடனின் இறுதிக் காலத்தில் செலுத்தும் வசதி
- உங்கள் வருமான அதிகரிப்பிற்கு ஏற்ப, **விசேடமாக வடிவமைக்கப்பட்ட மீளச் செலுத்தும் திட்டம்** (குறைந்த தொகையிலிருந்து அதிக தொகையை மீளச் செலுத்தும் வசதி)
- நாடு முழுவதுமுள்ள கிளை வலையமைப்பினூடாக **மிக இலகுவான சேவை**

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது 0112 353 791 / 0112 353 801 இலக்கங்களின் ஊடாக வீட்டுக்கடன் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள். homeloan@combank.net

இந்த விபரக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் நிபந்தனைகள், காலத்திற்கு காலம் மாற்றமடையலாம்.

வீட்டுக் கடன்

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Fitch Rating - AA (lka) +94 112 353 333 www.combank.lk

# கூட்டு அரசை அமைப்பதற்கு ஐ.தே.மு. உள்ளேயே எதிர்ப்பு!

## தலைமை அமைச்சருக்கு புதிய தலையிடி

கொழும்பு, பெப். 7
அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பை மட்டும் நோக்காகக்கொண்டு கூட்டு அரசு அமைக்கப்படுமானால் அதற்கு ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டோம். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கூட்டு அரசு அமைக்கும் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு: மாறுபட்ட கொள்கைகளைக் கடைபிடிக்கும்இரண்டுமுதன்மைக் கட்சிகள் இணைந்து கூட்டு அரசு அமைத்ததால் அதன் ஆயுள்காலம் உரிய வகையில் நீடிக்கவில்லை. 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப் பட்டதை மட்டுமே வெற்றியாகக் கருதலாம். எந்த நோக்கத்துக்காக கூட்டு அரசு அமைக்கப்பட்டதோ அந்த இலக்கை நோக்கி அது நகரவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

கூட்டு அரசு தொடர்பில் நாம் சிறந்த பாடத்தைக் கற்றுக் கொண்டுள்ளோம்.

மீண்டும் அவ்வாறானதொரு கட்டத்துக்கு செல்வதாக இருந்தால் அகம், புறம் என அனைத்து விடயங்களையும் அலசி ஆராய்ந்துவிட்டே முடிவொன்றை எடுக்கவேண்டும். நிலையானதொரு அரசு அமைக்கவும், புதிய அரசமைப்பை உருவாக்கவும், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவும் கூட்டு அரசு அமைக்கப்படுமானால், நாட்டின் நலனைக்கருதி அதற்கு ஆதரவு வழங்கலாம். தனிநபர்களைதிருப்திப்படுத்துவதற்காகவும், அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் கூட்டு அரசு உருவாக்கப்படுமானால் அதற்கு ஆதரவாகச் செயற்படமுடியாது. அது மக்கள் வழங்கிய ஆணையை அப்பட்டமாக மீறும் செயலாகும். ஐக்கிய தேசியக்கட்சி எதைச் செய்தாலும் அதற்கு போர்க் கொடி தூக்கும் நிலைப்பாட்டிலேயே அரச தலைவர் மைத்திரிபால இருக்கிறார். சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் ஆதரவை எப்படி பெறுவது? தாமாக முன்வந்து சில உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினாலும் அதற்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில், அரசதலைவர் இறங்கக்கூடும். இதனால், மீண்டும் குழப்பநிலை உருவாகக்கூடும். இப்படியே ஆட்சியை கொண்டு நடத்த முடியாது. அரச தலைவர் தேர்தலை நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி அழுத்தம் கொடுக்க வேண்டும். மக்கள் தம்பக்கமே உள்ளனர் என்பதை அரச தலைவர் தேர்தல் ஊடாக நிரூபிக்கவேண்டும். அப்போதுதான் அடுத்த கட்டம் நோக்கி தடங்கல்கள்இன்றி நகரலாம் - என்றார்.

(ஓ.5)

# மொழித் தேர்ச்சிப் பிரச்சினைக்கு தீர்வு காணக் கோரிப் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தியது

கொழும்பு, பெப். 7
**அதிபர்கள் எதிர்கொண்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகோரி இலங்கை ஆசிரியர் சங்கம் கொழும்பில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. சுதந்திர சதுக்கத்திலிருந்து நிர்வாக அமைச்சு வரை ஊர்வலமும் நடைபெற்றது.**



2009,2010,2012,2014 ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற அதிபர்களின் பதவி உயர்வுகளுக்கு இரண்டாம்மொழி சித்தியடைய வேண்டும். தற்போது க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரண்டாம் மொழிச் சித்தி வேண்டும். தற்போதுள்ள நிர்வாக சுற்றறிக்கையில் 31.01.2017க்கு 50 வயதுக்கு மேற்பட்டோர் 100 மணிநேரம் கற்றல் போதுமானது. 2017 இன் பின் 50 வயதைத் தாண்டுபவர்களுக்கு விலக்களிக்கப்படவில்லை.

இவை தொடர்பாக சாதகமாகப் பரிசீலிக்க மும்மொழிகள் அமைச்சர் மனோகணேசன் இணக்கம் தெரிவித்திருந்த நிலையிலும் இன்றுவரை சுற்றறிக்கையாக வெளிவரவில்லை.

இதனை வலியுறுத்திய ஆர்ப்பாட்டத்தின் பின்னர் நிர்வாக அமைச்சில் பேச்சு நடைபெற்றது.

இதன்போது நிர்வாக அமைச்சு அதிகாரிகளும் மனோகணேசனும் இணைந்து ஒரு வாரத்துக்குள் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று உறுதியளித்தனர். ஒரு மாத காலத்துக்குள் சுற்றறிக்கை வெளிவராத பட்சத்தில் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அங்கு தெரிவித்தார்.

(த)

### மாணவரைச் சேர்ப்பதில் அநீதி ஆராய மூவர் குழு அமைப்பு

கொழும்பு, பெப். 7
2019 ஆம் ஆண்டு தேசிய பாடசாலைகளுக்காக முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது அநீதி இடம்பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சுக்குக் கிடைக்கபெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலகவின் தலைமையில் இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

பாடசாலை விவகார பணிப்பாளர் காமினி பெரேரா மற்றும் கல்வி அமைச்சின் ஒழுக்காற்று விசாரணைக்கிளையின் மூத்த உதவிச் செயலாளர் சமனி விக்கிரமதிலக ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்று கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

(த)

# அலோசியசுக்கும் மகிந்தவுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

## சபையில் ஜே.வி.பி. கேள்விக் கணை

கொழும்பு, பெப். 7
பிணைமுறி ஊழலில் முக்கிய குற்றவாளி என்று ராஜபக்சவினர் குற்றம் சுமத்தும் அலோசியஸ் ஏன் மகிந்த ராஜபக்சவின் புதல்வரின் திருமணத்தில் கலந்துகொண்டார்? அவருக்கும் மகிந்தவுக்கும் என்ன தொடர்பு? மத்திய வங்கி ஊழலை 50 நாள்கள் ஆட்சியில் மகிந்த வெளியிடாதது ஏன்? இவ்வாறு சபையில் ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற நிதி மோசடி ஊழல்கள் மற்றும் கூட்டாட்சியில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த அரசதலைவர் ஆணைக்குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளைத் தீர்மானத்தை நேற்றுமுன்தினம் வழிமொழிந்து உரையாற்றிய போதே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக இவற்றைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
50 நாள்கள் மகிந்த ராஜபக்ச தலைமைஅமைச்சராக இருந்த போது ஏன் ஆணைக்குழு அறிக்கைகளை அரச தலைவர் வெளியிடவில்லை?

இந்த ஆணைக்குழு உரிய நபர்களின் பெயர்களை மக்களுக்கு வெளிக்காட்டியுள்ளது. அறிக்கையில் குற்றவாளிகள் யார்? அவர்கள் என்ன ஊழல் செய்தனர்? அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற அனைத்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

அரசதலைவர் ஆணைக்குழு அறிக்கையில் முக்கிய குற்றவாளிகளாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவர்கள் தற்போது அரசதலைவரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மிகப் பெரும் குற்றவாளியான கோத்தாபாய ராஜபக்சவை அடுத்த அரசதலைவர் வேட்பாளராகக் கொண்டுவர முயற்சிக்கின்றனர் - என்றார்.

(த-31)



# ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு தொழிலாளர் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 7
தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு கோரி வட்டவலையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வட்டவலை லொனக் தோட்டப்பகுதியில் உள்ள கொழுந்து மடுவத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை 8மணி தொடக்கம் 11மணிவரை இடம் பெற்றது. 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

தமது அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுத் தருவதாகக் கூறி இறுதியில் கூட்டு ஒப்பந்தத்தில் 700ரூபாவுக்குக் கைச்சாத்திட்டுள்ளனர். இதனை நாம் ஏற்கப்போவதில்லை. அந்தக் கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து எங்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று வலியுறுத்தித் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்கள் வாக்குகளைப் பெற்ற மலையக அரசியல்வாதிகள் எங்கள் சம்பள விடயத்தில் முதலாளிமார் சம்மேளனத்திடம் எங்களை அடகு வைத்துவிட்டார்கள். நாம் மாதாந்தம் தொழிற்சங்கங்களுக்கு செலுத்துகின்ற சந்தா பணத்தை இனிமேல் வழங்கப் போவதில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(த)



# உடலில் வேல்களைக் குத்தி 1000 ரூபாவுக்குப் போராட்டம்

கொழும்பு, பெப். 7
மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் எனக் கோரி ஒருவர் தனது உடலில் ஏராளமான சிறு வேல்களைக் குத்திக் கொண்டு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தின் போராட்டம் நடத்தியுள்ளார்.

முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களும் 700 ரூபாவுக்குக் கூட்டு ஒப்பந்தம் செய்து தொழிலாளர்களை ஏமாற்றியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது பற்றிய மனுவை சபாநாயகர் கரு ஜயசூரிய விடம்ஒப்படைக்குமாறும் நாடாளுமன்ற செயலரிடம் ஒப்படைத்துள்ளார்.

(த-31)

# போதைக் கடத்தலைத் தடுக்க மாலைதீவுடன் அரசு இணக்கம்

கொழும்பு, பெப். 7
சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நிகழ்ச்சித் திட்டங்களில் விரிவான ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இலங்கை மற்றும் மாலைதீவு அரசதலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள மாலைதீவு அரசதலைவர் இப்ராஹிம் மொஹமட் சாலிஹ் மற்றும் இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரசதலைவர் செயலகத்தில் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.

நீண்டகால நட்பு நாடுகளான இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையில் இருந்துவரும் உறவுகளை மேலும் பலப்படுத்தவும் வர்த்தகம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இரண்டு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தவும், அந்தத் துறைகளில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்வது பற்றியும் தலைவர்கள் கலந்துரையாடினர். இரண்டு நாடுகளுக்குமிடையில் இணைந்த வர்த்தக வாய்ப்புக்களை மேம்படுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பல முதலீட்டாளர்கள் மாலைதீவில் தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் இலங்கையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாலைதீவு மாணவர்களுக்கு நுழைவிசைவு வழங்குதல் உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

(த)

# புதிய பயங்கரவாத சட்டத்தை ஓரணியாக எதிர்க்கவேண்டும்

## அறைகூவல் விடுக்கிறார் ஆனந்தன் எம்.பி.

வவுனியா, பெப். 7

ஜனநாயகத்தின் குரலை அடக்கி ஒடுக்குவதற்கு கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனைவரும் ஓரணியில் திரண்டு எதிர்க்கவேண்டும். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழரின் உரிமைப் போராட்டம் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட்டது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் சத்தமின்றி போரை முன்னெடுக்க பயங்கரவாதத் தடைச்சட்டம் வலிந்து நடைமுறையாக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு வெளிவந்ததும், பன்னாட்டு நியமங்களுக்கு அமைவாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது எமது இனத்தைச் சேர்ந்த சட்டவல்லுநர்கள் அமைதியாக இருந்துள்ளனர். ஜனநாயகத்துக்குக் குரல் கொடுக்கின்றோம் என்று கூறி மக்கள் முன்பாக வார்த்தை ஜாலம் செய்தவர்கள், ஜனநாயகத்தை முற்றாக நசுக்கும் இந்தச் சட்டம் தொடர்பில் மௌனம் காப்பது ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

எந்தவொரு பொலிஸ் அதிகாரிக்கும், ஆயுதப் படையினருக்கும், கரையோர பாதுகாப்பு அலுவலருக்கும் எவரையும் சந்தேகத்தின்பேரில் பயங்கரவாதி என்று கருதமுடிவதோடு பிடியாணையின்றி எவரையும் கைது செய்வதற்கும், வெறும் சந்தேகத்தில் அமைவிடங்கள் 'பயங்கரவாத' செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்ற அடிப்படையில் அந்த இடத்துக்குள் பிரவேசிப்பதற்கும் தேடுதல் செய்வதற்கும் புதிய சட்டம் அனுமதி வழங்குகின்றது.

இந்தப் புதிய சட்டத்தில் ஒருவரை தடுத்து வைத்தல் பற்றி கேள்வி எழுப்புவதற்கு நீதிவானுக்கு அதிகாரம் இல்லை. பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும், பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கும் அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்படுவதோடு பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அரச தலைவருக்கு இருந்த அதிகாரங்களும் குறைக்கப்படுகின்றன.

விசாரணையின் போது சித்திரவதையை அனுபவித்தால் மீண்டும் விசாரணையாளர்களிடத்திலேயே முறையிட வேண்டிய நிலமைகள் இருப்பதானது திருடன் கையில் சாவியைக் கையளித்ததைப்போன்று தான் உள்ளது. மிக முக்கியமாக ஒரு பெண்ணை ஆண் பொலிஸ் அல்லது பாதுகாப்பு படை வீரர் கைது செய்வதற்குக் கூட சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் மோசமானது என்று பன்னாட்டு வல்லுநர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனை எமது மக்கள் பிரதிநிதிகளாகவும் சட்டத்தரணிகளாகவும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்காமல் இருப்பதும் எமது மக்களிடமும் இந்நாட்டு மக்களிடமும் இதன் ஆபத்துக்களை எடுத்துச் சொல்லாமல் இருப்பதும் எமக்குச் சந்தேகங்களை எழுப்புகிறது - என்றுள்ளது. (ஒ.5)



# சிறிபாத தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவர் போராட்டம்

பொகவந்தலாவ, பெப். 7

திம்புள்ள பத்தனை சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குச் சுத்தமான உணவு வழங்கப்பட வேண்டும் என்றும், கல்லூரி வளாகத்தில் அலுவலர்கள் மது அருந்துகின்றனர், அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்று மாணவர்கள் தெரிவித்தனர். கல்லூரியின் சமையலறை சுகாதாரச் சீர்கேடு காரணமாக சீல் வைத்து மூடப்பட்டது. தற்போது உணவு கிடைப்பது தடைப்பட்டுள்ளது என்று மாணவர்கள் கூறுகின்றனர். தமக்கு வழங்கப்படுகின்ற உணவு சுத்தமாகவும் முறையாகவும் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"இந்தச் சம்பவம் தொடர்பில் தனியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியாது. இந்த பிரச்சினைக்கு உயர் அதிகாரிகளின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கல்லூரியின் பீடாதிபதி ரமனி அபேநாயக்க தெரிவித்தார். (த)

# நிதி மோசடிக் குற்றவாளிகளை மைத்திரி தண்டிக்காதது ஏன்?

## நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, பெப். 7

நிதிமோசடி குறித்து அரசதலைவர் ஆணைக்குழு ஆதாரபூர்வமாகத் தகவல்களை முன்வைத்தும், குற்றவாளிகளின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டும் அரசதலைவரின் கைகளில் குற்றவாளிகளின் பெயர்கள் இருந்தும் கூட இன்னும் அவர்கள் தண்டிக்கப்படாதது ஏன்?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் கேள்வி எழுப்பினார்.

பெரும் நிதி மோசடி மற்றும் மத்திய வங்கி பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை மீதான சபை ஒத்துவைப்பு வேளை தீர்மானத்தை முன்வைத்து நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் கேள்வியெழுப்பினார்.

அறிக்கையின் ஆங்கில அறிக்கையில் 600 பக்கங்கள் உள்ளன. 411 முறைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை விசாரித்து 34உறுப்பினர்களின் பெயர்கள் சுட்டிக்காட் டப்பட்டுள்ளன. இதில் பல்வேறு நபர்கள் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலஞ்ச ஊழல் மற்றும் பொதுச்சட்டத்தின் கீழும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகளில் உள்ள பெயர்கள் குறித்தும் மனுக்கள் தொடர்பிலும் 70 பில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அ வன்கார்ட் நிறுவன விவகாரத்தில் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட சிலரது பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சிறிலங்கன் வானூர்தி சேவை, உணவு சேவை, ஊழல் விடயத்தில் பலரின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்த ஊழல் குறித்தும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தவிடயத்தில் 3.96 மில்லியன் ரூபா அரச நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அமைச்சின் கீழ் அமைச்சின் அலுவலர்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளமை குறித்த குற்றத்தில் விமல் வீரவன்ச உட்பட பலரது பெயர்கள் குறிப்பிடப்பட் டுள்ளன.

பொதுச் சொத்துக் குற்றத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணைக்குழு கூறியுள்ளது. ஆணைக்குழுவிசாரணை அறிக்கைக்கு நீதிமன்ற அங்கீகாரம் உள்ளது.

ஆணைக்குழு பாரதூர மோசடிகள் குறித்து தெளிவான அறிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது. இந்த ஆணைக்குழு பரிந்துரைகள் ஏதேனும் ஒன்றையாவது நடைமுறைப்படுத்துமா? இந்த ஆணைக்குழு மிகச் சிறந்த யோசனைகளை முன்வைத்துள்ளது.

குற்றமிழைத்தவர் தண்டிக்கப்பட இவ்வளவு கால தாமதம் ஏன்? ஆணைக்குழு தயாரித்த இந்த அறிக்கையின் பலன் என்ன? களவுக்களைக் கண்டறியஆணைக்குழு அமைத்து நேரத்தைக் கடத்த அரச நிதியை வீணடித்து இறுதியில் எந்தப் பலனும் இல்லையென்றால் இவற்றை ஏன் நாம்செய்கின்றோம்? குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் உள்ளன, பல குற்றங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் அறிக்கையாக அரசதலைவருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றைக்குப்பைத்தொட்டியில் போட முடியாது. இந்த விடயத்தில் நாடாளுமன்றம் சரியான சமிக்ஞையைக் கொடுக்க வேண்டும். அது நாடாளுமன்றத்தின் கடமை. இதில் நாடாளுமன்றமும் நிறைவேற்று அதிகார பொறுப்பில் இருந்து விலகியுள்ளது என்பதே உண்மை-என்றார். (சு-31)

# பேஸ்புக்கில் பதிவேற்ற விருந்து வைத்த விமல் எம்.பி.

கொழும்பு, பெப். 7

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச முகப்புத்தகம் உள்ளிட்ட சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களுக்கு இராப்போசன விருந்தொன்றை வழங்கியுள்ளார்.

கொரகான பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இந்த விருந்துபசாரம் நடத்தப்பட்டுள்ளது.

அங்கு அவர் உரையாற்றுகையில், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் பாதுகாக்க வேண்டும்.

அவருக்கு 10 வீதமான வாக்கு வங்கி உள்ளது. அரசதலைவர் தேர்தலில் ஒரு வீத வாக்கும் முக்கியமானது.

அரசதலைவருக்கு ஆதரவாகவும் அவருக்கு எதிரானவர்களுக்கு எதிராகவும் பதிவுகளைப் பதிவேற்றுங்கள் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# அரசதலைவர் கூறுவதுபோன்று கோப்புகள் தொலையவில்லை

## நீதி அமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 7

போதைப்பொருள் தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் பெயர்ப் பட்டியலை அரசதலைவர் செயலகத்துக்கு அனுப்பியபோதும் அதுதொடர்பில் அரசதலைவரிடமிருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதாஅத்துகோரள தெரிவித்தார்.

அரசலைவர் தெரிவிப்பதுபோன்று தூக்குத் தண்டனைக் கைதிகளின் எந்த கோப்பும் காணாமல் போகவில்லை என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கூடியது. முக்கிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர முன்வைத்த கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கோப்புகள் காணாமல் போயுள்ளன என்று அரசதலைவர் தெரிவித்திருந்தார். ஆனால் கோப்புகள் காணாமல் போகவில்லை. போதைப்பொருள் தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்பில் அரசதலைவருக்கு அறிவித்திருக்கின்றேன். அதுதொடர்பான அனைத்துத்தகவல்களையும்நாங்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட போது அதில் 48பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது.

அவர்களில் 30 பேர் மேன்முறையீடு செய்துள்ளனர். 18பேரே தூக்குத் தண்டனைப் பட்டியலில் உள்ளனர். தூக்குத் தண்டனைப் பட்டியலை நீதி அமைச்சால் கையாள முடியாது. அதனால் நாங்கள் அதனைச் சட்டமா அதிபர்திணைக்களத்துக்கு அனுப்பி, அதனை உறுதி செய்து கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அரசதலைவர் செயலகத்துக்கு அனுப்பிவைத்தோம் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, போதைப்பொருள் தொடர்பில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை அரசதலைவர் செயலகத்துக்கு அனுப்பும் போது தூக்குத் தண்டனை தொடர்பில் பரிந்துரை செய்து அனுப்பவில்லையா? என்று கேட்டார். இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், சட்டமா அதிபர் திணைக்களத்தால் பரிந்துரை செய்தே அனுப்பப்பட்டது - என்றார். (த-31)

# மாகாண சபையைக் கோட்டை விட்டவர் இனப்பிரச்சினையைக் கையாள்வாரா?

## விக்கியைப் போட்டுத் தாக்குகிறார் சிவமோகன் எம்.பி.



வவுனியா, பெப். 7

**விக்னேஸ்வரன் தலைமையிலான அணியில் எல்லோரும் இணைய வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றனர். அவரால் வடக்கு மாகாணசபையையே கொண்டு நடத்த முடியவில்லை. செய்யவேண்டிய விடயங்களைச் செய்யாமல், ஆடத் தெரியாதவன் மேடைகோணல் என்பது போலக் கூப்பாடு போட்டவர். அவரிடம் இனப் பிரச்சினை விடயத்தைக் கையாளக்கொடுக்கலாமா?**

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன். வவுனியா பெரியகோமரசன் குளத்தில் கடந்த திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் சுதந்திர தினத்தை நாங்கள் கொண்டாடவில்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சியை இலங்கை அரசு எப்போது ஏற்றுக் கொள்கின்றதோ அன்றுதான் எங்களுக்குச் சுதந்திர தினம்.

சிங்கள மன்னனின் சிங்கக் கொடியைத் தழுவிய இலங்கையின் தேசியக் கொடியைக் கூட நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வடக்கு மாகாணத்தில் தொல்பொருள்சின்னங்கள் பௌத்தமயமாக்கப்படுவதோடு, சிங்களக் குடியேற்றங்களும் இடம்பெறுகின்றன.

தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை இவை அனைத்தும்தமிழர்களுக்கு அநீதியைத்தான் செய்து வருகின்றன. இது தொடர்பில் நாங்கள் திரும்பத் திரும்பத் தெரிவித்து வருகின்றோம்.

இந்தத் திணைக்களங்களுடன் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தித் தருவதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்தத் திணைக்களங்களின் தலைவர்கள் சிங்கள மொழிபேசுபவர்கள். அவர்கள்தான் வடக்கில் இருக்கின்றார்கள். அவர்களின் மனோநிலை மாறவேண்டும் - என்றார். (ஒ.5.110)

# கஞ்சா கடத்தி அரசியல் செய்யும் நிலையில் இல்லையாம் ஈ.பி.டி.பி.

## இப்படிச் சொல்கிறார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, பெப். 7

கேரளக் கஞ்சாவைக் கடத்தித்தான் அரசியல் செய்ய வேண்டும்என்றநிலையில் நாங்கள் இல்லை. நாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது, போதைப் பொருள் கடத்தல்கள், விற்பனைகள் என்பன எமது பகுதிகளில் இருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்போது ஆளுந்தரப்புடன் இணைந்து அரசியல் நடத்தத் தொடங்கினார்களோ, அன்று முதலே இத்தகைய போதைப் பொருள் கடத்தல்களும், கேரள கஞ்சா கடத்தல்களும், வாள்வெட்டுச் சம்பவங்களும், சமூக அவலங்களும் எமது பகுதிகளில் அதிகரித்துள்ளன. இவ்வாறு ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நாடாளுமன்றில் நடைபெற்ற ஊழல்கள் மோசடிகள் தொடர்பிலான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவரது கட்சியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் இன்று ஊழல் மோசடிகள் என்பது ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயமாக மாறியுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காகப் பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டும், அதன் பின்னர் அவைகளில் பல விசாரிக்கப்படாமலும் நிரூபிக்கப்படாமலும் கூட இருக்கின்றன. எனக்கு எதிராகக் கூட சுமந்திரன் தலைமை அமைச்சர் பணியகத்தில் செயற்பட்ட ஊழல் மோசடிப் பிரிவில் 2015 ஆம் ஆண்டு முறைப்பாடு செய்து ஊடகங்களை அழைத்து அரசியல் வியாபாரம் செய்தார். ஆனால் இதுவரை அவரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டனவா? இன்றும் கூட ஏதோ கேரள கஞ்சாவுக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினரொருவருக்கும் தொடர்பு இருப்பதாக ஏதோ ஒரு பொய்யை அவர் இந்தச் சபையிலே கூறியிருக்கிறார்.

கேரளக் கஞ்சா கடத்தல் தொழில்களில் ஈடுபடுகின்ற சிலர் கிளிநொச்சிப் பொலிஸாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவரை விடுவித்துக் கொள்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொலிஸ் உயரதிகாரி ஒருவருக்கு அழுத்தம் கொடுத்தார் என்ற செய்தி ஏற்கனவே ஊடகங்களில் வெளிவந்திருந்தன. அதைப் பற்றி நான் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் கதைத்தபோது, உடனே எழுந்திருந்த அவர், வேறோர் கதையைக் கூறி, அதற்கும் தனக்கும் தொடர்பில்லை என்றார். இன்று, ஈ.பி.டி.பி கட்சிக்கும், கேரள கஞ்சாவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றார். ஆக, இவர் இந்தக் கேரள கஞ்சாவைக் கைவிட மாட்டார் போல் தெரிகின்றது.

எமது பகுதிகளில் போதைப் பொருள் உட்பட இந்தக்கேரள கஞ்சா கடத்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை அடியோடு நிறுத்த வேண்டும் என்பதையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு கைது செய்யப்படுவோரைக்கூட விடுவிப்பதற்கும் இதே தமிழ்த் தேசியத் தரப்பினரே பொலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் முன்நிற்கின்றனர் என்பதையும் எமது மக்கள் அறிவார்கள். எனவே, எமது மக்களுக்குத் தெரியும், போதைப் பொருள், கேரள கஞ்சா போன்றவற்றின் கடத்தல்கள் மற்றும் விற்பனைக்கு யார் துணை நிற்கின்றார்கள் என்பது. அதனால்தான் இவர்களது தமிழ்த் தேசியம் என்பது கேரள கஞ்சாவைப் போன்றது என எமது மக்கள் கதைத்து வருகின்றனர் என்றார். (ஒ.5)

# 132 கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்னுடன் மூவர் கைது

கொழும்பு, பெப். 7


சுமார் 132 கோடி ரூபா பெறுமதியான 110 கிலோ பிரவுன் சுகர் ரக ஹெரோய்ன் போதைப் பொதிகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கலால் வரித் திணைக்களத்தின்போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

திணைக்களம் முன்னெடுத்து வந்த நீண்ட விசாரணை ஒன்றின் பிரதிபலனாக இவர்கள் வெள்ளவத்தை மற்றும் பிலியந்த'லையில் நடத்திய சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டனர் என்று திணைக்கள ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் 10கிலோ ஹெரோய்னுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். அந்த இருவரிடமும் நடத்திய மேலதிக விசாரணைகளில் பிலியந்தலை பகுதியில் வீடொன்று சோதனையிடப்பட்டு அந்த வீட்டிலிருந்து 100 கிலோக்கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. அங்கும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அங்கு மீட்கப்பட்ட ஹெரோய்ன் அதி உயர் ரகம் என்பது விசாரணையில்

தெரியவந்தது. அவற்றுடன் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று திணைக்கள ஊடகப் பேச்சாசாளர் தெரிவித்தார். (கு-71)





இலங்கை வந்துள்ள மாலைதீவு அரச தலைவர் இப்ராகிம் மொஹமட் சாலிஹ் இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த திங்கட் கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# ஏ.ரி.எம். பரிவர்த்தனையில் அவதானம் என எச்சரிக்கை

கொழும்பு, பெப். 7

இலங்கையிலுள்ள வங்கிகளில் காணப்பட்டும் தன்னியக்க இயந்திரங்களில் (ஏ.ரி.எம்) கருவியொன்றைப் பொருத்தி அதனூடாக வாடிக்கையாளர்களின் தரவுகள் குழு வொன்றால் சேகரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அந்தத் தரவுகளைப் பயன்படுத்திப் போலி அட்டைகள் தயாரிக்கப்பட்டுப் பணம் பெறப்படுகிறது என்றும் அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர்அது தொடர்பில்விசாரணை நடத்துகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்த நிறுவனமான லங்கா க்ளியர் நிறுவனம் இது பற்றியஅறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. தன்னியக்க காசு வழங்கல் இயந்திரமூடாகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது அவதானத்துடன் செயற்படுமாறும், அவற்றைப் பயன்படுத்துவோருக்கு லங்கா க்ளியர் நிறுவனம் அறிவுறுத்தல் விடுக்கிறது. அவர்கள் கவனம் செலுத்த வேண்டிய சில முக்கிய விடயங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதி கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படுத்தப்படும் தன்னியக்க இயந்திரத்தில் அநாவசியமான கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை, கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கு முன்னர் ஆராயுங்கள். தன்னியக்க இயந்திரமூடாகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகையில், உங்களைச் சூழவுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள். சந்தேகத்துக்கிடமான பொருள் அல்லது நபர்கள் தொடர்பில், வங்கியின் பாதுகாப்புப் பிரிவு அல்லது பொலிஸாருக்கு அறிவியுங்கள். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தும் அனைவரும், தமது அட்டைக்குரிய வங்கியில், கொடுக்கல் வாங்கலுக்கான குறுந்தகவல் அறிவித்தலைச் செயற்படுத்திக்கொள்ளுங்கள் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (கு)

# தவிசாளர் தலைமறைவு

கொழும்பு, பெப். 7

பதுளையிலுள்ள 'எல்ல' என்ற உல்லாசப் பிரயாணிகள் தகவல் அறியும் மத்திய நிலையப் பொறுப்பாளர் தாக்கப்பட்டமை, நிலையத்தின் உடமைகள் சேதமாக்கப்பட்டமை, உயர்ரக மரத் தளபாடங்கள் கொண்டு செல்லப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில், ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இதில் தொடர்பு பட்டுத் தலைமறைவாகியுள்ள பிரதேச சபைத் தலைவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது. அந்த நிலையத்துக்குள் புகுந்த குழுவினர், நிலையப் பொறுப்பாளரைத் தாக்கி அலுவலர்களைத் திட்டி, எச்சரித்துச் சென்றுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவர், ஆபத்தான நிலையில் பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு)

# மாகாண சபைத் தேர்தல் எப்போது எனத்தெரியாது

## அமைச்சர் சாகல கைவிரிப்பு

கொழும்பு, பெப். 7

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பல கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இது எப்பொழுது நடைபெறுமென்று உறுதியாகக் கூறமுடியாது. கட்சித் தலைவர்களே இந்த விடயம் தொடர்பில் தீர்மானிக்கவேண்டும்.



இவ்வாறு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

மொரவக்க நாயமுல்ல பகுதியில் சீரமைக்கப்பட்ட வீதியைக் கடந்த சனிக்கிழமை அமைச்சர் திறந்து வைத்து உரையாற்றினார்.

அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இது மிக முக்கியமான வருடம். இது தேர்தல் ஆண்டு. இந்த வருடம் அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது. அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றோம். மாகாண சபைத் தேர்தலை நடத்தும் பொருட்டு நாடாளுமன்றினுள் ஒரு சில செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதுவரையில் கிராமங்களை அபிவிருத்தி செய்யவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம்.

இந்த ஆண்டு சவால்கள் மிகுந்த ஆண்டு. 52 நாள்கள் இந்த நாட்டில் நிலவிய குழப்பநிலை காரணமாக ஏற்பட்ட அனைத்து காலதாமதங்களையும் நிவர்த்திச் செய்து முன்னோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் எமக்குள்ளது.

தற்போது இளையோர் பலர் வேலை தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கவேண்டும் - என்றுள்ளது. (த)

## ஹெரோய்ன் மாத்திரைகளுடன் பதுளையில் இருவர் கைது



பதுளை, பெப். 7

ஹெரோய்ன் போதை மாத்திரைகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் பதுளையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தின் பாண்டிருப்பு மற்றும் நிந்தவூர் பகுதிகளிலிருந்து பதுளைக்கு அவை கடத்தப்பட்டதாக விசாரணை களைக் கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் பயணித்த உந்துருளியைச் சோதனைக்குட்படுத்திய போது 9 கிராம், 925 மில்லிக்கிராம் எடையுள்ள ஹெரோய்ன் போதைப் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன. அவற்றின் பெறுமதி எட்டரை இலட்சம் ரூபா என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## மருந்துகளை இறக்குமதி செய்ய ஏற்பாடு

கொழும்பு, பெப்.7

மருத்துவமனைகளில் பற்றாக் குறையாகக் காணப்படும் 25 வகைக்கும் மேற்பட்ட மருத்துக்களை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

புற்றுநோய், சிறுநீரக நோய் ஆகியவற்றுக்கான மருந்துகளை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர், வைத்தியர் லால் பனாப்பிட்டிய தெரிவித்துள்ளார். 4 வகை மருந்துகள் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும், ஏனைய மருந்து வகைகளையும் விரைவாக இறக்குமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## ராட்டினம் உடைந்து தாயும் மகளும் சாவு

கொழும்பு, பெப்.7

தனியார் பூங்கா ஒன்றில் உள்ள ராட்டினம் உடைந்து விழுந்ததில் தாயும், மகளும் உயிரிழுந்தனர். சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். கம்பஹா, நைவல பகுதியில் உள்ள பூங்கா ஒன்றிலேயே கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

விபத்தில் சம்பவ இடத்தில் 47 வயதுடைய தாய் உயிரிழந்ததுடன் பலத்த காயங்களுடன் 13 வயது மகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சிகிச்சை பயனின்றி மகளும் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் குறித்த பூங்காவின் உரிமையாளர் உட்பட 6 பேரை வெயங்கொட பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்தனர். சந்தேகநபர்களை அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## கசிப்பு உற்பத்திசெய்யும் இடம் பெருந்தோட்டத்தில் சிக்கியது

### 2,300 போத்தல்கள் மீட்பு: நால்வர் கைது

கொழும்பு, பெப். 7

மேல்மாகாணம் பெருந்தோட்டப் பகுதியில், வீடொன்றுக்குள் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சிக்கியுள்ளது. அங்கு காய்ச்சப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட 2ஆயிரத்து 300 போத்தல்கள் கசிப்பு மீட்கப்பட்டது. எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேல்மாகாணம் திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை டெவான் பகுதி வீடு ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இது இடம்பெற்றது. கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச் சாட்டில் அங்கிருந்த பெண், ஆண் இருவரும் கசிப்பைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)



## பழமைமிக்க கார்களின் ஊர்வலம்



இலங்கையின் 71ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு கண்டி நகரில் பழமைமிக்க கார்களின் ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலம் கண்டி யட்டிநுவர வீதியில் கச்சேரிக்கு முன்னாள் ஆரம்பித்து நகரிலுள்ள முதன்மை வீதிகளூடாக நடைபெற்றது. (த)

## பாதாள உலகக்குழுத் தலைவர் உட்பட 25 பேர் டுபாயில் கைது

### இலங்கை அரசியல்வாதிகள், பாடகர், நடிகரும் சிக்கினர்

கொழும்பு, பெப். 7

பாதாள உலகக் குழுத் தலைவரான மாகந்துர மதூஷ் உட்பட 25 பேர் டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக முக்கிய புள்ளி மாகந்துர மதூஷ். டுபாயில் தனது இரண்டாவது மனைவியின் முதலாவது குழந்தையின் முதல் பிறந்த நாளைக் கொண்டாடச் சென்றபோதே பாதுகாப்புதரப்பின் கைகளில் சிக்கிக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து சென்றவர்களே பிரபல பாடகர் அமல் பெரேரா, அவரது புதல்வரும் பாடகருமான நதீமால், நடிகர் ரயன் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் இருவர் உட்பட்ட 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அடங்குவர்.


டுபாய் மற்றும் இலங்கைப் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாதாள உலகக் குழு உறுப்பினர்களான கெசல்வத்த தினுக மற்றும் கஞ்சிபானை இம்ரான் ஆகியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய சமரசிங்க ஆராச்சிலாகே மதூஷ் லக்சித எனும் மாகந்துர மதூஷ் பாதுகாப்புப் பிரிவினர்களிடம் இருந்து தப்பித்துக் கடந்த காலங்களில் வெளிநாட்டில் இருந்துள்ளார். எனினும், இவர் பல முறை நாட்டுக்குள் வந்து சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒளிப்படம் ஒன்று முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டப்படி இவர்களை நாடுகடத்த முடியாதென்று சொல்லப்படுகிறது. ஆனால் அரபு நாட்டின் சட்டங்கள் இவர்கள் மீது பாயலாம். எனினும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் கடும்போக்கில் இருப்பதால் இவர்களை இலங்கைக்குக் கொண்டுவர இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கட்டுள்ளன. இதற்கென்று சிறப்புக் குழுவொன்று கொழும்பிலிருந்து டுபாய் நோக்கிச் செல்லவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)




பங்களாதேஷில் உள்ள ரொகிங்யர்கள் அகதி முகாமுக்கு அண்மையில்பயணம்செய்தஹோலிவூட் நடிகைஏஞ்சலினா ஜோலி, அங்கு சிறப்புரை ஆற்றியுள்ளார்.


# மறைகிறது இமயம்!

காத்மண்டு.பெப்.7

பருவநிலை மாற்றம் காரணமாக 21ஆம் நூற்றாண்டின் இறுதியில் (2100ஆம் ஆண்டில்) இமயமலையின் ஒருபகுதி காணாமல் போகக்கூடும் என்று அண்மையில் வெளியான அறிக்கை ஒன்று எச்சரிக்கிறது. 'மலை அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த பன்னாட்டு மையம்' என்ற அமைப்பின் சார்பில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. அதில், 'தொடர்ந்து வெளியிடப்படும் கார்பன் டை ஒக்சைட் அளவால் உலகளவில் வெப்பம் அதிகரித்து வருகிறது. இது இவ்வாறே தொடர்ந்தால் பனிபடர்ந்துள்ள இமயமலையின் ஒருபகுதி இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உருகிக்காணாமல் போகும் நிலை ஏற்படும். வெப்பநிலை அதிகரித்து வருவதால் இமய மலைப் பிராந்தியத்தைச் சுற்றி உள்ள இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் பருவநிலைமாற்றம் சார்ந்து மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும். இது கவலையளிக்க கூடிய வகையில் உள்ளது' என்று கூறப்பட்டுள்ளது.



# அமெ.வுடனா…
# நழுவி ஆயுதம்…



மொஸ்…
ரஷ்ய…
முற…
குவதற…
ஆண்…
எங்கள…
கேய்…

"தரையில் 500கிலோமீற்றர்தூரம்வரைசென்றுதாக்கும் ஏவுகணையை அமெரிக்கா ஏற்கனவே தயாரித்து வருகிறது. இவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. அமெரிக்கா ஒப்பந்த விதிகளை மீறிவிட்டது' என ஷோகு தெரிவித்தார். இந்த மாதிரியான சூழலில், அமெரிக்காவைப் பழிவாங்கும்நடவடிக்கையைமேற்கொள்ள, பாதுகாப்புத் துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட்டுள்ளார் ஷோகு என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரஷ்யாவின் இந்த அறிவிப்புக் குறித்து அமெரிக்கா பதில் அளிக்கவில்லை. ரஷ்யாவின் இந்தத் தனித்த போக்கு உலக நாடுகளைக்கவலைக்குள்ளாக்கியிருப்பதாகப்பன்னாட்டு அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.

**பின்னணி**

2ஆம் உலகப்போரில் ஜேர்மனிக்கு எதிராக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்று சேர்ந்து போரிட்டன. போர் முடிவுக்கு வந்த பிறகு அமெரிக்கா-ரஷ்யா இடையே நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற போட்டி ஏற்பட்டது. இதனால் இரண்டு நாடுகளும் ஆயுதங்களை அதிகளவில் உற்பத்தி செய்தன. அணுகுண்டுத் தயாரிப்பிலும், அவற்றைக்காவிச் சென்று ஏவும் ஏவுகணைத் தயாரிப்பிலும் அக்கறை காட்டின. எந்த நேரத்திலும் இந்த இரண்டு நாடுகளும்மோதிக்கொள்ளலாம்என்றஅச்சம்நிலவியது. இந்த நிலையில், ரஷ்ய அதிபராக இருந்த கோர்பசேவ்வின் முயற்சியால் 1987ஆம் ஆண்டு அமெரிக்கா - ரஷ்யா இடையே அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் ஏற்படுத்

தப்பட…
முதல்…
கிலோ…
சென்ற…
வாய்ந்…
கணை…
தக் கூ…
ஆண்…
வர் மி…
சாவ். …
அதிபர்…
இந்த ஒ…
முத்தி…
குறுகிய…
அணு…
ளைத்…
துவது…
ரித்த …
களை …
தொடர்…
ஆயுத…
கப்பட…
ஆனா…
இந்த ஒ…
எனவே…
தாகவு…

# கிம்மைச் சந்திக்கும் திகதியை அறிவித்தார் டொனால்ட் ட்ரம்ப்

வோஷிங்டன்.பெப்.7

வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் உடனான இரண்டாவது சந்திப்பு வியட்நாமில் இந்த மாத இறுதியில் நடைபெறும் என்பதை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உறுதி செய்தார். அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிடுவது மற்றும் வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது போன்ற விவகாரங்க்ளில் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு நீடிக்கிறது. இதற்குத் தீர்வு காண 2ஆவது தடவையும் சந்தித்துப் பேச்சு சடந்துவதற்கு ட்ரம்ப் - கிம் இருவரும் பரஸ்பரம் விருப்பம் தெரிவித்தனர்.

அதன்படி இவர்களின் சந்திப்பு இந்த மாத இறுதியில் வியட்நாமில் நடக்கலாம் எனவும், இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் பரவலாகப் பேசப்பட்டது. இந்த நிலையில், வடகொரிய தலைவருடனான



சந்திப்பு நடைபெறும் திகதியை ட்ரம்ப் உறுதி செய்தார். அமெரிக்காவின் நாடாளுமன்ற கூட்டு அமர்வில் உரையாற்றிய ட்ரம்ப், வடகொரியா விடயத்தில் இன்னும் நிறைய வேலைகள் இருப்பதாகவும், ஆனாலும் வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன்னுடன் நல்ல நட்புறவு நீடிப்பதாகவும் கூறியதுடன், வியட்நாமில் எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் வடகொரியத் தலைவரைச் சந்தித்து பேச உள்ளதாக அறிவித்தார்.

**பின்னணி**

ஆணு ஆயுதங்களைத் தயாரித்து, ஏவுகணைகள் பலவற்றைப் பரிசோதித்த வடகொரியாவுடன் அமெரிக்க மோதல் போக்கைக் கடைப்பிடித்து வந்தது. எதிர் எதிர்த் துருவங்களாக விளங்கி வந்த ட்ரம்ப் - கிம் இருவரும் கடந்த ஆண்டு ஜீன் மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின்போது இரண்டுதரப் பாராலும் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

அதில் கொரியத் தீபகற்பப் பகுதியில் அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிப்பதற்காக உழைப்பது என்றும் வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது என்றும் ட்ரம்பும் கிம்மும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

இந்த இரண்டு விடயங்களிலும் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் கிட்டவில்லை.



# வெனிசுலாவி…

ஹரகஸ், பெப்.7

வெனிசுலா அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் குவான் குவைடோ வெனிசுலாவின் முதன்மை வாத்தக நிறுனங்கள் சிலவற்றுடன் பேச்சுக்கள் நடத்திவருகிறார். வெனிசுலாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவே இந்தப் பேச்சுக்களை அவர் முன்னெடுத்துவருவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மறபுறத்தில் குவைடோவின் வேண்டுகோளுக்கு இணங்க நிவாரணப் பொருள்களைக் கொலம்பியா - வெனிசுலா எல்லைப்பகுதிக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளது. இந்த நிவாரணப்பெருள்களை வெனிசுலா அதிபர் மதுரோ ஏற்றுக்கொள்வாரா?



இந்தியாவின் கொல்கத்தாவில் புறநகர்ப்பகுதி ஒன்றிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் அறுவடை செய்யப்பட்ட நெல் உலர்த்துவதற்காகப் பரவி விடப்பட்டுள்ளது. அதற்கு மத்தியில் குழந்தைகள் சிலர் பந்தடித்து விளையாடுகின்றனர்.

# பிரான்சில் குடிய…

பாரிஸ்.பெப்.7

பிரான்சில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் தீ ப… குழந்தை உள்பட 10பேர் உடல்கருகிச்சாவடைந்த… தலைநகர் பாரிசின் தென்மேற்குப் பகுதியில் அ… லாங்கர் வீதியிலுள்ள பழமைவாய்ந்த அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றிலேயே இந்தத் தீப்பிடிப்புச் சம்பவம் நடந்தது. 1970ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட 8 மாடிகளைக் கொண்ட இந்தக்குடியிருப்பில், அதன் 7ஆவது தளத்தில் நேற்றுமுன்தினம்நள்ளிரவு திடீரெனப் பற்



# ான ஒப்பந்தத்திலிருந்து
# தம் தயாரிக்கிறது ரஷ்யா

மொஸ்கோ.பெப்.7

ரஷ்யா - அமெரிக்கா இடையே இருந்து வந்த அணு ஆயுத ஒப்பந்தம் முறிவடைந்திருப்பதைத்தொடர்ந்துபுதியஆணுஆயுதத்தைஉருவாக்குவதற்குத்திட்டமிட்டுள்ளதாகரஷ்யாதெரிவித்துள்ளது. 'அடுத்தஇரண்டு ஆண்டுகளில் ஏவுகணை சார்ந்த புதிய நிலப்பரப்பை உண்டாக்குவதே எங்களின் கடமை' என ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷோகு தெரிவித்தார்.



தப்பட்டது. இதன்படி 500 முதல் 5ஆயிரத்து 500 கிலோமீற்றர்தூரம்வரை சென்று தாக்கும் திறன் வாய்ந்த அணு ஆயுத ஏவுகணைகளைப்பயன்படுத்தக் கூடாது. 1987ஆம் ஆண்டு சோவியத் தலைவர் மிகையில் கோர்பச்சாவ், மற்றும் அமெரிக்க அதிபர் ரோன்ல்ட் ரீகன் இந்த ஒப்பந்தத்தில் கையமுத்திட்டனர். இதன்படி குறுகிய மற்றும் நடுநிலை அணுஆயுதஏவுகணைகளைத் தயாரிப்பதை நிறுத்துவது, ஏற்கனவே தயாரித்த பல பல ஆயுதங்களை அழிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுமே பெரும்பாலான அணு ஆயுதங்களை அழித்தன. புதிய ஆயுதங்களும் தயாரிக்கப்படவில்லை.

ஆனால், அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, இந்த ஒப்பந்தத்தை மீறி ரஷ்யா செயல்பட்டு வருவதாகவும், எனவே, இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறப் போவதாகவும் அறிவித்து வந்தார். குறிப்பிட்ட ஏவுகணைகளை ரஷ்யா அழிக்காவிட்டால் நாங்கள் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவோம் என்று அமெரிக்காவின் அயலுறவுத்துறைஅமைச்சரானமைக்பாம்பியோயும் கூறினார்.

நேட்டோ நாடுகளும் ரஷ்யா ஒப்பந்தத்தை மீறிச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டின. ரஷ்யா அந்த ஒப்பந்தத்தை மீறுவதாக கூறி, அதிலிருந்து தாங்களும் விலகுவதாக அமெரிக்கா அறிவித்தது. உடனே ரஷ்யாவும் ஒப்பந்தத்திலிருந்து விலகியது.



# தலிபான்கள் தாக்குதல் ஆப்கனில் 21 பேர் சாவு

காபூல்.பெப்.7

ஆப்கானிஸ்தானில்தலிபான்ஆயுதாரிகள் நடத்திய இரண்டு தாக்குதல் சம்பவங்களில் 11 பொலிஸார் உட்பட 21பேர்சாவடைந்தனர். ஆப்கானிஸ்தானின் வடக்கேயுள்ள பஹ்லான் மாகாணத்தில், பஹ்லானி மர்காஸி மாவட்டத்தில் முதலாவது தாக்குதல் நிகழ்ந்துள்ளது. மகிழுந்தில்வந்ததலிபான்கள், அங்குள்ள பொலிஸ் சோதனைச்சவாவடியில்கடமையிலிருந்த பொலிஸாரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர்.

இதனால், அங்கிருந்த 11 பொலிஸாரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். இரண்டாவது தாக்குதல், ஆப்கானிஸ்தானின் சமங்கான் மாகாணத்தில் உள்ள டாரா சூபி மாவட்டத்தில் நடந்தது.

அரசுக்கு ஆதரவான இளைஞர்படையினர் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த தலிபான் ஆயுததாரிகள் மூவர், அவர்களை நோக்கிக் கைக்குண்டுகளை வீசினர். இதில்அந்தப்படையைச்சேர்ந்த 10பேர் சாவடைந்தனர்.

# சர்வாதிகாரிகளை ஆதரிக்கிறது அமெ. ஈரானின் அயலுறவு அமைச்சர் கருத்து



தெஹ்ரான்.பெப்.7

மத்தியகிழக்கிலுள்ளசர்வாதிகாரிகளையும், ஆயுததாரிகளையும் அமெரிக்கா ஆதரிக்கிறது என்று ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. கடந்த புதன்கிழமையன்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆற்றிய உரையில், "ஈராக்கில் அமெரிக்காவின் இராணுவத்தளம் இருப்பது அவசியம். அப்போதுதான் ஈரானின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியும். ஈரான்மிகவும்ஆபத்தானது" என்று குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஈரான் தற்போது கருத்து வெளியிட்டுள்ளது. ஈரானின் அயலுறவுத்துறைஅமைச்சர்முகமத் ஜாவத்சாரிப்தனதுகீச்சகப்பக்கத்தில், "மத்தியகிழக்குநாடுகளில்அமெரிக்க சர்வாதிகாரிகளையும், ஆயுததாரிகளையும் ஆதரிக்கிறது. அமெரிக்காவை ஆதரிக்கும் அவர்கள்தான் நமது பிராந்தியத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்"என்றுபதிவிட்டுள்ளார்.

**பின்னணி**

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் விமர்சித்தார். இதனைத் தொடர்ந்து ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் கையெமுத்திட்டிருந்தபிறநாடுகள்ஈரானுக்கு ஆதரவுதெரிவித்தன. ஈரானுடனான அணுசக்திஒப்பந்தத்திலிருந்துவெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. இதனால் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முரண் நீடிக்கிறது.

# ாவில் தொடர்கிறது பதற்றம்

ரும் அந்த
குவைடோ
ங்கள் சில
சுலாவின்
ச்சுக்களை
டகங்கள்
டோவின்
பொருள்க
ப்பகுதிக்கு
ளப்பெருள்
ள்வாரா?

வெனிசுலாவுக்குள் இவைஎவ்வாறு கொண்டுசெல்லப்படும்? என்று பல கேள்விகள் எழுந்திருக்கின்ற நிலையில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஊடாக மதுரோவின் அனுமதி இல்லாமல் வெனிசுலா மக்களுக்கு நிவாரணப் பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய சாத்தியங்களைஆராய்வதாகக்குவைடோதரப்புத்தெரிவித்தது.


**பின்னணி**

வெனிசுலாவின் முன்னாள் அதிபர் சாவோஸ் அமெரிக்காவின் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடியவர். அவருக்குப் பின்னர் வெனிசுலாவில் ஆட்சியமைத்த நிகோலஸ்மதுரோவுடன்அமெரிக்காவின்முரண்நீடிக்கிறது. வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் குவைடோவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் வெனிசுலாவின் உள்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்துகிறது அமெரிக்கா. வெனிசுலாவில்ஏற்பட்டுள்ளபொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி குவைடோ வெனிசுலா அரசுக்கு எதிராகப் போராடுகிறார். தன்னை வெனிசுலாவின் அதிபராகவும் அறிவித்தார். அமெரிக்கா அவருக்கு ஆதரவளித்ததுடன்வெனிசுலாஅரசுக்குப்பொருளாதார நெருக்கடிகளையும் ஏற்படுத்தியது. அமெரிக்காவின் வெனிசுலாமீதானதலையீட்டைரஷ்யாகண்டிக்கிறது. வெனிசுலாவின்இராணுவம்,நீதித்துறைஆகியனமதுரோவுக்குச்சார்பாகவே இருக்கின்றன.

# டியிருப்பில் தீ; 10 பேர் சாவு

ன்றில் தீ பரவியதில் ஒரு
வடைந்தனர். பிரான்ஸ்
டியில் அமைந்துள்ள எர்

றிய தீயாலேயே இந்தச் சாவுகள் சம்பவித்தன. மேல் தளத்துக்கு வேகமாகப்பரவியதீ அந்த அடுக்கு மாடிக்குடியிருப்பை சாம்பலாகியது. குடியிருப்பில் இருந்த பலரும் இதனால் பாதிக்கப்பட்டனர். 200க்கு மேற்பட்ட தீயணைப்புப் பணியாளர்கள் தீயணைப்புப் பணிகளில் ஈடுபட்டதன் முடிவில் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதுவரையில்இந்தத்தீயால்பாதிக்கப்பட்ட 10பேர் சாவடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்தகுடியிருப்பில்வசித்தபெண் ஒருவரைப்பொலிஸார்கைதுசெய்தனர். தீக்காயங்களுக்குள்ளான பலருக்கு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. சாவு எண்ணிக்கைமேலும்அதிகரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.



# 20 பெண்களில் ஒருவருக்கு பிறப்புறுப்பு சிதைக்கப்படுகிறது

நியூயோர்க்.பெப்.7

ஐக்கியநாடுகள்சபையின்கணக்கெடுப்புஒன்றின்படி 20பெண்களில்ஒருபெண்பிறப்புறுப்புச்சிதைப்புக்கு உள்ளாக்கப்படுகிறார் என்று கூறப்பட்டுள்ளது. உலகில் வாழும் 200 மில்லியன் பெண்களுக்கு, பிறப்புறுப்பின் வெளிப்புறம் வெட்டப்பட்டோ, மாற்றப்பட்டோ அல்லது நீக்கப்பட்டோ உள்ளது. இந்தச்செயலைநிறுத்தக்கோரி2012ஆம்ஆண்டில் ஐ.நாபொதுச்சபைதீர்மானம்நிறைவேற்றியிருந்தது. பிறப்புறுப்பு சிதைப்பு பல நாடுகளில் தடை செய்யப்பட்டு இருந்தாலும், ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் அது பழக்கத்தில் இருக்கிறது. இதுஆபிரிக்காவில்பரவலாகநிகழ்கிறது. ஐரோப்பா, வட மற்றும் தெற்கு அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் குடியேறிய சில சமூகங்கள் மத்தியிலும் இந்தப் பழக்கம் உள்ளது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பின் ஆய்வுப்படி ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள 29 நாடுகளில்இந்தப்பழக்கம்உள்ளது. பிரிட்டனில்இது தடைசெய்யப்பட்டாலும், கடைப்பிடிக்கப்படுவது அதிகரித்துள்ளது. உகாண்டாவிலிருந்து பிரிட்டன் சென்றுகுடியேறியபெண்தான்முதல்முதலாகஇந்த விடயத்தில் கைது செய்யப்பட்டார். இதற்கு மதம் சார்ந்தமூடநம்பிக்கையும்காரணம். பெண்களைத் திருமணத்துக்குத் தயார் செய்ய, ஆண்களின் உடலுறவுச் சுகத்தை அதிகரிக்கவெனப் பல மூடநம்பிக்கைகள் இதனுடன் பின்னிப் பிணைந்துள்ளன. பெண்ணின் பிறப்புச் சிதைப்பு செய்யப்படும் சமூகத்தில் அந்த பழக்கத்துக்கு உள்ளாகாத பெண்கள் அசுத்தமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்தப் பழக்கத்தைப் பெண்களுக்கு எதிரான வன்முறையாகவே உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மின்சாரக் கொள்ளையை தடுக்காத பின்னணி என்ன?

ஈபிடிபி கட்சியினர் பயன்படுத்திய கட்டடங்கள் மற்றும் அந்தக் கட்சியின் செயலர் நாயகமும் முன்னாள் அமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் முன்னாள் அமைச்சு அலுவலகமான சிறிதர் திரையரங்குக் கட்டடம் என்பவற்றின் மின்சாரக் கட்டண நிலுவை ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாகச் செலுத்தப்படாமல் இருக்கின்றது என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் மற்றும் அவரது கட்சியினரால் செலுத்தப்படவேண்டிய மின்சாரநிலுவை பற்றிய செய்தி வெளியாவது இது முதற்றடவையல்ல. பல லட்சம் ரூபா நிலுவை இருக்கும்போதே அது தொடர்பானதகவல்கள் வெளியாகி இருந்தன. ஆனால், அப்போதும் அதனை அறவிடுவதற்கு மின்சாரசபை நடவடிக்கை எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் தொடர்ந்தும் மின்சாரவிநியோகத்தை வழங்கிவருகின்றது.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் அவராலும் அவரது கட்சியினராலும் பயன்படுத்தப்பட்ட கட்டடங்களின் மின் பாவனை நிலுவையே இந்தக் கட்டணம். ஈபிடிபியால் வெளியிடப்பட்ட பத்திரிகை அலுவலகம் அமைந்திருந்த கட்டடம், மகேஸ்வரி நிதியம் அமைந்திருந்த கட்டடம் மற்றும் அமைச்சராக அவர் இருந்த காலத்தில் அமைச்சு அலுவலகமாக இருந்த சிறிதர் தியேட்டரின் மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட நிலுவையே இன்று கோடி ரூபாவையும் தாண்டி நிற்கிறது.

அதனைக் கட்டும்படி டக்ளஸ் தேவானந்தாவுக்கு மீண்டும் மீண்டும் பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும், தனது அரசியல் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அதனைச் செலுத்தாமல் இருந்து வருகிறார் அவர். மக்களின் வரிப்பணத்தை கொள்ளையடித்திருக்கும் அவரது இந்தச் செயல் குறித்து இன்றைய அரச தரப்பும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது விசனம் தரும் நகர்வு.

துணைப்படையாக ஈபிடிபி இயங்கிய காலங்களில் அது புரிந்ததாகச் சுமத்தப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை நடத்தாத இந்த அரசு, இதுபோன்று பட்டப் பகலில் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் செயலையும் கண்டும் காணாமல் இருந்து வருவது மோசமான கண்டனத்துக்குரிய நடவடிக்கை.

பொதுமகன் ஒருவர் ஒருசில மாத மின்சார வாடகையைச் செலுத்தவில்லை என்றால், சிவப்பு அறிவிப்புக்கூட தனியாக விடுக்காமல் மின் இணைப்பைத் துண்டிக்கும் மின்சார சபை, கோடிக்கணக்கான ரூபாய் நிலுவை செலுத்தப்படாமல் இருந்த போதும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் மீதும் அவரது கட்சியின் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மாத்திரமல்ல, தொடர்ந்தும் மின்சார விநியோகத்தைக்கூடச் செய்வதும் கண்டனத்துக்குரியது.

அரசியல்வாதிகளுக்குப் பயந்து மின்சார சபை இப்படி நடந்துகொள்கிறது என்றும் இதைச் சொல்ல முடியாது. ஏனெனில் வேறு அரசியல்வாதிகளின் மின்சார நிலுவைகள் விடயத்தில் இறுக்கமான நடைமுறையை மின்சாரசபையினர் பின்பற்றியிருக்கிறார்கள் என்பது கடந்தகால உண்மை. அதனால், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு அவர் அரசியல்வாதியாக இருக்கிறார் என்பது மட்டுமே காரணம் என்று நம்பிவிட முடிய வில்லை.


அத்தகையதொரு நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இருந்து மின்சார நிலுவையை அறவிடுவதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுக்காததன் பின்னணியில் அதன் அதிகாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் இரகசிய ஏற்பாடுகள் இருக்கின்றனவோ என்கிற சந்தேகமும் ஏற்படுகின்றது.

வீடுகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தை உரிய நேரத்தில் ஆள்களை அனுப்பிக் கணக்கிடாமல், ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலத்தின் பின்னர் மின்சார அலகுகளை ஒரு சேரக் கணக்கிட்டு, கூடுதல் அலகுகளாகக் கணித்து கூடுதல் கட்டணத்தைப் பொதுமக்களிடம் இருந்து வறுகும் மின்சார சபை அதை இதுபோன்ற அரசியல்வாதிகள் ஏப்பம் விடாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். ஏனெனில் அது மக்கள் பணம். எனவே அதனை வசூலிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை மின்சார சபை உடனடியாக எடுக்கவேண்டும். இல்லையேல் மக்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழ வேண்டியிருக்கும்.

# “கூட்டமைப்பை உடைக்காமல், மக்களின் மனம் அறியவுள்ளேன்”

> எதற்காக வடக்குக் கிழக்கு இணைப்புக் கேட்டோம்? எதற்காக எமக்கிருக்கும் உள்நாட்டு சுயாட்சி உரித்தை வலியுறுத்தினோம்? எதற்காக ‘கூட்டாட்சி’ கேட்டோம் என்பதை மறந்து விடுவார்கள். ஆனால், ஒற்றுமையாய் இருப்பார்கள். இந்த ஒற்றுமையையா நீங்கள் ஒற்றுமை என்று குறிப்பிடுகின்றீர்கள்? கொள்கையற்ற, சுயநலம் கருதிய, மக்கள் மேல் கரிசனையில்லா ஒற்றுமை இது. இவ்வாறான ஒற்றுமையையே நாம் இதுகாறும் பார்த்து வந்துள்ளோம். நாம் நினைத்ததே தமிழர்களின் ஆசையும் வேணவாக்களும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடமாகாண சபையின் முதலமைச்சராக அரசியலுக்குள் நுழைந்தவர் சி.வி.விக்னேஸ்வரன். ஏனைய மாகாண சபைகளுக்கு முன்மாதிரியாக இருக்கும் நோக்கில், ஏராளம் எதிர்பார்ப்புக்களுடன், நீண்ட காலங்களின் பின்பு உருவாக்கப்பட்ட அந்த மகாகணசபை ஊழல், மோசடிகள் நிறைந்த சபையாகவும் எவ்வித பயனும் அற்ற சபையாகவும் தனது ஆயுளை முடித்துக்கொண்டது வரலாற்றுப் பதிவு. இந்த விடயத்தில் பல விமர்சனங்களுக்குச் சொந்தக்காரர் விக்னேஸ்வரன். முதலமைச்சர் பதவி முடிந்த கையுடன் தனிக் கட்சியை ஆரம்பித்த அவர் மீது மேலும் விமர்சனங்கள் எழுந்தன. முதலமைச்சராக இருந்த காலத்தில் கேள்வியையும் அதற்கான பதிலையும் தானே தயாரித்து ஊடகங்களுக்கு அனுப்பிவருவது அவருடைய வழமை. அதற்கேற்ப அவரால் தற்போது ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கேள்வி - பதில் இது. ‘‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நான் உடைக்க மாட்டேன்” என்றும் ”கூட்டமைப்பை தன் வழியே செல்லவிட்டு மக்களின் உண்மையான மனம் அறிய பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளேன் என்றும் இதில் அவர் விவரிக்கிறார். அத்துடன் ஒற்றுமையாகச் செயற்பட முடியாதவர் என்று தன் மீது முன்வைக்கப்பட்டிருக்கும் விமர்சனங்களில் ஒன்றுக்கும் விடையளிக்கிறார். அவருடைய கேள்வியும் பதிலும் அப்படியே தரப்படுகிறது.



**கேள்வி:** ஒற்றுமை பற்றிப் பேசிக்கொண்டு புதியதொரு கட்சியைத் தொடங்கியுள்ளீர்கள்? நீங்கள் தமிழர் ஒற்றுமையைக் குலைப்பதை விட எந்த அடிப்படையில் உங்கள் கட்சி மற்றவற்றுடன் வித்தியாசப்படும் என்று கூறலாமா?

**பதில்:** ஒற்றுமை என்றால் என்ன? கொள்கை எதுவாக இருந்தாலும் ஒற்றுமையைக் காக்க எமது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் ஒருமித்துக் கையுயர்த்த வேண்டும் என்று எண்ணுகின்றீர்களா? அவ்வாறான ஒற்றுமை இதுவரையில் எதைச் சாதித்தது? அதாவது தான் தோன்றித்தனமாகக் கட்சியின் தலைமைத்துவம் நடந்து கொண்டாலும் ஒற்றுமையை முன்னிட்டு வாய் மூடிக்கொண்டு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றீர்களா? எமது ஒற்றுமை என்பது மற்றவர்கள் மதிப்பதான ஒற்றுமையாக இருக்க வேண்டும். பதவியை நீடித்து வைத்திருப்பதற்காகவும், பயணங்கள் பெறுவதற்காகவும், பல்சுவை உண்டிகளை உண்பதற்காகவும், பல்வித தனிப்பட்ட நன்மைகளைப் பெறுவதற்காகவும் நாங்கள் ஒற்றுமைப்பட்டால் எம்மை எவரும் மதிக்கமாட்டார்கள். எமது எதிரிகள் தங்களுக்குள் சிரித்துக்கொண்டு எம்மை மதிப்பது போல் பாசாங்கு செய்வார்கள். ஏன் என்றால் அவர்களுக்கு எங்கள் வலுவின்மை புரிந்திருக்கும். எதனைக் கொடுத்தால் அல்லது எதனைத் தருவதாகக் கூறினால் தமிழ்த் தலைவர்கள் பணிந்து விடுவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும்.

**இது ஒரு கதை**

அரசவை (ஸ்டேட் கவுன்சில்) காலத்தில் (1948ஆம் ஆண்டுக்கு முன்னர்) ‘சிங்களவர் மட்டும்’ அமைச்சரவை ஒன்றை அரசவையில் ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று அறிவதற்காக அறிஞர்களைத் தேடினார். எல்லோரும் கணிதப் பேராசிரியர் சி. சுந்தரலிங்கமே அதற்கு உகந்தவர் என்று கூறினார்கள். அடங்காத் தமிழர் முன்னணியைத் தாபித்த அதே ‘சுந்தர்’ தான் அவர். “நீ தான் கணக்கில் புலி. எங்கே ‘சிங்களவர் மட்டும்’ அமைச்சரவையை அமைக்க என்ன செய்ய வேண்டும் என்று சொல்லு பார்ப்போம்?" என்று கேட்டார் டி.ஸ்! சொல்லிக் கொடுத்தார் சுந்தர்! டி.பி.ஜெயதிலகவின் கீழ் ‘சிங்களவர் மட்டும்’ அமைச்சரவை உதயமாகியது. தமிழர்களோ, மற்றவர்களோ அதில் இடம் பெறவில்லை. பின்னர் எவரோ டி.எஸ். சேனநாயக்காவிடம் “என்ன நடந்தது?” என்று கேட்டிருக்கின்றார்கள். ‘நீ அழகாய் இருக்கின்றாய் என்று மயிலிடம் கூறினேன். உடனே

அது தனது சிறகொன்றைத் தந்து விட்டது' என்றார் டி.எஸ். இவ்வாறு தான் எங்களுக்குப் பின்புறமாக நின்று சிரித்துக் கொண்டு எங்களைக் கொண்டு சிங்கள அரசியல்வாதிகள் தமது காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றார்கள். அதே நேரம் எமது ஒற்றுமையையும் அவர்கள் குலைத்து வருகின்றார்கள். எமது தமிழ்த் தலைமைகள் எவ்வளவு புத்திக் கூர்மை இருப்பினும் மாய்யாலத்துக்கு அடிமைப்படக் கூடியவர்கள் என்று தெரிகின்றது. கணிதத்தில் மேம்பட்ட, கல்வியில் மேம்பட்ட, வழிகாணும் திறம் படைத்த எம்மவர்கள் பசப்பு வார்த்தைகளுக்கும் மாய்மாலங்களுக்கும் எடுபட்டுப்போகின்றார்கள். அதற்குக் காரணம் அவர்களிடம் குடிகொண்டிருக்கும் ஆணவமும் செருக்கும். இவ்வாறானவர்களை நாம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பினால் அவர்களுக்கு எமது ஒற்றுமை என்பது ஒரு பொருட்டாகாது. அவர்கள் எமது ஒற்றுமையை வைத்துக்கொண்டு ஒருவருக்குப் பத்து இலட்சமா? நூறு இலட்சமா? என்று பேரம் பேசவே விரும்புவார்கள். தமிழர்களின் வருங்காலம் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

### எந்த ஒற்றுமையைக் குறிப்பிடுகின்றீர்கள்?

எதற்காக வடக்குக் கிழக்கு இணைப்புக் கேட்டோம்? எதற்காக எமக்கிருக்கும் உள்நாட்டு சுயாட்சி உரித்தை வலியுறுத்தினோம்? எதற்காக 'கூட்டாட்சி' கேட்டோம் என்பதை மறந்து விடுவார்கள். ஆனால், ஒற்றுமையாய் இருப்பார்கள். இந்த ஒற்றுமையையா நீங்கள் ஒற்றுமை என்று குறிப்பிடு கின்றீர்கள்? கொள்கையற்ற, சுயநலம் கருதிய, மக்கள் மேல் கரிசனையில்லா ஒற்றுமை இது. இவ்வாறான ஒற்றுமையையே நாம் இதுகாறும் பார்த்து வந்துள்ளோம். நாம் நினைத்ததே தமிழர்களின் ஆசையும் வேணவாக்களும். எமது தீர்மானங்களுக்கு அப்பால் தமிழர்களுக்கு எதுவும் தேவையில்லை. கொள்கைகள் என்பன தேர்தல் அறிக்கைகளை அலங்கரிப்பதற்கே. நடைமுறைக்கு அவை சாத்தியமில்லை என்ற எண்ணத்தில்; தான்தோன்றித்தனமாக எம்மை வழிநடத்துவோரை நாம் வாய் பொத்தி, கைகட்டி நின்று வரவேற்க வேண்டும். எது நடந்தாலும் அதைத்தான் நாம் செய்ய வேண்டும். அதைத்தானா ஒற்றுமை என்று கூறுகின்றீர்கள்?

இந்த ஒற்றுமை எங்களை எங்கு கொண்டு செல்லும் என்று சிந்தித்தீ ர்களா? சிலரின் சொகுசுக்கும், மவுசுக்கும் பலரின் அவலத்துக்கும், அஸ்தமனத்துக்குமே அந்த ஒற்றுமை வழிவகுக்கும்.

### கூட்டமைப்பை உடைக்கமாட்டேன்

முல்லைத்தீவு மாவட்டம் பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்புக்கு ஆளாகி வருகிறது. எதற்காக மகாவலி அதிகாரசபையின் ஆதிக்கத்தை முல்லைத்தீவு நகரம் வரையில் விரிவாக்கினீர்கள் என்று கேட்க எமது பிரதிநிதிகள் எவரும் இல்லை. சிங்களக் குடியேற்றங்கள் பற்றி வலுவான நடவடிக்கைகள் எடுக்க, வழக்குகளைப் பதிய எவரும் இல்லை. ஏன் என்றால் அவற்றை எவராவது செய்ய முன்வந்தால் எமது ஒற்றுமை குலைந்து விடும் என்கிறார்கள். எமக்குப் படியளக்கும் கொழும்பு நகரக் கனவான்களின் மனதை நாம் புண்படுத்திவிடுவோம் என்கிறார்கள். அதனால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நான் உடைக்க மாட்டேன் என்று கூறி அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றேன். அதாவது தேசியக் கட்சிகள் போல் இப்போது பேசத் தலைப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தன் வழியே செல்லவிட்டு மக்களின் உண்மையான மனம் அறியும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளேன். நான் தமிழர் ஒற்றுமையைக் குலைக்க வரவில்லை. ஆனால் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் அறியாமையைக் குலைத்து வருகின்றேன். கொள்கையின் அடிப்படையில் மக்கள் நலனுக்காக ஒன்றிணைந்து போராடுவதாகவே உண்மையான ஒற்றுமை அமைய வேண்டும் என்ற பாடத்தைப் புகட்டி வருகின்றேன். தற்போதைய ஒற்றுமையானது அதிகாரத்தை ஓர் இடத்தில் குவித்து விட்டிருக்கிறது. அந்த அதிகார மையம் இட்டதே சட்டம். எவரும் கேள்விகள் கேட்க முடியாது. இவ்வாறு அதிகாரம் ஓர் இடத்தில் தேங்கியதால் ஏற்பட்ட எதிர்மாறான விளைவை ஜே.ஆரின் காலத்தில் கண்டுள்ளோம். எம்.ஆரின் (மகிந்த ராஜபக்ச) காலத்தில் கண்டுள்ளோம். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலத்திலும் கண்டு வருகின்றோம். அதிகாரம் மையப்படுத்தப்படுவதால் பாதிப்பு மக்களுக்கே. ஜனநாயகம் ஒதுக்கி வைக்கப்படுகிறது.



> மரபு ரீதியான கட்சிகளில் நாம் காணும் ஜனநாயக மறுப்புப் போன்ற குறைபாடுகளை நாம் நீக்கியுள்ளோம். இதனால் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளோம். நேர்மையான, பொருத்தமான தகைமையுடைய உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வழி செய்துள்ளோம். ஊழல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

### மற்றைய கட்சிகளில் இருந்து மாறுபடும் விதம் இது!

நாம் எவ்வாறு மற்றக் கட்சிகளிலிருந்து மாறுபடுகின்றோம் என்று கேட்டுள்ளீர்கள். முதலாவது, நாம் எமது யாப்பின் பின்படி கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் ஒரு கட்டமைப்பை உண்டாக்கியுள்ளோம். முதல் வருடத்தில் மட்டும் பிரதிநிதிகளை நான் தேர்ந்தெடுப்பேன். அதன் பின்னர் வட்டாரம், தொகுதி, மாவட்டம் என்றவாறு கீழிருந்து மேல் வரக்கூடியதாக அடிமட்டத் தமிழ் மக்கள் நிர்வாக மட்டத்துக்கு உயர வழி செய்துள்ளோம். எங்கள் காலத்தில் எமக்கு உரிமைகள் கிடைக்குமோ தெரியாது. ஆனால் எம்முடைய காலத்தின் பின்னரும் எமது கொள்கையின் அடிப்படையில் எமது போராட்டத்தைக் கொண்டு நடத்தக் கூடியதாக எமது யாப்புத் தயாராக்கப்பட்டுள்ளது. எமது இளைஞர்கள் நாம் விட்ட இடத்திலிருந்து முன்னோக்கி எமது விடுதலைப் பயணத்தில் பயணிக்க நாம் வழி வகுத்துள்ளோம்.

### இரண்டாவது...

மரபு ரீதியான கட்சிகளில் நாம் காணும் ஜனநாயக மறுப்புப் போன்ற குறைபாடுகளை நாம் நீக்கியுள்ளோம். இதனால் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளோம். நேர்மையான, பொருத்தமான தகைமையுடைய உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வழி செய்துள்ளோம். ஊழல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கட்சிக்கு அப்பால் இருந்து எமக்கு அறிவுரை வழங்குவதற்குப் பொதுச் சமூக முக்கியஸ்தர்களை நியமித்துள்ளோம். அவர்கள் தேர்தலில் ஈடுபடமுடியாது. ஆனால் நிர்வாகப் பிறழ்வுகள், ஊழல்கள், பிழையான கொள்கைகள், வரப் போகும் அரசியல், பொருளாதார, சமூக இடர்கள் போன்ற பலவற்றைப் பற்றியும் எமக்கு அறிவுரை வழங்குவார்கள். தேர்தல் கால வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடவோ, பிறழவோ இந்த ஆலோசகர் சபை இடம் கொடுக்காது. ஆகவே காலத்துக்குக் காலம் மக்கள் அபிலாசைகளையும் எதிர்பார்ப்புகளையும் கண்டறிந்து உள்வாங்குவதற்கு எமது கட்சி ஒரு மக்கள் சக்தியாக இயங்குவதற்கு ஏதுவாக நம் கட்டமைப்பை அமைத்துள்ளோம்.

### மூன்றாவது...

மக்கள் நலன் சார்ந்த, ஆரோக்கியமான, குறுகிய, நெடுங்காலத் திட்ட வடிவமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். கூடுமான வரை இருமொழிப் பரிட்சயம் கொண்டவர்களையே எமது கட்சியின் வேட்பாளர்களாக இணைக்க உள்ளோம். முக்கியமாக நாம் கருத வேண்டியது பிழையான வழியில் நாம் பயணம் செய்தால் எமது பயணம் பிழையான குறிக்கோளையே அடையும் என்பதையே. ஆகவே தான் திசை மாறிய பயணங்கள் எமக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கருத்தை நாம் முன்வைத்துச் செல்கின்றோம்.

### ஒற்றுமை சுயநலத்துக்காக இருக்கக் கூடாது

ஒற்றுமை பிழையான இலக்கை நோக்கிப் போவதால் என்ன நன்மை கிடைக்கும் என்ற கேள்வியைமுன்னிறுத்தியுள்ளோம். மாறாக அதனால் ஏற்படக் கூடிய தீமைகளைச் சுட்டிக் காட்டி வருகின்றோம். மேலும் கூட்டாட்சி வேண்டாம், வடக்கு,கிழக்கு இணைப்பு வேண்டாம், பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்க ஆட்சேபணை இல்லை, எமக்குச் சுயாட்சி தேவையில்லை என்று கூறுவதற்கு எமக்குள் ஒற்றுமை ஏன்? அதைத்தான் எல்லாச் சிங்கள அரசுகளும் கூறி வருகின்றனவே? கூட்டாட்சி தரமாட்டோம், இணைப்புத் தரமாட்டோம், சுயாட்சி தரமாட்டோம், பௌத்தத்துக்கே முதலிடம் வேண்டும் என்றெல்லாம். அவர்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டோமானால் எமக்கென எதை நாம் வேண்டி நிற்கின்றோம்? எமக்குள் ஒற்றுமை இல்லாமலேயே இவற்றைத்தான் எல்லாச் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும் தருவதாக அல்லது தரமாட்டோம் என்று கூறி வருகின்றனவே!

ஆகவே ஒற்றுமையானது கொள்கை அடிப்படையில் இருக்க வேண்டும். மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடுவதாக இருக்க வேண்டும். சுயநலத்துக்காக இருக்கக் கூடாது. நாம் இவற்றை இவ்வாறு மாறுபட்ட விதத்தில் எடுத்துச் செல்வது தான் நாம் மற்றவர்களில் இருந்து வேற்றுமைப்பட்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஆசிரியருக்கான கடிதம்

# இப்படியொரு சுதந்திர நாள் தேவையா?

நாட்டில் நிலவிக்கொண்டிருக்கும் ஏராளம் பிரச்சினைகளில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது அரச இயந்திரம். பிரித்தானியரிடமிருந்து விடுபட்ட பின்பாக உள்நாட்டில் தலையெடுத்த பிரச்சினைகள் ஏராளம். ஆனால், அவை பற்றிய எவ்வித சிந்தனையும் இன்றி இந்த வருடமும் பிரித்தானியரிடமிருந்து விடுபட்ட நாள் கொண்டாடப்பட்டிருக்கிறது. உள்நாட்டு நிலமை தொடர்ந்து நீடித்தாலும் பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற்றதைக் கோலாகலமாகக் கொண்டாடும் மனோபாவம் இன்னமும் மாறுவதாக இல்லை. இது எவ்வளவு வெட்கக் கேடானது என்ற சிந்தனை கூட இல்லை. இந்த நிலையைக் கண்டு பிரித்தானியரும் நகைக்கலாம். இப்படியாகக் கொண்டாடி முடிக்கப்பட்ட சுதந்திரநாள் மக்களை எவ்வளவு அசௌகரியப்படுத்தியது என்பது பிறிதொரு விடயம். உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மீன் சந்தைத் தொகுதி சுதந்திர நாளை முன்னிட்டு மூடப்பட்டிருக்கவேண்டும். அந்தச் சந்தைத் தொகுதிக்கு அருகான பகுதியில் மாநகரசபை குப்பை சேகரிக்கும் பிரதேசத்துக் அருகில் சுதந்திர நாளன்றைய சந்தை கூடியது. தரையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அன்றைய வியாபாரம் நடந்தது. மக்களும் வியாபாரிகளும் இதனால் பெரும் சிரமப்பட்டதைக் கவனிக்க முடிந்தது. நாட்டின் சுதந்திர நாள் அடிமட்ட மக்களை இப்படியாகப் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது என்றால், அந்தச் சுதந்திரம் மக்களுக்குக் கிடைத்தால் என்ன? கிடைக்கா விட்டால்தான் என்ன? இப்படி ஏராளம் உதாரணங்கள் நாட்டில் விரவிக் கிடக்க, முகத்துக்குப் பூச்சுப் பூசி அழகுபடுத்துவது போல கொழும்பில் கோலகலமாகச் சுதந்திர நாள் கொண்டாடப்பட்டிருப்பது அர்த்தமற்றது.

***சுசிகரன் யாழ்ப்பாணம்.***

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## பணியாளர் தேவை

யாழில் இயங்கும் பிரபல குளிர்பானக் கம்பனிக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. சம்பளம் 50 000/= வரை கட்டுப் பணமாக மூன்று இலட்சம் (300,000/=) வங்கியில் வைப்பிலிட வேண்டும். விற்பனை மேற்பார்வையாளர்களும் வேண்டும். (CS 23149)(14.17)

**077 221 5167**


## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி வனஜாதேவி கதிரவேல்**
அவர்களின் மாமனார்
### கதிரவேலு கணேசலிங்கம்

அவர்கள் 01.02.2019 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**
(IN 9328) (14.17)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போதும் குளுக்கோஸ் என்று கேட்டகாமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Columbo12, T.P.077 727 7670 ®
அனைத்து பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்: ®
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

**The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.**

| | Work / Service Details | Nonrefundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Extension of Laundry Building First Floor | 500.00 | 200,000.00 | 91 | 9.95 | C 7 |
| 2. | Construction of NTS Lecture Hall Stage II | 500.00 | 200,000.00 | 91 | 9.96 | C 7 |

02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
04. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
05. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 08.02.2019 up to 26.02.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital. Jaffna
06. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 27.02.2019 late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman)
Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.
07.02.2019
(in.9329) (13.17)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி வாசுகி இளங்குமரன்**
அவர்களின் மாமனார்
### சின்னையா குற்றாலம்

அவர்கள் 04.02.2019 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**
(IN 9328) (14.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 06 . 02 . 1947



விண்ணக வாழ்வில் 07 . 02 . 2018

அமரர்
### லில்லி அக்னஸ் ஆசீர்வாதம்பிள்ளை

அம்மா !
எத்தனை கோடி உறவுகள் வந்தாலும் அவை
உங்கள் உறவுக்கு ஈடாகுமா ?
அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் விளை நிலமாய்
எமக்கு கருவறையில் உயிர் தந்த தெய்வமே !
உமது ஆத்மா இறைவனுள் சமாதானத்தில்
இளைப்பாற வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புகள், உறவுகள்

செல்வபுரம், முல்லைத்தீவு.
(CS 00470)(14.17)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி யோகம்மா இராஜகுமாரன்

தோற்றம் 03.10.1944 மறைவு 02.02.2014

திதி : 07.02.2019




எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே !
எம் குடும்ப விளக்கே !
நீங்கள் எம்மை விட்டுச்
சென்று ஆண்டுகள் ஐந்து
உருண்டோடி விட்டதே
நம்பமுடியவில்லை ?
உங்கள் இனிய அன்பான
கதைகள் எம் காதுகளில்
ஒலிக்கின்றது
உங்கள் சிரித்த முகம் அன்பான
பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது
எம்முடன் கூடவே
இருக்கின்றீர்கள் நீங்கள்
மறையவில்லை என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்

**என்றும் நினைவில்**
கணவன் - இராஜகுமாரன்
பிள்ளைகள் - இந்துமதி(கலா)கந்தசாமி குடும்பம்
றஞ்சிற் (ஜெனா) குடும்பம்
சுதர்சன் குடும்பம்.
(CS 23142) (14.17)

## மரணஅறிவித்தல்

### கந்தையா பத்மாவதி

(களவிற்பிட்டி, காரைநகர்)



தோற்றம் 04.11.1939 மறைவு 06.02.2019

களவிற்பிட்டி காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.DR. 02 ஆம் ஒழுங்கை, அரச ஊழியர் வீட்டுத் திட்டம், ஓமந்தை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மாவதி நேற்று (06.02.2019) புதன்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையா (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தவமணி, நடராஜா, சிவசுப்பிரமணியம், காமாட்சி, புஸ்பலீலாவதி மற்றும் திலகவதி(கனடா) ஆகியோரின் நேசமிகு சகோதரியும் தியாகலிங்கத்தின் (மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் - வவுனியா) அன்புத் தாயாரும் சாரதமணி (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்)இன் அன்பு மாமியாரும் லக் ஷனா(மாணவி மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), ஹம்சர்த்தனி(மாணவி குடிசார் பொறியியல் தொழில்நுட்பம் - மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் நேசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.DR, 2ஆம் ஒழுங்கை,
அரச ஊழியர் வீட்டுத்திட்டம்,
ஓமந்தை - வவுனியா.
(CS 00471) (14.17)

தகவல்:
க.தியாகலிங்கம் (மகன்)
(SPHI - VAVUNIYA)

**077 979 3500**

## பெறுகை அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
### சபை நிதி வேலைத்திட்டம் - 2018 (அபிவிருத்தி ஒதுக்கம்)

01. சபை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதிவாய்ந்த, பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி III இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி ஏ இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 07.02.2019ம் திகதியிலிருந்து 21.02.2019 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 15.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 22.02.2019ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்து ஒன்பது – 12.04.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02 /CF/40/2018 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் Street Lamp (Ordinary Monkey Style) | 1.003 Mn | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 11,000.00 | 10.05.2019 |
| 02 | NP/14/41(17)/02 /CF/28/2018 | சூரிய கல வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (Solar Street Light) | 0.392 Mn | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 4000.00 | 10.05.2019 |


11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 14.02.2019 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

**07.02.2019.**

(IN 9317)(14.17)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



### அமரர்
### பொன்னையா கணேஷ் (பாலா)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வழிகாட்டியாக திகழ்ந்த எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் பொன்னையா கணேஷ் (பாலா)
இறைபதம் எய்தியதை அறிந்து எமது இல்லத்தில் வந்து ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவியவர்களுக்கும், வைத்தியசாலையில் இருந்தபோது உதவிய வைத்தியர்களுக்கும், உதவியாளர்களுக்கும். அன்னாரின் பூதவுடல் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வேளையில் வருகை தந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி பாதாகைகள் காட்சிப்படுத்தியவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி, பத்திரிகை மூலம் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் சமயக் கிரியைகள் நடத்திய அந்தண பெரியவர்களுக்கும், கிரியை நடைபெற்றபோது பாமாலை கூடிய ஓதுவார்களுக்கும், இந்து சமய கலாசார முறைப்படி பாடையமைத்து தந்து இறுதி ஊர்வலத்தை நடத்திய இளைஞர் குழாமிற்கும், சபிண்டீகரண அந்தியேட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய அந்தண பெருமக்களுக்கும், கலந்துகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கலட்டி,**
**சங்குவேலி, மானிப்பாய்,**
**07.02.2019**

(cs 23146) (13.17)

**குடும்பத்தினர்**
**021 225 5124 / 077 374 9207**

**உதயன்**
**தொடர்புகளுக்கு**
**021 493 1111**
**advt@uthayan.com**

### விற்பனைக்கு

பிள்ளையார் இன் ஹோட்டலில் விசேடமாக சக்கரை நோயாளர்களுக்காக காலை 06.00 மணி தொடக்கம் சப்பாத்தி, குருமா போன்றவை (100/=) விற்பனைக்கு உண்டு. மேலதிக ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(CS 23148)(14.17)

**077 221 5167/021 222 2829**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விஞ்ஞானபீடம்

விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு – 2017 நிலை 1G, 2G, 3G
கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு – 2017 நிலை 1S, 2 S, 3 S, 4 S
விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு – 2017 நிலை 3M, 4M

**இரண்டாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு**

இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கை நெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) சித்திரை 2019 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2019 மாசி 15 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

04-02-2019 (in 9340) (13.17) **பதிவாளர்**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 07.02.2017அன்று
மறுமைக்குள் பிரவேசித்த

### பொன்றோஸ் மகாலிங்கம்

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக
நன்றி செலுத்தும் ஆராதனை
இன்று (07.02.2019) வியாழக்கிழமை
முற்பகல் 11.30 மணிக்கு அவரது
இல்லத்தில் நடைபெறும்.
இந்த நிகழ்விலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**மின்திரை வீதி,**
**குப்பிளான் தெற்கு, ஏழாலை.**

(CS 21608)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி கணேசன்

*(வேவி அக்கா)*



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டதிருமதிஅன்னலட்சுமிகணேசன் கடந்த (05.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கணேசனின் அன்பு மனைவியும் காஞ்சனமாலா, அருந்ததி, தமயந்தி, சகுந்தலா, சாவித்திரி, நளாயினி, ஆகியோரின் அன்புத் தாயாரும் வன்மிகலிங்கம், கிருஷ்ணபிள்ளை, திருவள்ளுவர், காலஞ்சென்ற சிவானந்தர் மற்றும் சச்சிதானந்தமூர்த்தி, நிரஞ்சன் ஆகியோரின் மாமியாரும் தனலட்சுமி, காலஞ்சென்ற தனேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரி, பரமேஸ் வரி, காலஞ்சென்ற ஜெயரட்ணம், மற்றும் பேரின்பநாயகி, காலஞ்சென்றகுணசேகரம்ஆகியோரின்அன்புசகோதரியும்கார்த்திகா, காண்டீபன், காஞ்சநேகா, மதுராங்கி, அபிராமி, கனுஜா, திவ்யா, நிதர்சினி, கஜவதனன், விதுசன், அர்ச்சனா, சந்தோஷ், நிறோஷ்ஆகியோரின்பேர்த்தியும்அபிஷேக், நயன்திஷா, மிகன், மதுரவாணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**131/4, இராசாவின் தோட்டம்**
**யாழ்ப்பாணம்**

(CS 23155/19/15/17)

**தகவல்: குடும்பத்தினர்**
**0212226537**
**கஜன் (பேரன்) - 0787192138**

# வழிகாட்டுவோம்





# விட்டுக் கொடுத்து நடந்தால் ஒற்றுமை வளரும்

ஒரு வீட்டில் இரண்டு பூனைகள் நண்பர்களாயிருந்தன. ஆனால் அவைகள் இரண்டும் ஒற்றுமையில்லாது அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தன. ஒரு நாள் அப்பூனைகளுக்கு ஒரு அப்பம் கிடைத்தது.

அவை இரண்டும் அதை சாப்பிட முனைந்த போது அதை சரிசமமாக பிரிப்பதில் அவைகளுக்குள் பிரச்சனை ஏற்பட்டது.

அதனால் பூனைகள் இரண்டும் யாரிடமாவது சென்று அப்பத்தை சரிசமமாக பங்கிட்டு தரச்சொல்லலாம் என எண்ணி வீட்டிற்கு வெளியே வந்தன. அப்போது ஒரு குரங்கு அங்கு வந்தது.

குரங்கிடம் அப்பத்தை கொடுத்து அதைச் சமமாக பிரித்துத் தரசம்படி கேட்டன. குரங்கும் மிக மகிழ்வுடன் அதற்கு சம்மதித்து ஒரு தராசு கொண்டு வந்து, அப்பத்தை இரண்டாக பித்து தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு அப்பத்துண்டை வைத்து நெறுத்தது.

அப்போது ஒரு அப்பத் துண்டு சிறிது பெரிதாக இருந்ததினால் அந்தத் துண்டு இருந்த தட்டு சற்று கீழே பதிந்தது. உடனே அந்தக் குரங்கு அந்த அப்பத் துண்டை எடுத்து ஒரு கடி கடித்து சாப்பிட்டு விட்டு மீதியை தட்டில் போட்டது .

இப்போது மற்றத் தட்டு கீழே தாழ்ந்தது. அப்போதும் அந்த தட்டில் இருந்த அப்பத்துண்டை எடுத்து சிறிது கடித்து விட்டு மீண்டும் போட்டது. இப்படியே மாறி மாறி தட்டுகள் தாழ... குரங்கும் மாறி மாறி அப்பத்துண்டுகளை கடித்துச் சாப்பிட்டது. அப்பம் குறைவதைக் கண்ட பூனைகள் இனி நீங்கள் அப்பத்தை பிரிக்க வேண்டாம் நாங்களே பார்த்துக்கொள்கிறோம்" என மீத முள்ள அப்பத்தைத் தரும்படி கேட்டன.

ஆனால் குரங்கோ, மீதமிருந்த அப்பம் 'நான் இது வரை செய்த வேலைக்கு கூலி' என்று சொல்லிவிட்டு அதையும் வாயில் போட்டுக்கொண்டது. பூனைகள் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக இருந்திருந்தால் அப்பத்தை சாப்பிட்டு இருக்கலாம். ஒற்றுமையில்லாததால் நஷ்டம் அடைந்தன. நாமும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பாக இருந்தால், உள்ளதையும் இழக்காமல் ஒற்றுமையுடனும் இருக்கலாம்.



# அழகாக எழுதுவோம்

ஓர் எழுத்து வடிவத்தை முறையான விதத்தில் எவ்வாறு உருவாக்க வேண்டுமோ. அந்த விதத்தில் உருவாக்குவதுதான் சரியான அணுகுமுறை. இதில் மூன்று முக்கிய விடயங்கள் உண்டு.

1. பென்சிலை லாகவமாகப் பிடிப்பது.
2. பென்சிலைக் காகிதத்தின் மீது மென்மையாக அழுத்துவது.
3. பென்சிலைக் காகிதத்தின்மீது சரியான திசையில் நகர்த்துவது.

இந்த மூன்று விடயங்களையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த மூன்று விடயங்களையும் கற்றுக்கொள்வதற்குப் பெயர்தான் முறையாக எழுதக் கற்றுக் கொள்வது அல்லது பயிற்சிசெய்வது.

ஆக, மாணவர்கள் முதலில் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து அன்றாட எழுத்து வேலையின் மூலம் அவர்கள் கையெழுத்து படிப்படியாக முன்னேற்றம் அடையும்.


கையெழுத்துப் பயிற்சி என்பது முறையாக எழுதிப் பழகுவது. முறையாக எழுதிப் பழகும்போது மாணவர்கள் சரியாக எழுதுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

ஆக, பயிற்சியின் பயன் கற்றுக்கொள்வது. எனவே, வெறுமனே ஒரே வாக்கியத்தை மீண்டும் மீண்டும் எழுதுவதைப் பயிற்சி என்று சொல்ல முடியாது. கையெழுத்துப் பயிற்சி என்பது இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.

1. பயிற்சி தரப்படும் விதம்
2. கையெழுத்துப் பயிற்சி ஏடு

முதலில் விரலால் மட்டும் எழுதுவது. உதாரணத்துக்கு, ஆள்காட்டி விரலால் மணல்மீது எழுதுவது சுலபமானது. அடுத்ததாக, எழுத்தின்மீது பென்சிலால் எழுதிப் பழகுவது நல்லது. இவற்றைத் தொடர்ந்து வெற்றிடமான இடத்தில் எழுத வேண்டும். இந்த மூன்றும் கையெழுத்துப் பயிற்சியின் முக்கியமான படிநிலைகள்.

எத்தகைய கையெழுத்துப் பயிற்சி ஏடுகளில் இந்த மூன்றுவிதமான பயிற்சிகளுக்கும் வாய்ப்பு கிடைக்கிறதோ, அவைதான் கையெழுத்துப் பயிற்சிக்குப் பொருத்தமானவை.



## தெரிந்து கொள்ள வேண்டிய தினங்கள்

| | |
|---|---|
| உலக தந்தையர் தினம்: | ஜூன் 18 |
| அன்னையர் தினம் : | பெப்ரவரி 22 |
| உலக பெண்கள் தினம்: | மார்ச் 8 |
| உலக ஏழைகள் தினம்- | ஜூன் 28 |
| உலக தாய்ப்பால் தினம் : | ஓகஸ்ட் 1 |
| உலக மக்கள் தினம்: | ஜூலை 11 |
| உலக நண்பர்கள் தினம் : | ஓகஸ்ட் 03 |
| உலக உணவு தினம் : | ஒக்ரோபர் 16 |
| உலக வறுமை ஒழிப்பு தினம் : | ஒக்ரோபர் 17 |
| உலக மனித உரிமைகள் தினம்: | டிசெம்பர் 10 |
| உலக பூமி தினம்: | ஏப்ரல் 22 |
| உலக ஆண்கள் தினம்: | நவம்பர் 19 |
| உலக மருத்துவர் தினம் : | ஜூலை 1 |
| உலக எழுத்தறிவு தினம்: | செப்ரெம்பர் 8 |
| உலக அமைதி தினம்: | செப்ரெம்பர் 21 |

# கொரகொல்லை தேசிய வனம்



கொரகொல்லை தேசிய வனம் (Horagolla National Park) என்பது இலங்கையில் உள்ள பெரிய தேசிய பூங்காக்களில் ஒன்று ஆகும். சிங்களத்தில் எண்ணை வகை மரம் ஒன்று "கொர" என்று அழைக்கப்படும்.

அந்தப் பகுதியில் அதிகமான "கொர" எனப் படும் எண்ணைத் தாவரங்கள் மிகுந்து இருப்பதால் அவ்விடம் கொரகொல்லை எனும் பெயர் பெற்றது.

அதிக உயிரியற் பல்வகைமை காணப்பட்டதால், இது ஆரம்பத்தில் செப்ரெம்பர் 5, 1973 அன்று வனவிலங்குகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது. பின்பு ஜூன் 24, 2004 அன்று கொரகொல்லை தேசிய வனமாக அறிவிக்கப்பட்டது. கொரகொல்லை மேல் மாகாணத்தில் உள்ள ஒரேயொரு நகரப் பூங்காவாகும். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் சொந்த இடமான வலவ்வைக்கு அருகில் கொரகொல்லை அமைந்துள்ளது. இப்பூங்காவானது கொழும்பிலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது கம்பகா மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கொரகொல்லை ஒரு தாழ்நில மழைக்காடாகும். இப்பூங்கா உக்கல் மண் அமைப்பைக் கொண்டதும் வருடம் முழுவதும் சூடான காலநிலையுடன் காணப்படும். இப்பகுதியில் எண்ணைத் தாவரம், கூந்தற்பனை, நெதுன், காட்டு மா, அரச மரம், ஏழிலைப்பாலை, வகுளம், ஈரப்பலா போன்ற தாவரங்கள் மிகுதியாகவுள்ளன.

கொரகொல்லை பறவைகளைப் பார்க்கும் இடமாகவும் கருதப்படுகின்றது. இங்கு 68 பறவை இனங்கள் உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.





## சிந்தனைக்கு...

நட - அதிர்வின்றி
பழகு- நாகரிகமாக
பேசு- பணிவாக
உண்ணு- அளவாக
சுவாசி- ஆழமாக
உடுத்து- அழகாக
செயற்படு- அச்சமின்றி
உழை- உண்மையாக
தூங்கு- அமைதியாக
சிந்தி- சுயமாக
நம்பு - சரியாக
திட்டமிடு- ம்ன்னதாக
ஈட்டு- நேர்மையாக
சேமி- சிறிதாவது
செலவிடு - யோசித்து
நேசி- பேதம் கடந்து
படி- முடிவின்றி
மரணி- பயமின்றி



## பெயர் மாற்றம்

வேதாந்தமடம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை சேர்ந்த **கந்தையா - சோதிலிங்கம்** ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து **இராசதுரை** எனப் பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன். என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**இராசதுரை**

(CS 00550)(14.17)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றும் **கனகரத்தினம் மயூரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி செல்வலட்சுமி கனகரத்தினம்**

அவர்களின் மறைவால் துயரற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம்,நல்லூர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேசசெயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் **கு.ஜெயகாந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னையா குற்றாலம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தரும் ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம், வேலணை.**

(CS 23153)(14.17)

## பொதுக்கூட்ட அறிவித்தல்

**தென்மராட்சி கலை மன்றம் - சாவகச்சேரி**

**காலம் : 20.02.2019 புதன்கிழமை பி.ப. 3.00 மணி**

**இடம் : கலைமன்ற மண்டபம்**

மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**செயலாளர்,**
**தென்மராட்சி கலைமன்றம், சாவகச்சேரி.**

(C 9345/15/17)

## மரண அறிவித்தல்

### சிவநேசம் பழனிநாதன்



காரைநகர் களபூமி தன்னையைப் பிறப்பிடமாகவும் Ausrtalia ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவநேசம் பழனிநாதன் 05.02.2019 ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பழனிநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வெற்றிவேல் கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான Dr.கனகரத்தினம், நடராசா, தவமணி மற்றும் சுந்தரலிங்கம், கனகலிங்கம், பரமேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்

காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், காசிநாதன், சண்முகநாதன் மற்றும் கைலாயநாதன், முத்துக்குமரன், தேவகனி, தியாகலிங்கம், சிவமணி, கனகசுந்தரம், ராசபூபதி, சிவக்கொழுந்து, இராசமணி ஆகியோர்களின் மைத்துனியும் சர்மிலாவின் அன்புத் தாயாரும் சுரேஷ்குமாரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வளுப்போடை, களபூமி, காரைநகர்.** (CS 23150) (14.17)

**தகவல்: சுந்தரலிங்கம் கனகசுந்தரம் குடும்பத்தினர்**

**0762307124**




Dialog
MEGA
அதிஷ்டம்

சந்ரிகா இரத்நாயக்க நாரம்மல

19வது கோடீஸ்வர வெற்றியாளர்

இதுவரை வெற்றியீட்டியுள்ள வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| கோடீஸ்வரர்கள் | 19 |
| 10 இலட்ச வெற்றியாளர்கள் | 172 |
| இலட்சாதிபதிகள் | 980 |

இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,961,538/-

TRC/CT/03/01/DTM/16-24

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசு குவியல்
#121# டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2018

Dialog
an axiata company
www.dialog.lk
எதிர்காலம் இன்றே.


## பங்குனி உத்தரப் பொங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் -2019

கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பெர்ங்கல் எதிர்வரும் 21.03.2019 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக்கூட்டம்நாளை(08.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்உயர்திருசுந்தரம்அருமைநாயகம்அவர்களின்தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் திணைக்களத்தலைவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது. குறித்த ஆலோசனை கூட்டத்தில் தாங்களும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**வீ.இராமநாதன்**
**தலைவர்**

**தி.பிரபாகரன்**
**செயலாளர்**

## யா/ சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், விளையாட்டு மைதான சுற்றுமதில் அமைப்பதற்கான கேள்விகோரல்

சுவர் அமைக்கப்படவேண்டிய அளவுகள்(வடக்கு, மேற்கு)

**அமைக்கப்படவேண்டிய சுவரின் நீளம்** 620 அடி

**அத்திபாரம்** நிலத்தின் கீழ் 1½', மேல் 2' அடி சுவரின் உயரம்

**கல்லின் பிரமாணம்** 4" அகலம் 8" உயரம் 6 வரி அமைத்தல்.

**தூண்கள்** 12 அடிக்கு ஒரு தூண் வீதம் அமைத்தல்.

இதற்கான கேள்விகோரல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் கோரப்படுகின்றது. இதற்கான கேள்விப் பத்திரங்கள் 12.02.2019 க்கு முன் பதிவுத் தபால் மூலம் செயலாளர், பழைய மாணவர் சங்கம், சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு** : உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுவர் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**மேற்கொண்டு விவரங்களுக்கு,**
**0212265179 (செயலாளர்),**
**0777319264 (தலைவர்)**

**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**
**சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.**

(2/15/17)CS 1679

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயல்களில் தைரிய குணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உற்பத்தி விற்பனை செழித்து கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மிதுனம்:** செயல்களில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற மாற்று உபாயம் உதவும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம்.

**கடகம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். சாந்த குணத்துடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும்.

**சிங்கம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரம் எதிர்பார்த்த அளவில் முன்னேற்றம் தரும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கன்னி:** நண்பரின் கூடுதல் அன்பும், பாராட்டும் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு பெறுவீர்கள். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** சொந்த பணியில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று உபாயம் பயன்படும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆறுதல் மனதில் நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இடையூறை உடனடியாக சரி செய்வீர்கள். தாராள பணவரவில் சேமிப்பு கூடும்.

**தனுசு:** சந்தோஷ நிகழ்வை நண்பரிடம் சொல்லி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** வெளி வட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப் படும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**கும்பம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். பணிகளில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** பிறர் மனம் அறிந்து பேசுவதால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு வேண்டும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.

## கடந்த தலைமுறையின் Whatsapp, facebook, twitter எல்லாமே இது தான்






## தனுஷ் படத்தில் நடிக்கிறார் கருணாஸ் மகன்

வெற்றிமாறன் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் இசையமைப்பில் நடிகர் தனுஷ் மற்றும் மஞ்சு வாரியர் நடிப்பில் உருவாகி வரும் 'அசுரன்' படத்தில் நடிகர் கருணாசின் மகன் கென் கருணாஸ் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். அசுரன் திரைப்படத்தில் தனுசுக்கு ஜோடியாக மலையாள நடிகை மஞ்சு வாரியர் நடிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு சில நாள்களுக்கு முன் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க நடிகரும், அரசியல் வாதி யுமான கருணாஸின் மகன் கென் கருணாஸ் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவர் ஏற்கனவே, நெடுஞ்சாலை, அழகு குட்டி செல்லம் உள்ளிட்ட திரைப்படங்க ளில் நடித்துள்ளார். தற்போது கென் கருணாஸ் 'அசுரன்' படத்தின் படப்பிடிப்பில் நடித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## #90sKidsRumors

1990ஆம் ஆண்டுகளில் குழந்தைகளாக இருந்தவர்களை தங்கள் பருவத்தில் தாங்கள் நம்பிய வதந்திகளை பொது வெளியில் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் இந்த ஹேஷ் டேக் உருவாக்கப்பட்டிருந்தது.

நகைச்சுவையோடு அவை பகிரப்பட்டாலும் எந்த அளவுக்கு மூட நம்பிக்கைகள் தவறான புரிதல்கள் இருந்தன என்பதை அவை வெளிக்காட்டின. அவற்றின் பகிரப்பட்டவை...

**Sukiir Dz**

ஒத்த மைனாவ பாத்துட்டா மூணு தென்னமரம் அல்லது வேப்பமரம் பாக்கணுமாமெண்டு.. #90sKidsRumors

**ஸேக்ரம்மி**

டேய் அவனுக்கு நாக்குல மச்சம் இருக்கு அவன் என்ன சொன்னாலும் அப்டியே நடந்துடும்டா... #90sKidsRumors

**செல்வம் அரசுப்பள்ளி ஆசிரியன்..**

பாரின் அப்படின்ன ஒரு தனி நாடுன்னு பேசிகிட்டு இருப்போம் #90sKidsRumors

**கருத்து கணேசன்**

பாம்ப அடிச்சு கொல்லாம விட்டுட்டா, நம்மல ஞாபகம் வச்சு ஒரு நாள் கொத்திடும் #90sKidsRumors

**முகிலன்™**

வடிச்ச தண்ணில பென்சில சீவி போட்டா அழி லப்பர் ஈசியா செய்யலாம். #90sKidsRumors

**எனக்கொரு டவுட்டு**

மூணு பேரு சேர்ந்து போனா விளங்காது. #90sKidsRumors

**Kiruththikan Yogarajah**

Under taker க்கு 7 உயிர் இருக்கு . #90s_kids_rumours

சந்திரிக்காண்ட ஒரு கண் ஆட்டுக்கண் . #90s_kids_rumours

நிலாவரக்கிணறுக்கை எலுமிச்சையை போட்டால் கீரிமலைல மிதக்கும். #90s_kids_rumours

கஷ்டப்பட்டு படிச்சு யூனிபோய் அங்க லவ் பண்ணி செட்டிலாகலாம் . #90s_kids_rumours

வர்ற அடுத்த ஜுனியர் பச்சிலையாவது சூப்பர் பிகர் வரும் #90s_kids_rumours

1st கிளாஸ் எடுத்தால் சம்பளம் மற்றவையை விட கூட #90s_kids_rumours

ரஜனி அரசியலுக்கு வருவார் . #90s_kids_rumours

அடுத்த பொங்கலுக்கு தீர்வு கிடைக்கும் . #90s_kids_rumours

**Nanban Rajesh**

ரெட்டை பழம் சாப்டா ரெட்டை குழந்தை பிறக்கும் #90s_Kids_rumours

**கருத்து கணேசன்**

பேனாவை gift கொடுத்தா நட்பு முறிஞ்சுடும் #90s_Kids_rumours

டீவி விளம்பரத்த பார்த்து ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா வாங்கி குடிச்சா வளர்ந்துடலாம்னு நம்புனது #90KidsRumors

உடைஞ்ச பல்ல நம்ம வீட்டு ஓடு மேல போட்டா திரும்ப பல்லு முளைக்கும் #90KidsRumors

தாழ்ப்பாளை ஆட்டாதே வீட்டுல சண்டை வரும்..! #90sKidsRumors

எறும்பை தின்னால் கண்ணு நல்லா தெரியும் #90sKidsRumors

யாருக்கும் குடுக்காம சாப்டா வயிறு வலிக்கும் #90sKidsRumors

## செருப்புடன் ஒரு 'செல்பி'



அண்மைய நாள்களாக முகப் புத்தகம், 'வாட்ஸ் அப்' போன்ற சமூக வலைதளங்களில் ஒரு சிறுவன் தன் கையில் செருப்பை மாட்டிக் கொண்டு அதை செல்போனாக பாவித்து செல்பி எடுக்க முயல பின்னால் ஐந்தாறு சிறுவர்கள் செல்பிக்கு போஸ் கொடுக்கும் ஒளிப்படம் ஒன்று படு வேகமாக வைரலாகி வருகிறது.

இந்த ஒளிப்படம் இப்போது பொலிவுட் பிரபலங்களால் அதிகம் பகிரப்பட்டு அதிகம் விவாதிக்கப்பட்டும் வருகிறது. பொலிவுட் படத் தயாரிப்பாளரும் பிரபல ஒளிப்படக்கர்ரருமான அடுல் கஸ்பேகர் தனது கீச்சகத்தில் இந்தப் படத்தைப் பகிர்ந்ததே அதற்குக் காரணம்.

அடுல் கஸ்பேகர், 'கிங்பிஷர்' கலண்டருக்கான மொடல்களைப் படம் பிடித்து பிரபலமானவர்.

இவர் தனது கீச்சகப் பக்கத்தில், "இந்தப் படத்தை நான் இங்கு பகிரக் காரணம் குழந்தைகளின்கள்ளம்கபடமற்றமகிழ்ச்சி. அதை என்னை நெகிழச் செய்து விட்டது. அந்த ஒளிப்படத்தில் அவர்கள் எந்த அளவு புன்னகையை வெளிப்படுத்தியிருந்தார்களோ அதே அளவு என்னையையும் புன்னகைக்கச் செய்துவிட்டார்கள். படத்தில் இருக்கும் அழகுக் குழந்தைகளையோ அல்லது அந்த ஒளிப்படத்தை எடுத்தவரையோ யாரேனும் அடையாளம் காட்ட முடியுமா? அவர்கள் அனைவருக்குமே தனித்தனியாக நான் ஏதாவது செய்ய விரும்புகிறேன்" என்று பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமிதாப் பச்சன், "மன்னிக்கவும். இந்தப் படம் போட்டோஷாப் செய்யப்பட்டிருக்கலாம்என நினைக்கிறேன்.

படத்தில் செருப்பை வைத்திருப்பவரின் கை அவரது உடல் அளவுடன் ஒத்துப்போவதாக இல்லை. அந்தச் சிறுவனின் இன்னொரு கையளவையும் இதையும் ஒப்பிட்டால் வித்தியாசமாக இருக்கிறது" எனப் பதிவிட்டார்.

அதேவேளையில் நடிகர் அனுபம் கேர், "ஒரு விஷயம் சிறப்பாக அமைய அதனை சிறப்பாக அணுக வேண்டும் என்ற வாழ்க்கை தத்துவத்தற்கான உதாரணம் இந்த ஒளிப்படம். அப்பாவதித்தனமும் அழகும் ததும்புகிறது" எனப் பதிவிட்டார்.

நடிகர் போமன் இராணியும் இந்தப் படத்தைப் பகிர்ந்து கருத்து தெரிவித்திருக்கிறார். அதில் அவர், "உங்கள் மகிழ்ச்சி நீங்கள் தேர்வு செய்வதைப் பொருத்தே அமைகிறது. இது அனைவருக்கும் பொதுவானது. இந்த செல்பி மற்ற எந்த செல்பியைவிடவும் அதிகமான விருப்பங்க ளைப் பெறத் தகுதியானது" எனப் பதிவிட்டிருக்கிறார்.

அந்த செல்பியில் சிறுவன் கையில் செல்போன் பிடித்தி ருக்கும் செருப்பும் கூட்டத்தில் போஸ் கொடுக்கும் மற்றொரு சிறுவன் ஒற்றைக் காலில் மாட்டியிருக்கும் செருப்பும் ஒரே மாதிரியாக இருப்பதால் இது உண்மையான படமே என்றும் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம், பெப்.7

யாழ்ப்பாணம் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பபாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. அரியநாயகம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றிய பிரித்தானியக் கிளையின் விளையாட்டு செயலாளரும் பழைய மாணவருமான ம.சிறிதாசன், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கானபரிசில்கள்சான்றிதழ்கள விருந்தினர்கள் வழங்கிவைத்தனர். (ஐ-159)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவனும்
பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணி
ஆற்றிவரும் முன்னணி
செயற்பாட்டாளருமான V.S.துரைராஜா
அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி**
**தனலட்சுமி பத்மநாதன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**பாடசாலை சமூகம், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.**


**ராசி அதிர்ஷ்டம்**

திகதி 06.02.2019 | வெற்றி வாரம் 2451 | வர்ணம் பச்சை

கன்னி | வெற்றி இலக்கங்கள் 21 24 49 50 | வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 95, 26, 452 /=

07.02.2019ம் திகதி வியாழக் கிழமை மண் நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3145 திகதி:2019.02.06 புதன்கிழமை

ஊதா

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 22 38 50 67 Z | போனஸ் இலக்கம்: 20 | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 62,810,915/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 518 | வர்ணம் : பச்சை | சீட்டிழுப்பு திகதி: 2019.02.06

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,531,645/-

வெற்றி இலக்கங்கள் 37 43 55 60 | ஆங்கில எழுத்து C

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**සංවර්ධන වාසනාව**

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 219

சீட்டிழுப்பு திகதி 06.02.2019 நீலம்

ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 17 42 64 | விதி எண் 07

எதிர்வரும் சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12, 480, 856/=

2019.02.09ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


அபிவிருத்தி லொத்தர் சபை

www.dlb.lk


## மரண அறிவித்தல்

### சுப்பையா குருக்கள் பாலசுப்பிரமணிய ஐயர்

***(இலங்கை நாயகி மனோன்மணி அம்மன் ஆலய உரிமையாளரும் ஆதீன கர்த்தாவும்)***



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குருக்கள் பாலசுப்பிரமணிய ஐயர் நேற்று (06.02.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2019) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மாத்தனை கந்தசாமி கோவில். சம்பியன் லேன். கொக்குவில்.** தகவல்: **குடும்பத்தினர். 077 797 2731**

(CS 23699/15/17)


## வீடு விற்பனைக்கு

G.P.S விளையாட்டரங்க வீதி கல்வியங்காடு பகுதியில் வீட்டுடன் கூடிய நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளவும்
077 044 6839, 075 464 8902

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வருவனவற்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை

- **லிகிதர்** (கணினி அறிவுடையோர்)
- **கணக்கு உதவியாளர்** (Account Assistant)

076 159 8890

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு மேசன், கூலியாள்கள் உடன் தேவை.

யாழ்வன் கட்டடப்பொருள் வாணிபம்
இல.168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
076 826 4859

## நாகர்கோயில் மணல் தேவை

வண்ணார்பண்ணை
K.K.S. வீதியில் வீடு கட்டுமான
பூச்சுவேலைக்காக
அவசரமாக நாகர்கோயில்
மணல் தேவை.

071 190 7445


## மரண அறிவித்தல்

### திருமதி புவனராணி இராசையா



பிறப்பு 08.02.1939 இறப்பு 04.02.2019

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை (New York) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனராணி இராசையா கடந்த (04.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் வாசுகி, உமையாள், நிரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பார்த்தீபன், வேணுகோபால், குமுதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் தெய்வேந்திரன், புவனேந்திரன், காலஞ்சென்ற விமலேந்திரன் மற்றும் புஷ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வைஷ்ணவி, ஜானவி, கிர்சாந், கீதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் New Hyde Park Funer Home New York (USA) இல் இடம்பெற்று தகனக்கிரியைக்காக All Souls Chapel and Crematory, New York, USA எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**வாசுகி, உமையாள், நிரஞ்சன்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 04 . 1959



இறப்பு 06 . 02 . 2019

### திருமதி யோகராணி மகாலிங்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் வீதியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி மகாலிங்கம் நேற்று (06.02.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராசா தையலம்மா (சாவகச்சேரி முருகன் மருந்துக்கடை) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் மகாலிங்கத்தின் (இளைப்பாறிய குடியேற்ற உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் அனுஷலா (யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்), அனுசூதனன் (பொதுச் சுகாதார பரிசோதகர் - கோப்பாய்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோபி (ஆசிரியர் - யாழ். கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயம்), வனஜா (ஆசிரியர் - யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஷாலினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுகிர்தராணி (கனடா), உதயகுமாரன், செல்வராணி, இராஜகுமாரன் (ஜேர்மன்), லலிதாராணி, நவகுமாரன், வனிதாராணி, விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லிபின், சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2019) வியாழக்கிழமை 60/3, விநாயகர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 958 7309,**
**077 589 0063**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23698/15/17)

## பாடசாலை நிகழ்வுகள்



யாழ்ப்பாணம் கைதடி நவில்ட் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை அதிபர் சாள்ஸ் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்துகொண்டார். சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய இல்லங்களுக்கிடைய இடம்பெற்ற போட்டியில் பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. மாணவர்களுக்கிடையே 100 மீற்றர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், கயிறு இழுத்தல், அணிவகுப்புக் கண்காட்சி இடம்பெற்றன. (ஐ)



## செயற்பட்டுமகிழ்வோம் விளையாட்டுநிகழ்வுகள்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலையின் செயற்பட்டுமகிழ்வோம் விளையாட்டுநிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணருமான மருத்துவர் செ.செல்வகணேஷ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டல் அதிகாரி அ.மனோரஞ்சிதம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9,131)

கொடிகாமம், பெப். 07

யாழ்ப்பாணம் மிருசுவில் றோமன்கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலையின் இல்லமெய்வன்மைப்போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினராக மிருசுவில் பங்குத்தந்தை அருட்பணி எக்ஸ்.டபிள்யு.ஜேம்ஸ், மதிப்புறு விருந்தினர்களாக உசன் மாதுளன் பதிப்பக உரிமையாளர் இ.ஜொபின்சன், பாடசாலையின் பழைய மாணவி இ.மேரிஆன்கிறெஸ், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். நீக்கிலார் (சிவப்பு), அன் ரனி (பச்சை) ஆகிய இரண்டு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றன. (ஐ-159)





### விளையாட்டில் ஆர்வம் இல்லாத

# பொருத்தமற்ற மாணவ சமூகம் மெல்ல மெல்ல உருவாகின்றது!

*உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ராஜசீலன் இவ்வாறு சுட்டிக் காட்டுகின்றார்*

யாழ்ப்பாணம், பெப். 07

இன்றைய காலங்களில் விளையாட்டில் ஆர்வமில்லாத பொருத்தமற்ற மாணவர் சமூகமொன்று உருவாகி வருகின்றன. இது தவறானது. பிற்போக்கானது என்று தெரிவித்தார் வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.ராஜசீலன்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த முதலாம் திகதி குறித்த கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.ராஜசீலன் கலந்து கொண்டார். நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று விளையாட்டில் ஆர்வம் இல்லாத மாணவ சமூகமொன்று படிப்படியாக உருவாகிவருகிறது. ஒருபுறம் வடக்குமாகாணம் தேசியத்திலும் தேசியத்தைத் தாண்டியும் பல்வேறு சாதனைகளைப் படைத்துவரும் நிலையில் மறுமுனையில் இவ்வாறான பொருத்தமில்லாத, பிற்போக்கான மாணவ சமூகமொன்று உருவாகுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலை மாற்றம்பெற வேண்டும். மாணவர்கள் கல்விக்கு நிகராக விளையாட்டிலும் சாதிக்க வேண்டும்.

அப்போதுதான் நாம் தேசியத்தில் ஆறாவது நிலை என்ற எமது அடைவைத் தக்கவைக்கவும் அதைத்தாண்டிச்சாதிக்கவும் முடியும்.

கடந்த காலங்களை விட தற்போதைய மாணவர்களின் வேகம் அதிகரித்துள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் தடகளத் தொடர்களின்போது நடுவர் பணிகளில் கமராக்களின் உதவி தவிர்க்க முடியாததாக மாறப்போகின்றது. இது ஒரு நல்ல அறிகுறியே.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வடமாகாணத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றது. பற்றிக்ஸின் இந்தப் பங்களிப்பு இனிவரும் காலங்களிலும் வடக்குமாகாணத்துக்குத் தொடர்ந்து தேவை. உங்களின் (சென். பற்றிக்ஸின்) இன்றைய மெய்வன்மைப் போட்டிகள் வேறொரு தரத்தில் இருந்தன. குறிப்பாக அணி நடை தேசியத் தரத்தில் உள்ளது. இந்த நிலை இவ்வாறே தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். இன்னும் மெருகேற வேண்டும் - என்றார். (ம)

# யாழ்ப்பாணக் கல்லூரி தனித்துவமான ஒன்று!

*மெச்சுகிறார் தவிசாளர் நடனேந்திரன்*



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முன்னொரு காலத்தில் பல பட்டதாரிகளை உருவாக்கிய கல்வி நிறுவனமாகும். தொன்மையான வரலாற்றைக் கொண்ட இந்தக் கல்லூரி அன்று முதல் இன்று வரை விளையாட்டையும் கல்வியையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போல் பாதுகாத்துவருகின்றது என்று தெரிவித்தார் அந்தக் கல்லூரியின் பழைய மாணவனும், வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளருமான த.நடனேந்திரன். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அதிபர் டி.எஸ்.சொலண் தலைமையில் கல்லூரியின் பிக்னல் மைதானத்தில் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி தனித்துவமான ஒன்று. கல்விக்கும், விளையாட்டுக்கும் இந்தக்கல்லூரி தனித்துவமாகச் செயற்பட்டது. இன்று மாணவர்கள் விளையாட்டில் ஆர்வம்கொள்வது குறைந்துவிட்டது. கல்லூரிக்காலங்களில் மாணவர்கள் கல்வியுடன் பல்வேறு விளையாட்டுக்களிலும் ஈடுபடவேண்டும். யாழ்ப்பாணக் கல்லூரியில் டானியல் புவர் நூலகம், கூடைப்பந்து, வலைப்பந்து, ரெனிஸ், கிரிக்கெட், ஹொக்கி, கால்பந்து, பூப்பந்தாட்டம், கரம், செஸ் என எண்ணற்ற வளங்கள் நிறைந்துள்ளன. இந்த வளங்களை கடந்த கால மாணவர்கள் சிறப்புடன் பயன்படுத்தியுள்ளனர். இன்றைய மாணவர்களும், எதிர்காலச்சந்ததிகளும் இந்தவளங்களைபயன்படுத்தவேண்டும் - என்றார். இந்தப் போட்டியில் ஏபிரகாம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ம-50)

பண்டாரவன்னியன் மகாவித்தியாலய இல்லமெய்வன்மைதிறனாய்வுப்போட்டி கடந்த வியாழக்கிழமை 1.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் வி.பன்னீர்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துக்கலாநிதி சி.சிவமோகன், சிறப்புவிருந்தினர்களாக அபிவிருத்திபிரதிக் கல்விப்பணிப்பாளர் சா.பிரதீவானந், கோட்டக்கல்வி அதிகாரி த.பங்கயற்செல்வன், ஒட்டுசுட்டான் மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் பா.சசிகரன் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர் திருமதி க.சதிரமாலா, பிரதேசசபை உறுப்பினர் நா.வன்னியசிங்கம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-500)





முல்லைத்தீவு மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் ம.செல்வராஜா தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன், கிராம அலுவலர் திருமதி. டி.யூட்வசிகரன், மதிப்புறு விருந்தினர்களாக அ.கிரிஸ்ரி, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான வே.அருள்தாஸ், சி.சுரேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## மன்னார்...

வித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் நேற்றுப் புதன்கிழமை 139ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டன. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த வளாகத்தில் இருந்து 312 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவற்றில் 297 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 26 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையன என அடையாளம் காணப்பட்டுள்ளன. பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் ஆய்வு அறிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை 8ஆம் திகதி வெளிவரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இறுதிப் போரின்போது கொல்லப்பட்டவர்களின் எலும்புகளாக அவை இருக்கலாம். அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்களின் எலும்புக்கூடுகளாகவும் அவை இருக்கலாம் என்று ஊகங்களில் தகவல் வெளிவந்திருந்த நிலையில் தமிழர் தாயகத்தின் எதிர்பார்ப்பு நாளை வெளிவரும் அறிக்கை மீது குவிந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், குறித்த கார்பன் பரிசோதனை அறிக்கை வெளிவரும்போது தமிழர் தரப்புக்கு பெரும் அதிர்ச்சி காத்துள்ளது என்று முன்னதாகத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-56)

## தீர்வுத்திட்ட...

கள் 'குழப்பியடிக்கவில்லை. போலி முகத்தைக் காட்டிய அவர்களே குழப்பியடித்தனர். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தமது ஆட்சியின்போது, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சி தோல்வி கண்டதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முதன்மைக் காரணம் என்று முன்னாள் அரச தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச குற்றம்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'உதயன்' பத்திரிகை வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த தரப்பினரே பேச்சுகளைப் புறக்கணித்தார்கள். இது நாட்டு மக்களுக்கும் பன்னாட்டுச்சமூகத்துக்கும் தெரிந்த விடயம். ஆனால், இப்போது மகிந்த புதுக்கதை சொல்கின்றார். உண்மையை அவர் பேச வேண்டும். தம் மீதான பிழைகளை அவர் மறைக்க முற்படக்கூடாது. மகிந்த அரசுடன் அனைத்துச் சுற்றுப் பேச்சுகளிலும் நாங்கள் பங்குபற்றினோம். எங்களின் தீர்வுத்திட்ட யோசனைகளுக்குப் பதிலளிக்கப் பயந்தே பேச்சு மேசைக்கு வராமல் மகிந்த தரப்பினர் பின்வாங்கினார்கள்.

எனினும், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் மகிந்த ராஜபக்ச, எந்தவேளையிலும் எங்களுடன் பேச முடியும். தமிழ் மக்களின் எதிர்காலத் தீர்வுக்காக, எத்தகைய தரப்பினருடனும் பேச நாம் தயாராக இருக்கின்றோம். அந்தப் பேச்சுக்கள் நேர்மையானதாக இருக்க வேண்டும். காலத்தை வீண்டிக்கும் வகையில் இருக்கக்கூடாது -என்றார். (ம-ஒ.5.22)

## இரண்டு...

க்கழு. போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு ஆதரவாக மனித உரிமை அமைப்புக்கள் செயற்படுகின்றன என்றும் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை குற்றவாளிகளை ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை விதிகள் தொடர்பான விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகள் பலவற்றிலும் மிகப்பெரும் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்படுவது நடைமுறையில் உள்ளது. இந்தியா, அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் மின்சாரக் கதிரை மற்றும் ஊசி மூலமான சாவுத் தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. எமது நாட்டிலும் சமய ரீதியான பண்படுத்தல் இடம்பெறுகின்றபோதும், சட்ட திட்டங்கள் மூலமான பண்படுத்தல் அவசியமாகிறது. அதற்காகவே நாம் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட பெரிய குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கும் தீர்மானத்தை எடுத்தோம்.

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலை எனது பார்வைக்காக அனுப்புமாறு நான் கேட்டிருந்தேன். எனினும் அந்தப் பட்டியல் கால தாமதமாகியே எனக்குக் கிடைத்தது. அதன் ஆவணங்களை சில காலங்கள் தேடமுடியாமல் போனது. உண்மையில் கடந்த ஜனவரி மாதமே சாவுத்தண்டனைக் கைதிகள் தொடர்பான உண்மையான அறிக்கை எனது கையில் கிடைத்தது. சாவுத் தண்டனை தொடர்பில் நான் பகிரங்கமாக அறிவித்த பின்னர் மௌனமாகவிருந்த கைதிகளும் மேன்முறையீடு செய்வதற்கு முற்பட்டுள்ளனர்.

சாவுத் தண்டனை பட்டியலில் பாகிஸ்தான் குடிமகன் ஒருவரும் உள்ளார். அவரை பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கு அந்த நாட்டுடன் நாம் பேச்சு நடத்தியபோதும் அவர் அங்கு செல்வதற்கு மறுப்புத் தெரிவிக்கிறார். ஏனெனில் எமது நாட்டைப் போலல்லாது அந்த நாட்டில் சாவுத் தண்டனை உடனடியாக நிறைவேற்றப்படும் என்ற அச்சத்திலேயே அவர் அவ்வாறு கூறுகிறார்.

எவர் எதிர்த்தாலும் சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதில் நான் பின்நிற்கப்போவதில்லை. இரண்டு மாத காலத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றம் நடைமுறைக்கு வரும். இதுபோன்ற விடயங்களில் பாதாள உலகக் குழு, போதைவஸ்து வர்த்தகர்களுக்கு ஆதரவாக மனித உரிமை அமைப்புக்கள் செயற்படுகின்றன. மனித உரிமை அமைப்புக்கள் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட போதைப் பொருள் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கக் கூடாது. என்னால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவே எனது செயற்பாடுகளுக்குத் தடையாக உள்ளது.

உண்மையில் நாட்டில் முக்கியமான போதைப் பொருள் மையமாக வெலிக்கடை சிறைச்சாலை உள்ளது. அங்குதான் அதற்கான அனைத்து யுக்திகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கான உரிய வேலைத்திட்டமொன்றை நாம் நீதியமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள போதைப்பொருள் குற்றவாளிகளை பூசா சிறைச்சாலைக்கு அனுப்பி வெலிக்கடை சிறைச்சாலையை மறுசீரமைக்கத் தீர்மானித்துள்ளோம். வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து பூசா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களுக்கு அங்கு சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. மனித உரிமை அமைப்புக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. அதேபோன்று அங்குனுகொலபலச சிறைச்சாலைக்கும் நாம் அதிரடிப்படை பாதுகாப்பை வழங்கியபோது அங்கு கடமையிலிருந்த அதிரடிப்படை அதிகாரிகளிடம் மனித உரிமை அமைப்புக்கள் கேள்வி கேட்டுள்ளன.

நாம் மேற்கொள்ளும் பல்வேறு நாட்டுக்குத் தேவையான நல்ல விடயங்களுக்கு மனித உரிமை அமைப்புக்கள் தடையாகவுள்ளன. மாலியில் இறந்துபோன எமது படைச் சிப்பாய்கள் தொடர்பிலும் எமது மனித உரிமை அமைப்புக்கள் மிக மோசமாக செயற்பட்டன - என்றார். (ம-22)

## வடக்கு...

கையாளர் ஜுவான் பப்லோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு நிலமைகளை ஆராய்ந்த சிறப்பு அறிக்கையாளர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்காகச் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நுண்டகடன் திட்டம் வறுமையைப் போக்குவதற்காக கொண்டுவரப்பட்டது. ஆனால் எந்த தொரு முன்னேற்றமும் இலங்கையில் தெரியவில்லை. நுண்கடன் திட்டம், வறுமையிலுள்ள பெண்களை குறிவைத்தே மேற்கொள்ளப்படுகின்றது. அதிலும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களையே நுண்டகடன் நிறுவனங்கள் அதிகம் நாடுகின்றன. அந்த மக்களுக்கு கடனை வழங்கும் நிறுவனங்கள் அதனை மீளச் செலுத்த முடியாத நிலமை உருவாகும்போதும் மிகவும் தவறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. நுண்கடன் நிறுவன ஊழியர்கள் கடனைச் செலுத்தாத பெண்களிடம், பாலியல் வன்முறையில் ஈடுபட முனைகின்றனர் என எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த விடயத்தில் இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அந்த மக்கள் நுண்கடன்களை மீள் செலுத்துவதை நிறுத்த உதவ வேண்டும், என்று ஜுவான் பப்லோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-ஒ.5)

## 57 ஆயிரம்...

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 57 ஆயிரத்துக்கும் அதிகமாகும். ஆண்டுதோறும் வேலையற்ற பட்டதாரிகளின் வீதம் அதிகரித்துச் செல்வது அரசின் இயலாமையைக் காட்டுகின்றது. 10 இலட்சம் தொழில்வாய்ப்புக்கள் தொடர்பாக தேர்தல் மேடைகளில் வாக்குறுதிகளை வழங்கிய கட்சி, அரச அதிகாரத்தை வகிக்கும்போது 60 ஆயிரம் வரையிலான பட்டதாரிகள் தொழிலற்று இருப்பது பேரழிவு.

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்குவதாக தெரிவித்து, சுமார் 50 ஆயிரம் பட்டதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க கடந்த வருடம் நடவடிக்கை எடுத்தபோதும் அவர்களில் 5 ஆயிரத்து நூறுபேருக்கே தொழில் வழங்கப்பட்டுள்ளது என்று அரசின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. பலருக்கு அநீதி இழைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே 2012ஆம் ஆண்டில் 48 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ள எமது அரசு பின்பற்றிய முறைமையை முன்மாதிரியாகக்கொண்டு பட்டதாரிகளை வகைப்படுத்தாமல் வேலையற்ற அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பொருத்தமான தொழிலை அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (ம-22)

## விவாதத்தில்...

வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது. கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவில்லை.

கூட்டு அரசு அமைக்கும் தீர்மானம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. தீர்மானம் மீதான விவாதத்தில் பங்கேற்பதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. இதனை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் உதயனுக்கு உறுதிப்படுத்தினார். தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இன்று காலையே முடிவு செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாகவும், தீர்மானம் மீது வாக்கெடுப்பு இன்று நடத்தப்பட்டால் அதன்போது கூட்டமைப்பு நடுநிலமை வகிக்கும் என்று கூறப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (ம-ஒ.5.22)

## கூட்டு...

கொழும்பு, பெப். 7

கூட்டு அரசு அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இன்றைய விவாதத்தை தொடர்ந்து தீர்மானம் மீது வாக்கெடுப்பு இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆளும் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு ஆதரவாக கட்டாயம் வாக்களிக்கவேண்டும் என்று, ஆளும் கட்சியின் தலைமைக் கொரடா கயந்த கருணாதிலக எழுத்;துமூலம் அறிவித்துள்ளார். (ம-ஒ.5)

## வானூர்தித்தள...

வைக்கவுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இரு நாள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வருகை தரவுள்ளார்.

14ஆம் திகதி காலை நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து ஜெட்விங் விருந்தினர் விடுதியில் மதியபோசனத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

கைதடி மற்றும் நாவற்குழியில் அமைக்கப்பட்ட பாலங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளார். அதனைத் தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாக அலகு ஒன்றை திறந்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வின் பின்னர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாக அலகைத் திறந்து வைக்கவுள்ளார். இதன் பின்பு மயிலிட்டி கலைமகள் பாடசாலைக்கு அடிக்கல் நடும் நிகழ்விலும், அதற்கு அருகில் வீடமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார். இந்த நிகழ்வுகள் முடிவடைந்த பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்விலும் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

அன்றைய தினம் இரவு யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறையினரைச் சந்தித்து அவர் கலந்துரையாடவுள்ளார். மறுநாள் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செல்லவுள்ளார். (ம-ஒ.5)

## வவுனியாவில்...

எடுத்துள்ளார். தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், நகரசபையின் உப தவிசாளர் சு.குமாரசாமி மற்றும் பெற்றோர் சார்பில் சிலரும் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், நகரசபை தவிசாளரின் ஆலோசகர் இ.சுஜீந்திரா உட்பட பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஞாயிற்றுக்கிழமைகளில் உயர்தர வகுப்புகள், சாதாரணதர வகுப்புகள், புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வகுப்புகள் தவிர்ந்த வேறெந்த வகுப்புகளும் நடத்தப்படக்கூடாது எனவும், வவுனியா நகர சபைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் நகரசபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், மாலை 7.30 மணிக்கு பின்னர் தனியார் கல்வி நிலையங்களில் எவ்வகையான வகுப்புகளும் நடத்தப்படக் கூடாது என்றும் காற்றோட்ட வசதிகள் மலசலகூடங்கள் உட்பட சுகாதார வசதிகள் போதுமான வகையில் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மார்ச் முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ம-110)

## கன்னியாஸ்திரிகளுக்கு...

தனது உரையின் ஒரு பகுதியிலேயே இதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

'கத்தோலிக்க திருச்சபையில் கன்னியாஸ்திரிகள் சிலர் பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்று வத்திக்கான் அறிகிறது. சில பாதிரியார்களும் ஆயர்களும் கூட இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை எல்லா இடத்திலும் இடக்கிறது. ஆனால் சில பகுதிகளில் உள்ள சில திருச்சபைகளில் அதிகமாக இருக்கிறது. பாலியல் முறைப்பாடுகளால் வத்திக்கான் ஏராளமான பாதிரியார்களை இடைநீக்கம் செய்துள்ளது. இதுதொடர்பான பிரச்சினைகளைச் சரிசெய்ய வத்திக்கான் நீண்ட நாள்களாகப் பணியாற்றி வருகிறது. வத்திக்கான் இந்தப் பிரச்சினையைக் கண்டுகொள்ளவில்லை என்று மற்றவர்கள் கூறுவதை நான் விரும்பவில்லை. அதில் உண்மையில்லை. இதில் நாங்கள் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பது மட்டும் உண்மை. அதைத்தான் நாங்களும் விரும்புகிறோம்' என்று பாப்பரசர் பிரான்சிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## படைப்புழுவின்...

சிடப்பட்டுள்ளன. விவசாய அமைச்சால் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இந்த கலண்டர்கள் அச்சிடப்பட்டுள்ளன. அவை பொதுமக்களிடத்தில் விரைவில் விநியோகிக்கப்படவும் உள்ளன. (ம-7)

## கால்பந்தாட்டம்
# யூனியன் வி.க. வெற்றி



யாழ்ப்பாணம், பெப். 7
வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுகழக அணி வெற்றி பெற்றது.
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி, வளர்மதி விளையாட்டுக்கழக அணியுடன் மோதியது.
ஆட்டத்தின் முதலாவது பாதியில் 19ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வீரர் மதி பதிவு செய்தார். மேலதிக கோல்கள் எதுவும் பதிவாகாத நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானது. 10ஆவது நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணிக்குதண்டனைஉதை கிடைத்தது.
அதனை வாய்ப்பாக பயன்படுத்தி தம்பா கோலைப் பதிவு செய்தார். பதிலுக்கு 15ஆவது நிமிடத்தில் வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கான கோலை மனோ பதிவு செய்தார். ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி சார்பில் சயந்தன் மூன்றாவது கோலைப் பதிவு செய்தார்.
இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)




## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்தில் 3ஆம் இடம்


யாழ்ப்பாணம், பெப். 7
மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய ரீதியான கூடைப்பந்தாட்ட போட்டித் தொடரில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.
மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை மட்டக்களப்பு சென். ஜோசப் கல்லூரி அணி மோதியது. 41:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

## அண்ணா யூத் அசத்தல்

கிளிநொச்சி, பெப். 7
பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் இருபாலருக்குமான கபடித் தொடரில் அண்ணா யூத் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா யூத் விளை யாட்டுக் கழக அணி மோதியது. 52:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் அண்ணா யூத் விளையாட் டுக் கழக அணி வெற்றி பெற்றது.
பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் இரணைதீவு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா யூத் விளையாட்டுக்கழக அணி மோதியது. 18:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் அண்ணா யூத் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

### தாச்சித் தொடர் வானவில் வி.க. வெற்றி

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக் நடத்தப்படும் தாச்சிப் போட்டித்தொடரில்வானவில்விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் கடந்த முந்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வானவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுவ சக்தி விளை யாட்டுக் கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்ட முடிவில் வானவில் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் வானவில் விளையாட்டுக் கழக 1:0 என்று மீண்டும் முன்னிலை பெற்றது. இறுதியில் வானவில் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஒ.23)



# தாவடி காளி அம்பாள் வி.க. தாச்சிப் போட்டியில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் .7
100ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் தாச்சிப் போட்டித்தொடரில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதற்பாதி ஆட்ட முடிவில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.
ஆட்டநேர நிறைவில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஒ.23)

# தாச்சிப் போட்டியில் கைதடி துர்க்கா வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 7
அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் தாச்சிப் போட்டித் தொடரில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின் ஒளியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்ட முடிவில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது. ஆட்ட நேரநிறைவில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஒ.23)

## தாச்சிப் போட்டியில் நவாலி தென்றல் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 7
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் தாச்சிப் போட்டித்தொடரில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்ட முடிவில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற புள்ளி அடிப்படையில் பெற்றது.
இரண்டாம்பாதி ஆட்ட முடிவில் காந்திஜி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது. ஆட்டநேரநிறைவில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஒ.23)



## ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் மலையாளபுரம் புதிய பாரதி வெற்றி

கிளிநொச்சி, பெப். 7
கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த சனிக்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது. மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதவன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற செற் கணக்கில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. (ஒ.23)

# நியூசிலாந்து அபார வெற்றி



இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. ஒரு நாள் போட்டித் தொடரை 4:1 என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரையும் கைப் பற்றியிருந்தது. நேற்றை தினம் வெலிங்டனில் இரு அணிகளுக்குமான முதலாவது ரி-20 ஆட்டம் இடம்பெற்றது. இதில் நியூசிலாந்து அணி 80 ஓட்டங்களால் இந்திய அணியை தோற்கடித்து அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் நியூ சிலாந்து அணியைத் துடுப் பெடுத்தாடப் பணித்தது. நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லூயிஸ் செய்பார்ட், முன்றோ களமிறங்கினர். அணி 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முன்றோ 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் அணித் தலைவர் வில்லியம்சன். அதிகபட்சமாக லூயிஸ் செய்பார்ட் 84 ஓட்டங்களையும், வில்லியம்சன் 34 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்கைளைப் பெற்றது.

பந்து வீச்சில் ஹார்திக் பாண்டியா 2 இலக்குகளையும், புவனேஸ்குமார், மொகமட், குணால் பாண்டியா, சாஹல் தலா ஓர் இலக்கையும் கைப் பற்றியிருந்தனர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோகித், தவான் களமிறங்கினர். அணி 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அணித் தலைவர் ரோகித் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இந்திய அணியின் வீரர்கள் எவரும் 40 ஓட்டங்களைத் தாண்டியிருக்கவில்லை. அதிகபட்சமாக டோனி 39 ஓட்டங்களையும், தவான் 29 ஓட்டங்களையும், சங்கர் 27 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்று படுதோல்வியடைந்தது.

பந்து வீச்சில் சவூத்தி 3 இலக்குகளையும், வ்றிகுசன், சற்னர், சோட்கி தலா இரண்டு இலக்குகளையும், மிற்சல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணி வீரர் லூயிஸ் செய்பார்ட் தெரிவு செய்யப்பட்டார்.



## ஐ.சி.சியால் ஹோல்டருக்கு தடை விதிப்பு

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் கோல்டருக்கு பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்தது. இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தூமதமாகப் பந்து வீசியது. இதையடுத்து அந்த அணியின் தலைவர் என்ற அடிப்படையில் ஓர் ஆட்டத்தில் விளையாட கோல்டருக்குத் தடை விதிக்கப்பட்டது. (ம)

## நியூசி. பெண்கள் அணியும் வெற்றி

இந்திய பெண்கள் அணிக்கும் நியூசிலாந்து பெண்கள் அணிக்கும் இடையிலான போட்டிகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று இடம் பெற்ற முதலாவது ரி-20 போட்டியில் நியூசிலாந்து பெண்கள் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.


நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய பெண்கள் அணி முதலில் நியூசிலாந்து பெண்கள் அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதனடிப்படையில் களமிறங்கிய நியூசிலாந்து பெண்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என பதிலுக்குக் களமிறங்கிய இந்திய பெண்கள் அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையாகக் களமிறங்கிய மந்தனா சிறப்பாக துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அணி 19.1பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



## சங்கக்கார -மகேல யோசனைகள் ஏற்பு

*ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு*





இலங்கை கிரிக்கெட் சபைக்கு அதிகாரிகளைத்தெரிவுசெய்வது குறைக்கப்படுவதற்காக முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜெயவர்தன முன்வைத்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மற்றும் இலங்கை ஊடகவியலாளர்களுக்கு அமைச்சரினால் ஆஸ்திரேலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராப்போசன நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் ஹரின் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள யாப்பினை மே மாதத்துக்கு முன்னர் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அது தொடர்பான சீர்திருத்தங்கள் தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு அதிகாரிகளைத் தெரிவு செய்வதை குறைப்பதற்காக சங்கா - மஹேல முன்வைத்த யோசனையை இந்த வாரத்துக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க தான் தயாராக இருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட்டை சீர்குலைக்கும் மாபியாவுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## ஹோல்டரின் தடைக்கு வோர்னர், வாகன் எதிர்ப்பு

மேற்கிந்தியத்தீவுகள் அணி தாமதமாக பந்து வீசியதற்காக மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் ஹோல்டருக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. இதற்கு ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணி வீரர்கள் வோர்னர், வாகன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் தாமதமாகப் பந்து வீசினர் என்ற குற்றச்சாட்டில் அணித் தலைவர் ஹோல்டருக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபையால் இறுதிப் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட் டது.


பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்த நடவடிக்கைக்கு ஆஸ்திரேலிய முன்னாள் பிரபல சுழற்பந்து வீச்சாளர் வோர்னர், இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவர் வாகன் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது;

இந்த டெஸ்ட் போட்டி 3 நாட்களிலேயே முடிந்துவிட்டது. ஹோல்டரை தடை செய்து இருப்பது முட்டாள்தனமான முடிவாகும். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்த முடிவை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்ய வேண்டும். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்த முடிவு ஆச்சரியம் அளிக்கும் வகையில் இருக்கிறது- என்றார் வோர்னர்.

"246 பந்துப்பரிமாற்றங்களில்டெஸ்ட் போட்டி முடிவடைந்து விட்டது. தாமதமான பந்து வீச்சு என்ற காரணத்துக்காக ஹோல்டருக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பது துரதிர்ஷ்டமானது"- என்றார் வாகன்.





## தென்னாபிரிக்காவுக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி தோல்வியடைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள், மூன்று ரி-20 ஆட்டங்களில் விளையாடவுள்ளது. எதிர் வரும் 13ஆம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகின்றது.

இந்த நிலையில், இலங்கை அணியின் பெயர் விவரங்களை இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. திமுத் கருணாரத்னே (அணித் தலைவர்) டிக்வெல, திரிமன்னே, சில்வா, மென்ரிஸ், குசல் பெரேரா, சிறிவரனடா, டீ சில்வா, ஒஷாடா பெர்னாண்டோ, அஞ்சலோ பெரேரா, லக்மல், ரஜித, பெர்னான்டோ, கருணாரத்னே, சிராஷ், சண்டகன், எம்புலுடினியா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணியில் மூன்று அறிமுக வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணி பெரிய மாற்றங்களுடன் தென்னாபிரிக்காவில் தடம் பதிக்கின்றது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சிறப்பாக செயற்படாததால் சந்திமல் நீக்கப்பட்டுள்ளார்.

## பொருளியற் கல்லூரியின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவனங்களான பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம் - சுன்னாகம், BARATHY கல்வி நிறுவனம் - சித்தங்கேணி ஆகிய கல்வி நிறுவனங்களின் வரலாற்றுப் பாட பிரபல ஆசிரியரும் யா/ மகாஜனாக் கல்லூரியின் பிரதி அதிபருமான **K.சுதன்** அவர்களின் பாசமிகு தந்தையார் **சின்னப்பொடி குமாரு** அவர்களின் இறப்புச் செய்திகேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறுவன இயக்குநர், ஆசிரியர்கள்**
**பணியாளர்கள், மாணவர்கள்**
**பொருளியற் கல்லூரி**
(யாழ்ப்பாணம் - சுன்னாகம்)
BARATHY **கல்வி நிறுவனம்**
(சித்தங்கேணி)



மடவளை மதீனா கல்லூரியில் இருந்து இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு தெரிவான மொஹமட் ஷிராஸ்ூக்கு மடவளை YMMA இன் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்த நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் கண்டி மாநகருக்கு பெருமை சேர்த்த ஷிராஸுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் அன்பளிப்பையும் வழங்கினார்.


### வாடகைக்கு

நல்லூரில் வீடு 2 அறைகள் AC, தளபாடங்கள், குசினி, Hall, Gas என்பவற்றுடன் கிழமை, மாத வாடகைக்கு உண்டு. வெளியிலிருந்து வருபவர்களுக்கு ஏற்றது. -0777887360

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org


021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

### அதிபர் சேவை தரம் - 3 இறுதி கருத்தரங்கு

வியாழன் (7/2)
வெள்ளி (8/2)
பி.ப. 3.00 ⟶ 7.00
சனி 9.00 ⟶ 3.00
மூன்று நாள்களுக்குமான கட்டணம் 600/= மூன்று வினாத்தாள்களுக்குமான எதிர்பார்க்கைகள்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)


## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 02 . 1943 — இறப்பு 06 . 02 . 2019


## திருமதி தனலட்சுமி பத்மநாதன்

யாழ். கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி பத்மநாதன் நேற்று (06.02.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுந்தரம் - கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் செல்லப்பா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் (Mechanical Foreman) அன்பு மனைவியும் நயனவதியின் (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆசிரியர்) அருமைத் தாயாரும் குகராஜ்ஜின் (ஓய்வுபெற்ற தாதியர் - யாழ். போதனா வைத்தியசாலை) அன்பு மாமியாரும் காயத்ரியின் (உணவு விஞ்ஞானமும் போசாக்கும் வயம்ப பல்கலைக்கழகம்) அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் சிவகாமி, சிவபாக்கியம் (கனடா), துரைராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவசுப்பிரமணியம், விஸ்வலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான பூங்கோதை, கனகலிங்கம் மற்றும் பாலசிங்கம், கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.3.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: நயனவதி (மகள்) 077 5589147**
**V.S.துரைராஜா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் - கனடா)**



# நடாலுக்கு நிச்சயதார்த்தம்

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் தன் காதலி மேரி பெரேலோவுடன் நிச்சய தார்த்தத்தில் இணைந்து கொண்டார்.

32 வயதான ரபேல் நடால், மேரி பெரேலோ என்ற பெண்ணை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக காதலித்து வருகிறார். முக்கியமான போட்டிகளின்போது மைதானத்துக்குச் சென்று நடாலை உற்சாகப்படுத்தும் பெரேலோ, நடாலின் ரென்னிஸ் பயிற்சிக் கல்லூரியையும் கவனித்து வருகிறார்.

இந்த நிலையில், 8 மாதத்துக்கு முன்பே மேரி பெரேலோவுக்கு மோதிரம் அணிவித்து திருமண நிச்சய தார்த்தம் செய்து கொண்டு விட்டதாக வும், அந்தத் தகவலை இதுவரை இரகசியமாக வைத்திருந்ததாகவும் நடால் தற்போது கூறியுள்ளார். இந்த ஆண்டின் இறுதியில் இருவரும் திருமணம் செய்ய வுள்ளதாகவும் தெரிவித்தார் நடால்.

### 2019 உலகக் கிண்ணம்

## சர்பிராஸ்தான் அணித் தலைவர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிரடி

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது தென்னாபிரிக்க வீரர் பெலுக்வாயோவுக்கு எதிராக இனவெறியை தூண்டும் வகையில் சர்பிராஸ் அகமது பேசியதால் பன்னாட்டு கிரிக்கெட் சபை நான்கு போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது.

இதனால் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் அணியின் அணித் தலைவராக சர்பிராஸ் அகமது செயல்படுவாரா? என்ற கேள்வி எழுந்தது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவித்ததாவது;

"உலகக் கிண்ணத்துக்கான அணியில் சர்பிராஸ் அகமதும் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளார். அவர் சிறந்த தலைவர், சிறந்த வீரர் என்பதை நிரூபித்துள் ளார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் டிராபியை அவர் தலைமையில்தான் பாகிஸ்தான் வென்றது. ரி-20 தரவரிசையிலும் பாகிஸ்தான் முதல் இடத்தை பிடித்துள்ளது. உலகக் கிண்ணத் தொடருக்குப் பின் மறுமதிப்பீடு செய்யும் வரை அவர்தான் அணித் தலைவராக இருப்பார்"- என்றார்.

## பாண்டியா, ராகுல் மீது வழக்குப் பதிவு

இந்திய அணி வீரர்கள் ஹார்திக் பாண்டியா, கே.எல். ராகுல் ஆகியோர் பெண்கள் குறித்த சர்ச்சையில் சிக்கி இந்தியக் கிரிக்கெட் சபையால் தடை விதிக்கப்பட்டு, தற்போது இருவரும் தடை நீக்கம் செய்யப்பட்டு அணியில் இடம்பெற்றுள்ளனர். இந்த நிலையில் இவர்கள் இருவர் மீதும் ஜோக்பூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யதுள்ளனர்.



## யுவென்டாஸ் வெளியே

இத்தாலியக் கழகங்களுக்கு இடையிலான கோப்பா இத்தாலியா கால்பந்தாட்டத் தொடரில் இருந்து வெளியேறியது யுவென்டாஸ்.

அத்லாண்டா அணிக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 0:3 என்ற அடிப்படையில் தோல்வியடைந்தே தொடரில் இருந்து வெளியேறியது யுவென்டாஸ். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.